1557-9

മംഗളോദയം

പുസ്തകം 11 ലക്കം 1-6

1937 Aug – 1938 JAN

3L
N211, N27 SN
N37. 11. 1-6.
186961

557 77

REGD No. M

சைவமுந் தமிழுந் த[illegible]



# சிவநேசன்

செந்தமிழ்த்

## திங்கள் வெளியீடு.

ஆண்டு, கக { திருத்தென்சடித்திட்டை. ஈசுவர-ஆவணிமுதல் தை 3உ-வரை 1937-ஆகஸ்டு 16-முதல் 1938-ஜெனவரி 16 } திங்கள் க-முதல் கூ

ஆசிரியர்:—

ராம. கு. ராம. இராமசாமி செட்டியார்,

திட்டை. (S. I. R.)

எண். உள்ளுறை.


1. சிவபெருமானும் செந்தமிழும் ...
2. சிவஞான சுவாமிகள்
3. அழையா விருந்து ... 9
4. கிறிஸ்தவதேவாலயங்களிலும் சட்டம் செய்யலாமே
5. கோபுரங்களும் விமானங்களும் ... 17
6. பழத்திற் சிறந்தது எது? ... 20
7. சரீரம் ஐவகைப்படும் ... 21
8. திருத்தொண்டத் தொகையின் மகிமை ... 23
9. ஐய வினா? ... 24
10. ஹிந்தி மொழிக் கண்டனம் ... 25
11. "நாட்டின் முன்னேற்றம் அந்நாட்டு மொழியை வளர்ப்பதே" 29
12. சுவாதீனம் அல்லது வெற்றிக்கொடி ... 31
13. இன்னும் அறியேன்! ... 33
14. கூத்தரும் குலோத்துங்கனும் ... 3
15. தமிழ் வழக்கு ... 42
16. விடை ஊரும் விமலன் ... 45
17. மாதர் மறுமணம் ... 51
18. திருக்கைலாயகிரி யாத்திரை ... 53
19. செந்தமிழ்த் தென்றல் ... 57
20. தமிழின் வளர்ச்சி ... 59
21. மதிப்புரை மஞ்சரி ... 61
22. தமிழ் தழைத்திடுக ... 68
23. சிவநேசனுக்கு வாழ்த்தும், மதிப்புரையும் ... 69
24. நமது சிவநேசன் ... 72
25. ஸ்ரீ காசியாத்திரை விளக்கம் ... (1—12)
26. சுலோக பஞ்சக விஷயம் ... (117—12


---

557

21 JAN 1938

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்
சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

திருத்தென்குடித்திட்டை.


| | | |
|---|---|---|
| ஆண்டு கக. | ஈசுவர—ஆவணிமுதல் தை 3உ-வரை<br>1937-ஆகஸ்டு 16-முதல்<br>1938-ஜனவரி 16 | திங்கள்<br>க-முதல் சூ |


உடையாளுன் றனடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும் அருளைப் புரியாய் பொன்னம் பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## சிவபெருமானும், செந்தமிழும்.

முழுமுதலாகிய சிவபெருமான் வடமொழியைப் பாணினிக்கும் தென்மொழியை அகத்தியருக்கும் வகுத்தருளினாரென்பது நூல் வழக்கு. அங்ஙனமே, "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்" என்பனவாதிய வாக்கியங்களால் திருமுறைகளும் போற்றுகின்றன. செந்தமிழ்ப் பாட்டில் விருப்புடையராய்ச் சுந்தரமூர்த்தி நாயனாரைத் தோழமைகொண்டு "சொற்றமிழ் பாடுகென்றார் தூமறைபாடும் வாயார்" என்று பெரிய புராணத்தில் தெய்வப் புலமைச் சேக்கிழார் கூறியுள்ளார். செந்தமிழ்ப் பாவுக்குகந்த சிவபெருமான் செய்த திருவிளையாடல்கள் அளப்பில. அவற்றுள், யாமறிந்த அளவில் ஒருவாறு ஈண்டுச் சிறிது விளக்குவாம்.

ஆளுடைய பிள்ளையாருக்கு, ஞானப்பாலருளினார்; பொற்றாளம், பொற்சின்னம், முத்துப்பந்தர், முத்துச்சிவிகை, உலவாக்கிழியாதிய பொற்புறவளித்தார்; கூன்பாண்டியன் வெப்புநோய் நீங்கி நெடுமாறனாக, மறைக்கதவம் திருக்காப்புச்செய்ய, அமணரை அனல்வாதம் புனல்வாதம் செய்து வெல்ல, என்பைப் பெண்ணுருவாக்க, கொல்லிமழவன் மகளாரின் முயலகனோய்தீர்க்க, திருநல்லூர்ப் பெருமணத்தில் சீரடியாரோடு சிற்சோதியிற் கலக்கத் திருவருள் செய்தார்.

ஆளுடையவரசர்க்கு, சூலைநோயருளி அவரை யாட்கொண்டார்; அடுகரி வணங்கவருளினார். அவர்க்கு நீற்றறையைக்குளிர்வித்தார்; ஆலமேயமுதமாக்குவித்தார்; கல்லினை மிதக்குந்தோணியாக்கினார். அவரால் அப்பூதியடிகளின் மகனுக்கு அரவின்விடம் நீங்கச்செய்தார்; மறைக்கதவந் திறக்கச்செய்தார். அவருக்குப் பொதிசோறும் தண்ணீரும் கொடுத்துப்பசி தாகந்தீர்த்தார்; திருக்கைலையிலிருந்த கோலத்தைத் திருவையாற்றில் தெரிசிப்பித்தருளினார். அவர் தம் திருமுடியில் திருவடி சூட்டியருளினார். அவர்க்குத் திருப்புகலூரிற் சிவானந்தப்பேறு தந்தருளினார்.

ஆளுடைய நம்பிகட்கு, விருத்தவேதியராய் வந்து அடிமையோலைகாட்டிக் கடிமணந் தடுத்து அவரை யாட்கொண்டார். அவர்க்கு "பித்தா" என்றும் "தில்லைவாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்றும் முதலடிகளையருளி அவரைச் சொற்றமிழ் பாடுவித்தார்; தோழமைகொண்டார். அவர்பொருட்டாகப் பரவையாருடலை மாற்ற இரவெலாம் தூதுசென்றருளினார்; குண்டையூர்க்கிழார்க்கு நெல்மலைகளைக் கொடுத்தார். அவைகளைச் சிவபூதங்களைக்கொண்டு திருவாரூரெங்கும் நிறையும்படிசெய்தார். அவர்க்குத் திருமுதுகுன்றத்திற் பொன் கொடுத்தார்; அதை அங்குமணிமுத்தாநதியிலிட்டுத் திருவாரூரிற் கமலாலயத்தில் எடுத்துக்கொள்ளச் செய்தார். சங்கிலியாரின் பொருட்டு மகிழின்கீழமர்ந்து அவரைச் சபதம் செய்வித்தார்; அவர் சபதம் வழுவினமையின் அவரைக் குருடாக்குவித்து அவர்க்கு ஊன்றுகோல் கொடுத்தார்; மீள ஒற்றைக்கண் கொடுத்தார்; மற்றைக்கண்ணுங் கொடுத்தார். காவிரியின்வெள்ளத்தைமேற்பக்கம் பளிங்குமலைபோல நிற்பித்துச் சேரமான்பெருமானாயனாரோடு அவர் திருவையாறுசென்று தெரிசிக்கச்செய்தார். முதலையுண்ட மதலையை யழைப்பிக்கச்செய்தார்; செங்கற்களைச் செம்பொன்னாக்குவித்தார்; தண்ணீர்ப்பந்தரமைத்து அவர்க்கும் திருத்தொண்டர்கட்கும் பொதிசோறும் தண்ணீரும் அளித்தருளினார். அவர்தம் உடம்படும்பிணியிடர் கெடுத்தருளினார். அவரைச் சேரமான் பெருமானாயனாரோடு திருக்கைலைக்கு வெள்ளைவாரணத்தெழுந்தருள்வித்தார்.

ஆளுடைய அடிகட்கு, குருமூர்த்தமாகக் குருந்தமரத்துநிழலிலமர்ந்து ஐந்தெழுத்தோதியருளி அவர்தம்திருப்பணியை யுவந்தருளினார்; நரிகளைக் குதிரைகளாக்கினார்; மதுரைமூதூரிற் குதிரைச்சேவகனாகிக் குதிரை மாறினர்; பிட்டுக்கு மண்சுமந்தனர்; பிரம்பாலடிபட்டனர்; அவரால் புத்தர்களை வாதில் வெல்வித்து, ஊமைப்பெண்ணைப் பேசுவித்து, அவர் பாடிய திருவாசகம், திருக்கோவையாரைத் தமது திருக்கரத்தில் எடு மெழுத்தாணியுங்கொண்டெழுதி

18696



'அடியார்க்கெளிய சிற்றம்பலவன்' எனக் கைசாத்திட்டனர். அவரைச்சிற்சபையிற்சிவசோதியில் இரண்டறக்கலப்பித்தருளினர்.

சேக்கிழார் பெருமானார்க்கு 'உலகெலாம்' என்னும் முதலை உலகமுய்ய வருளிச் செய்தனர்.

இன்னும் எம்பெருமான் 'நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி நற்கனகக் கிழிதருமிக் கருளி'னர்; ஆதியுலாவுக்குச் சிரமசைத்தனர்; 'கல்லாடத்திற் கலந்தினிதருளி'னர்; சங்கப்புலவர் தலைவராயினர்; சங்கப்பலகை தந்தருளினர், சங்கத்தார் கலகந்தீர்த்தனர்; நக்கீரற்குபதேசித்தனர்; பாணபத்திரருக்குப் பலகையிட்டனர்; அவர் அடிமை என விறகு சுமந்துவிற்றனர். சேரமான்பாற் செல அவர்க்குத் திருமுகமுதவினர். காரைக்காலம்மைக்கு மாங்கனியுதவினர். அம்மையார் தலையால் நடந்து கயிலைக்கு வந்ததும் 'வருமிவள் நம்மைப்பேணும் அம்மைகாண் உமையே' என்றனர். இடைக்காடரின் பிணக்கைத்தீர்த்தனர். இனையதிருவிளையாடல்கள் எண்ணிலவாகும்.

அதியற்புத அருட்செயல்களாகிய இவையெலாம் சந்தனப் பொதியச்செந்தமிழ் முனிவன் சந்ததம் போற்றும் சிவபெருமான்; செந்தமிழ்ப் பாண்டித்திருநாடாண்ட சிவபெருமான்; செந்தமிழ்த் தெய்வமாகிய செவ்வேளைப் பயந்த சிவபெருமான் செந்தமிழை விரும்பியன்றோசெய்தார்? சிவபரம்பொருள் விரும்பியசெந்தமிழின் பெருமை செப்புதற்கரிய சிறப்புடையதன்றோ?

தேசமுய்யத் திருவவதரித்த திவ்யமூர்த்திகளாகிய சைவசமய பரமாசாரியர்களும்,பிறரும்மொழிந்தசெந்தமிழ்த்திருமுறைகளையும், பிரபந்தங்களையும் சிவபெருமானுவந்து திருவிளையாடல் புரிந்தார்; திருவருள்சுரந்தார்என்றால்அவ்வரிய பெருமிதமுடையதிருமுறைகளையும், பிரபந்தங்களையும், நந்தமிழ் நாட்டினர் நயந்து போற்றிச் செந்தமிழ்ச்செல்வர்களாகச்சிறந்து சிவபெருமானாரின் திருவருளுக்காளாவதன்றோ மனிதராகத் தமிழ் நாட்டிற் பிறந்த மக்கள் பெறும் பேறு.

பொல்லாப்பிள்ளையார் நம்பியாண்டார் நம்பிக்கு அருளித் தில்லையம்பதியிற் கிடைக்கச் செய்த மூவர் தேவாரத் திருமுறைகளை, இறைவர் திருக்கரங்கொண்டெழுதிய திருவாசகத்தை, திருக்கோவையாரை,திருமாளிகைத்தேவராதியோரருளியதிருவிசைப்பாக்களை, சேந்தனாருளிய திருப்பல்லாண்டை, திருமூல நாயனாருளிய திருமந்திரத்தை, சந்தானசாரியர்கள் அருளிய சித்தாந்த சாத்திரங்களை, ஆழ்வாராதியோரருளிய திருவாய்மொழியாதியதிவ்யப் பிரபந்தங்களை, கச்சியப்பசிவாசாரியாருளிய கந்தபுராணத்தை, சேக்கிழார் பெருமான் அருளியபெரியபுராணத்தை, பரஞ்சோதியாருளிய திரு

18696

விளையாடற் புராணத்தை, கம்பநாட்டாழ்வாரியற்றிய இராமாயண காவியத்தை, வில்லிபுத்தூராழ்வாரியற்றிய, நல்லாபிள்ளை யியற்றிய மகாபாரதத்தை, அருணகிரிநாதரும் அருந்தமிழ் நூற் சீரும் கருணை பெறவோதியகவின்மாலைகளை, முற்றத்துறந்த பட்டினத்தடிகள், தாயுமானார், குமரகுருபர சுவாமிகள், சிவப்பிரகாச சுவாமிகள் முதலானவர்களின் அருணூல்களை, 'நாலுமிரண்டுஞ் சொல்லுக்குறுதி' என்று வழங்குவதாயுள்ள, நாலடியார் நானூறு வெண்பாக்களை, திருவள்ளுவதேவரருளிய 1330 குறட்பாக்களை, ஔவைப்பிராட்டியாரருளிய நூல்களை, இராமலிங்கசுவாமிகள், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களாகிய பெரியார் பலரருளிய தோத்திரப்பாக்களை, பிரபந்தங்களை, ஆறுமுகநாவலரவர்களும் பிறருமாக்கிய வசன நூல்களை; பாவேந்தர்பலரும் சங்கப்புலவர்களும் பாராட்டி வளர்த்த பண்டைத்தமிழை, சேரசோழபாண்டியரென்னும் முடியுடைமூவேந்தரும்படிமிசைப்போற்றியபண்புடைத் தமிழை, 'பண் சுமந்த பாடற் பரிசுபடைத்தருளும் பெண் சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்' அருளிய பெருமைசேர் தமிழை, 'முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைக்கும் முருகவேளுவக்கும் அரிய நற்றமிழை, திருமகள் மார்பனும் கலைமகள் கேள்வனும் செவிக்கினியதாய்க்கொளுஞ்சீரிய தமிழை, நம்மை என்றும் வாழ்விக்கும் தாய்மொழியாகிய உயர்தனித்தமிழை, தளராது போற்றி வளர்த்துத் தமிழ்வளந்துய்த்து இன்புறுதலேசாலவும் நன்றாகச் சிவபரஞ்சுடரின் திருவுளத்திற்குப் பொருத்தமாகவிருக்கும்.

தமிழ்மக்களாகிய சைவர்கள் தம்மக்கட்கு, தம்மூர், தெரு, உடைமைகட்கு, செந்தமிழ் மொழியிலேயே சைவமங்கலப் பேர்களைச் சூட்டாமல், இட்டாமல், பிறமொழிகளிற் பிறபேர்களைச் சூட்டியும் இட்டியும் முறை பிறழ்தல் தரமன்று.

செந்தமிழ் மக்களே! சைவமக்களே!! செந்தமிழைப் போற்றுங்கள்; செஞ்சடைக் கடவுளை செவ்வே வழிபாடு செய்யுங்கள்!

கற்பொழுக்கம்பிறழாதிருத்தல் பெண்களுக்குமாத்திரம் உரிய கடமையன்று; ஆண்களுக்குமுரியதே. ஆங்கிலம், இந்தி ஆகிய பிறமொழி மோகங்கொண்டு கற்பொழுக்கந் தவறி நமது உடைமையாகிய செந்தமிழையும் செந்தமிழ்த் தெய்வமாகிய சிவமூர்த்தியையும் இகழ்ந்து நலத்தை யிழந்துவிடலாகாது. நம்நாட்டில் வந்து புகுவோரெல்லாம் தத்தம் பாஷைகளைத் தத்தம் சமயக் கோட்பாடுகளை நம் நாட்டில் நிலைநிறுத்தப்பாடுபடுகின்றனர். நாம்பிடித்தவர்க்கெல்லாம் பெண்டாட்டியாகாமல், நம் கற்பொழுக்கத்தினைக் காப்பாற்றச் செந்தமிழையே போற்றிச் சிவபெருமானாரின் திருவருளைப் பெறுவோமாக.

---

உ

# சிவஞான சுவாமிகள்.

(இது, ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் திருமயிலை வெள்ளீச்சரத்தில் 26-4-37-ல் நிகழ்த்திய சொற்பொழிவின் குறிப்பு. திரு, கே. த. கிருஷ்ணசாமிமுதலியாரவர்களால் எழுதப்பெற்றது)

இவ்வுலகத்தில் நாம் பிறந்தது எதற்காக? நம்கருவிகரணங்களைக் கொண்டு நாம் செய்யவேண்டுவனவற்றைச் செய்தற்காகவேயாம். கருவிகரணங்களைத் தொழிற்படுத்தினாற்றான் நமக்கு மேன்மை உண்டு; இல்லையேல் உலகில் கிடைத்தற்கரிய மானிடப் பிறவியைப் பெற்றும் நாம் தாழ்வையே யடைவோம். இதுபற்றியே 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்ற பழமொழியும் எழுந்தது. திருவள்ளுவரும்,

'முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்'

என்று கூறினார்.

ஒவ்வொருவரும் படுக்கையை விட்டு எழுந்தவுடனே செய்யுங்காரியங்கள் மூன்று வகைப்படும். ஒன்று, நாம் இறைவனடி யடைந்த பெரியோர்களை நினைத்தல்வேண்டும். இரண்டாவது, அன்று நமக்கு நேர உள்ள இடையூறுகளை நினைத்தல்வேண்டும். மூன்றாவது, இவ்விடையூறுகளை நினைத்தலோடு மட்டும் நிறுத்தாது அவைகளைப் போக்க ஆண்டவனை நோக்கி அழுதல்வேண்டும். இவையே நாம் தினந்தோறும் எழுந்தவுடனே செய்யவேண்டிய கருமங்கள். முன் காலத்தில், தினந்தோறும் எழுந்தவுடனே பஞ்சாங்கம் பார்க்கும் வழக்கம் இருந்துவந்தது. இதற்குத் தினசுத்தி எனப்படும். அன்றைய தினத்தை மட்டும் கவனித்துவிட்டுப் பஞ்சாங்கத்தைக் கீழே வைத்துவிடும் வழக்கம் பெரும்பான்மையோரிடம் இல்லை; பக்கத்து நாட்கள் மீதும் நாட்டம் செல்லும். அவ்வாறு பஞ்சாங்கத்தைப் பார்க்கும் பழக்கத்தை நாம் விட்டுவிட்டதால் பெரியோர்களைப் பற்றி மறந்துவிட்டோம்.

இன்று சித்திரைத்திங்கள் ஆயில்யநாள்; இது, சிவஞான சுவாமிகள் திருநாள். சென்னைக்குச் சுமார் இருபது மைல் தூரத்திலுள்ள தொட்டிக்கலைக் கிராமத்தில் அவர்தம் திருவுருவம் அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்தம் பெயரிலிருந்தே நமக்கு வேண்டியதைப் பெறுகிறோம். நமக்கு வேண்டுவதென்ன? சிவஞானம். அவர்கள் சிவஞான சுவாமிகள்; சிவஞானத்தைத் தமக்குச் சொத்தாக உடையவர்கள். நாம் கேட்கும்தோறும் கேட்கும்தோறும் அவர் இல்லையென்னாது அவர்தம் உடைமையைப் பகிர்ந்து நமக்குக் கொடுப்பார். அப்பாகத்தைப் பெற நாம் முந்திக்கொள்வோமாக. சிவஞானமே எல்லா மதங்களின் முடிவாகும். இதை நமது சுவாமிகள்,

காஞ்சிப்புராணத்தில் வெகு அழகாகக் கூறியிருக்கிறார்கள். 'விலகிவீழ் அருவித்தாரை...ஏகமாய்க் கூடுந்தோற்றம்' என்ற செய்யுளில் ஒவ்வொரு மதத்தின் உண்மையும் வேகவதிநதியில் வந்து சேரும் ஒவ்வோர் அருவித் தாரைக்கும் உவமையாகக் கூறப்படுகிறது. அவ்வருவித்தாரைகள் திரண்டு வேகவதி என்னும் நதியாதல்போல், இவ்வுண்மைகளெல்லாம் திரண்ட முடிபு சிவஞானமாகிறது. அத்திரண்ட முடிபையே பொருளாகக் கொண்டிருப்பவர் சிவஞானமுனிவர்.

இனி சிவஞான முனிவரது பிறப்பு வளர்ப்பைப் பற்றிச் சிறிது கவனிப்பாம். தென்பாண்டி நாட்டில் பாபவிநாசத்துக்கு (பாபநாசம்) அருகில் விக்கிரமசிங்கபுரம் என்றொரு கிராமம் உண்டு. அவ்வூரில் வேளாள குலத்திற் பிறந்த ஆநந்தக்கூத்தருக்கும் அவர்தம் அருமைப் பத்தினியரான மயிலையம்மையார்க்கும் பிறந்தவர் நம் சிவஞானமுனிவர். நமது சுவாமிகளிடம் குழந்தைப் பருவத்திலேயே சிவபெருமான் பேற்றைப் பெறுதற்குரிய குணநிசயங்கள் காணப்பட்டன.

மக்களுக்குக் கல்வியை யூட்டுதல் பிதாவின் முதற்கடமையல்லவா? ஆநந்தக்கூத்தர் தம் கடமையை நிறைவேற்ற எண்ணியவராய்த் தமது அருமை மகனாரைப் பள்ளியில் வைத்தார். ஒருநாள், சிவஞான முனிவரான குழந்தை பள்ளிக்குச் செல்லும் வழியில் விபூதிதாரணரான இரண்டு அடியார்கள் எதிரில் வரக்கண்டது. அவ்விருவரும் திருவாவடுதுறை ஆதீன அடிகண்மார். இருவரைக் கண்டதும் குழந்தைக்கு ஆநந்த பரவசம் மேலிட்டது; பள்ளிக்குச் செல்வதை யொழித்து அவர்களிருவரையும் வீட்டுக்கு அழைத்துச் சென்றது. சிவஞான முனிவர், தந்தையில்லாததால் தாயாரிடஞ் சென்று அடியார்களை உண்பிக்கச் சொன்னார். அம்மையார் அமுதுபடைத்த திறத்தை நான்மயிலாப்பூரில் கூறவேண்டுவதில்லை. இவ்வூரார் அமுது படைக்குந் திறத்தைச் சம்பந்தரே புகழ்ந்திருக்கிறார். 'உருத்திரபல் கணத்தார்க்கு அட்டிட்டல்காணாதே போதியோ பூம்பாவாய்' என்ற சொற்றொடரை அறிதார் யார்?

அம்மையாரின் அன்பைக்கண்ட சுவாமிகள் ஒருபாட்டைப் பாடினார். அஃது, "அருந்ததி யன்னம்மை" என்னுந் தொடக்கத்ததாகும்.

இப்பாட்டில் கருத்து, சொல், பொருள் முதலிய எல்லாம் அமைந்திருக்கின்றன. இப்பாட்டைக் குழந்தைப் பருவத்திலுள்ள சிவஞான முனிவர் எவ்வாறு பாடினார்? இதற்கு முன்ஜென்மத்தில் அவர் எவ்வளவு புண்ணியம் செய்திருத்தல்வேண்டும்! அவர் ஜீவன் முக்தர். ஒருவன் ஒரு ஜென்மத்தில் படித்தவை ஏழு ஜென்மங்கள் வரை அவனைப் பின் பற்றுகின்றன வென்பது பொய்யாமோ?



மனிதர்களை மூன்று விதமாகப் பிரிக்கலாம். அவையே பிராகிருதர், வைநயிகர், சாமுசித்தர் எனப்படும். படித்தும் அறியாதவர் பிராகிருதர். வைநயிகர் படித்தபின் அறிபவர். படிக்காமலே அறிகிறவர் சாமுசித்தர். நமது சிவஞான முனிவர் மூன்றாவது வகுப்பைச் சேர்ந்தவர். அவர் பெரிய அநுபூதிமான். நினைத்த உடனே பாடவல்லவர். அவர் பரிசாரகனுக்குக் கட்டளையிடுதற் பொருட்டுப் பாடிய பாட்டைக் கவனியுங்கள். அது, "சற்றே துவையலரை" என்னுந் தொடக்கத்தது.

ஒரு சமயம் சுவாமிகள் திருப்பாதிரிப்புலியூர்க்கு வந்தார்கள். அப்பதி திருநாவுக்கரசு சுவாமிகளைக் கடலினின்றும் கரையேறவிட்ட பெருமையுடையது. ஆங்குச் செல்வந்தன் ஒருவன் இருந்தான். திரிபு வகையில் ஒரு பாட்டுப் பாடுபவருக்கு நூறு பொன் தருவதாக அவன் நிச்சயித்திருந்தான். அவ்வூரில் ஓர் அந்தணர்; நித்திய தரித்திரர்; தம் மகனுக்கு உபநயனம் செய்ய விரும்பினார். பணத்துக்கு என்செய்வது? ஒன்றும் தோன்றவில்லை. ஒருநாள் அவர் சுவாமிகளைச் சந்தித்தார்; தமது குறைகளைக் கூறிச் செல்வந்தன் கட்டிவைத்திருக்கிற பொற்கிழியையும், அதன் வரலாற்றையும் கூறினார். நமது சுவாமிகள் ஒருவித யோசனையும் செய்யாது உடனே ஒரு கவியை எழுதிக்கொடுத்தார். அது 'வரையேற விட்ட முதல்' எனத் தொடங்கிக் 'கரையேற விட்டமுதல்வா' என்பதோடு முடிகிறது. நினைத்த மாத்திரத்தில் பாட்டுப் பாடுவதே சிறந்த முறையாகும். சிலர் ஒரு கவிக்காகப் பல நாட்கள்வரை முயல்கின்றனர். அவர் பாட்டுப் பாடும் திறன் வரப்பெற்றவரல்லர்.

கடவுளைஎல்லாச் சாமர்த்தியமும் கைவரப்பெற்றவர். அவர் பூரண அறிவுடையவர். மனிதர் குறைந்த அறிவுடையவர். அறிவு இருவருக்கும் பொதுவே. அதனாலேயே கடவுள் சர்வக்ஞன் என்று அழைக்கப்படுகிறார். மனிதன் கிஞ்சிக்ஞன் என்று அழைக்கப்படுகிறான்.

கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள சம்பந்தத்தை வேறுவிதமாகவும் உவமைப்படுத்திக் கூறலாம். நம்மொழியில் க ச ட த ப ற என்ற ஆறு எழுத்துக்களும் வல்லெழுத்துக்கள் என்று கூறப்படுகின்றன. இவற்றில் க ச த ப என்ற நான்கு எழுத்துக்களே மொழிக்கு முதலில் வருவன. ட றக்கள் மொழிக்கு முதலில் வரா. கடவுள் கசதப முதலிய எழுத்துக்களைப் போன்றவர். உயிர்கள் ட றக்கள்.

அகத்திய முனிவருக்குத் தொல்காப்பியர் முதலிய பன்னிரு மாணவர் இருந்தனர். அதுபோலவே நமது சுவாமிகளுக்கும் கச்சியப்பர் முதலிய பன்னிரு மாணவர் இருந்தனர். அம்மாணவருள் கச்சியப்பரே தலைசிறந்தவர்; தணிகைப் புராணம் முதலிய பல நூல்களை இயற்றியவர்.

நமது சுவாமிகள் மொழிபெயர்ப்பதில் திறமை வாய்ந்தவர்கள். சுவாமிகள் மொழிபெயர்த்த நூல்களில் சில 'அன்னம்பட்டீயம்', 'தருக்க சங்கிரகம்' 'சிவதத்துவ விவேகம்' முதலியவாம். சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பதே சுவாமிகளின் சாமார்த்தியத்தைக் காட்டுகிறது. 'நித்திய வஸ்து' என்பதற்கு 'மன்னிய மெய்ப்பொருள்' என்றலும், 'பக்தி' என்பதற்கு 'மெய்யன்பு' என்றலும் எவ்வளவு சிறந்தசொற்கள் பாருங்கள்.

முண்டகோபநிஷத்தில் வரும் ஒரு வாக்கியத்தைச் 'சிவனென்னும் மொழியைக் கொடிய சண்டாளன் செப்பிடில் அவனுடன் உறைக' என்று மொழிபெயர்த்திருக்கிறார்.

விருத்தியுரை எழுதுவதிலும் சுவாமிகள் வல்லவர். இதை வடமொழியில் பாஷியம் என்று கூறுவது. தமிழில் சிவஞான முனிவருக்கு முன், ஒருவரும் விருத்தியுரை எழுதினது இல்லை. அதனாலேயே அவர் திராவிடமாபாடிய கர்த்தர் என்று அழைக்கப்படுகிறார்.

சிவஞானபோதத்தின் காப்புச் செய்யுளைக் கவனிக்க. அது வருமாறு.

"கல்லா னிழல்மலை, வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர், நல்லார் புனைவரே"

இப்பாட்டை வஞ்சித்துறை என்பார்கள். இப்புத்தகம் நான்கு விஷயங்களைக் கூறுவது. அவை பிரமாணம், இலட்சணம், சாதனம், பிரயோசனம் எனப்படும். இந்நான்கு பொருளையும் குறிப்பாகக் காப்புச் செய்யுளிலும் நான்கு அடிகள் இருக்கின்றன. செய்யுளின் கடைசியிலுள்ள ஏகாரம் இடைச்சொல். அதை நீக்க, அடி ஒன்றுக்கு மூன்று சொற்களாகச் செய்யுளில் பன்னிரண்டு சொற்களிருக்கின்றன. இப்பன்னிரண்டு சொற்களும் பன்னிரண்டு சூத்திரங்களைக் குறிப்பன.

இவற்றில் முன் ஆறு சூத்திரம் பொது. பின் ஆறு சூத்திரம் சிறப்பு. முன்னவற்றை அருளிய என்றும், பின்னவற்றைப் புனைவர் என்றும் சுவாமிகள் கூறுகிறார்கள். 'உண்ணிய' என்ற அப்பர் தேவாரத்துக்கு 'உண்ண' என்று பொருள் கூறுமாப்போல் 'அருளிய' என்பதற்கு 'அருள்' என்று பொருள் கூறினர்.

சுவாமிகள், 'செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ்' என்ற வேறொரு நூலையும் இயற்றியிருக்கிறார். அதில் சமய உண்மைகளை அறிந்து கடவுளை வழிபடுதலை விளக்கியிருக்கிறார். சுவாமிகள் நம்மையெல்லாம் யானைகள் என்கிறார்கள். யானைக்கு மூன்று மதங்கள் உண்டு. அவை கன்னமதம், கபோலமதம், பீஜமதம் என்னப்படும். நமக்கும் மூன்று மலங்கள் இருக்கின்றன. அவை ஆணவம், கன்மம், மாயை. ஞானம் என்ற கட்டுத்தறியை அறுத்துச் செல்வது மதம் பிடித்த யானைக்கு முதல் அடையாளம். நாமும் அவ்வாறே அன்பு என்னும் சங்கிலியை உதறித் தள்ளி, அறிவு அல்லது அருள் என்னும் கூடத்தை விட்டுவந்து, புவனம் என்னும் கொடுங்காட்டில் ஓடுகிறோம்; எப்பாகர்க்கும் அடங்காது ஓடுகிறோம். அங்குச பாசத்தைக்கொண்ட விநாயகப் பெருமானாகிய பெரும்பாகனே நம்மை அடக்கவல்லவன். இக்கருத்தைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழில் 'மும்மலம்' என்ற தொடக்கப்பதிகத்தில் வெகு அழகாகச் சுவாமிகள் கூறியிருக்கிறார்கள்.

இவ்வாறு சுவாமிகள் தமிழுக்கும் சிவபெருமானுக்கும் செய்யவேண்டிய பல தொண்டுகளைச் செய்துவிட்டு கி. பி. 1785-ம் ஆண்டு ஏப்ரல் 17-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை பகல் 1-40-மணிக்கு இப்பூதவுடலை நீத்துப் புகழ் உடலை எய்தினார்கள்.

(சித்தாந்தம்)

உ

# அழையா விருந்து.

(சென்னை, மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர், உயர்திரு, உ. வே. சாமிநாதையரவர்கள்.)

இராமநாதபுரம் அரசராக இருந்து புகழ்பெற்ற ஸ்ரீமான் பாஸ்கரசேதுபதியவர்களை அறியாத தமிழர் இரார்; சற்றேறக் குறைய 40-வருஷங்களுக்கு முன்பு ஒருமுறை அவர் திருவிடைமருதூருக்கு வந்து ஒருமாதம் அத்தலத்தில் தங்கியிருந்தார். அக்காலத்தில் திருவாவடுதுறை யாதீனத்தில் தலைவராக விளங்கிய ஸ்ரீ அம்பலவாண தேசிகர் திருவிடைமருதூரிலேயே இருந்துவந்தனர். இராமநாதபுர ஸமஸ்தானத்திலிருந்து திருவாவடுதுறை யாதீனத்திற்கு மகமைகளும் வேறு வரும்படிகளும் உண்டு. ஆதலின், இரண்டு இடங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வருகின்றது. அம்பலவாண தேசிகர் அரசரையும் அவருடைய பரிவாரங்களையும் மிகவும் செவ்வையாக உபசரித்து வந்தார். அவருடைய உபசாரங்களிலும் ஸ்ரீ மகாலிங்கமூர்த்தியின் தரிசனத்திலும் சேதுபதி மன்னர் ஈடுபட்டு மகிழ்ந்தனர். அச்சமயம் ஒவ்வொருநாளும் ஒரு திருவிழாவாக இருந்தது.

அரசருக்கும், உடனிருக்கும் தானாதிகாரி, தர்மாதிகாரி முதலிய உத்தியோகஸ்தர்களுக்கும், ஏனையவர்களுக்கும் தனித் தனியே ஏற்ற விடுதிகள் அமைக்கப்பட்டிருந்தன. வெளியூர்களிலிருந்து செல்வர்கள் பலர் வந்து தேசிகரையும் அரசரையும் பார்த்துச் சிலதினம் இருந்து ஸல்லாபம் செய்து மகிழ்ந்து சென்றார்கள். தஞ்சாவூர் மகாராஷ்டிர அரசகுடும்பத்தைச் சேர்ந்த சிலர் வந்து அரசரைப் பார்த்துவிட்டுச் சென்றார்கள். சிறந்த அறிவாளியாகிய சேதுபதி மன்னர் திருவிடைமருதூரிலுள்ள திருக்கல்யாண மண்டபத்தில் தமிழிலும் ஆங்கிலத்திலும் சில பிரசங்கங்கள் செய்தனர். அப்போது கும்பகோணம் முதலிய இடங்களிலிருந்து பலர் வந்து கேட்டு இன்புற்றனர்.

அச்சமயம் மகாசிவராத்திரி புண்ணியகாலம் வந்தது. இயல்பாகவே மகாலிங்க மூர்த்திக்கு அபிஷேகம் முதலியன நன்றாக நடைபெறும். அரசர் வந்திருந்ததனால் அந்த வருஷம் பின்னும்

மிகுதியான அளவில் அவை நடைபெற்றன. பாஸ்கர சேதுபதி மன்னர் அன்றுமாலையில் தம்முடையபூஜையை முடித்துக்கொண்டு ஆலயம் சென்று சிவதரிசனம் செய்துவந்தார். அவருடன் இருவர் இருந்து ஆத்மார்த்த பூஜைக்குரிய தொண்டு செய்வது வழக்கம். அவ்விருவரும் தோற்றப் பொலிவும் சீலமும் உடையவர்கள். அவர்களுள் ஒருவருக்குச் சிவராத்திரியன்று மாலையில் வாந்திபேதி கண்டது. தக்க வைத்தியர்கள் கவனித்தும் அந்நோய் நீங்காமல் மறுநாட் காலையில் அவர் மரண மெய்தினர். அதனாற் பாஸ்கர சேதுபதிக்கு மனவருத்தம் மிகுதியாக உண்டாயிற்று.

சிவராத்திரிக்கு மறுநாள் அரசர் மாயூரஞ் சென்று ஸ்வாமி தரிசனம் செய்ய எண்ணியதால் அதற்குரிய ஏற்பாடுகள் மாயூரத்தில் செய்யப்பட்டிருந்தன. அரசர் தம் பரிவாரங்களுடன் மாயூரத்திற்குப் பகல் 12-மணி வண்டியிற் புறப்பட்டார். அவருடன் திருவாவடுதுறை மடத்து அதிகாரிகள் சிலரும் சென்றனர். திருவாவடுதுறையில் பெரிய காருபாராக இருந்தவரும் திருவிடைமருதூரிலும் திருப்பெருந்துறையிலும் கட்டளைவேலை பார்த்துப் பல திருப்பணிகள் செய்தவருமாகிய ஸ்ரீ சுப்பிரமணியத் தம்பிரானென்பவரும் எல்லாவற்றையும் கவனித்துக்கொள்ளும்பொருட்டுச் சென்றனர்.

மாயூரத்தில் திருவாவடுதுறை யாதீனத்துக்குரிய கட்டளை மடமொன்று உண்டு. அங்கே பரந்த இடங்கள் இருந்தன. அவ்விடங்களில் அமைக்கப்பட்டிருந்த விடுதிகளில் அரசரும் பிறரும் தங்குதற்குரிய வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

சேதுபதி வேந்தர் மாயூரம் ஸ்டேஷனில் இரண்டு மணிக்கு வந்து இறங்கினார். அதே வண்டியிற் கும்பகோணத்திலிருந்தும் பலர் வந்து இறங்கினர். அரசருக்காகவும் உடன் வந்தவர்களுக்காகவும் பலவகையான பல்லக்குகளும் வண்டிகளும் வந்திருந்தன. அவரவர்கள் தங்கள் தங்களுக்கு உகந்த வாகனங்களில் ஏறிச் செல்லுவதற்காக மடத்து அதிகாரிகள் அவற்றைக் கொண்டுவந்திருந்தார்கள்.

வந்திருந்த வாகனங்களுள் அழகிய மேனாப் பல்லக்கொன்றில் மன்னருடைய கருத்துச் சென்றது; அதில் அவர் ஏறிக்கொண்டு



கட்டளை மடத்துக்குப் புறப்பட்டனர். உடன் வந்தவர்களும் தங்கள் தங்களுக்கு இயைந்த வாகனங்களில் ஏறிச் சென்றனர். சேதுவேந்தர் ஏறுவதற்கென்று இரட்டைக் குதிரை பூட்டிய அழகிய பெரிய வண்டியொன்று வந்திருந்தது. அவர் அதில் ஏறாமையால் அது தனியே நிறுத்தப்பட்டிருந்தது. அதில் ஏறும் குறிப்போடு அதற்கருகில் ஒரு கனவான் நின்றனர். எல்லாம் ஸ்ரீ சுப்பிரமணியத் தம்பிரானுடைய உத்தரவின்படி நடைபெற்றமையால் வண்டிக்காரன் அத்தம்பிரானது கட்டளையை எதிர் பார்த்திருந்தான். தம்பிரான் அவ்வண்டியின் அருகே வந்தார் அப்போது அங்கே நின்றிருந்த கனவான் அவரைநோக்கிக் கம்பீரமாக, "தாங்களும் ஏறலாமே" என்று சொன்னார். அக்கனவான் உயர்ந்த சட்டையொன்றைஅணிந்திருந்தார். காதுகளில் வெள்ளைக் கடுக்கன்கள் ஒளிவிட்டன. கையில் மோதிரம் மின்னியது. நல்ல வேலைப்பாடுடைய பிரம்பொன்றை அவர் கையில் வைத்திருந்தார். அடிக்கடி மீசையை முறுக்கிக்கொண்டு நின்றார். ஒரு பெரிய செல்வராக யாவரும் நினைக்கும்படி அவர் இருந்தார்.

அக்கனவான் அரசரைச் சேர்ந்தவர்களுள் ஒரு தக்க அதிகாரியென்று தம்பிரான் எண்ணினார். 'இல்லாவிடில் இவ்வளவு உரிமையோடு பேசுவாரா?' என்பது அவர் எண்ணம். ஆதலின் உடனே கனவானைத் தம்முடன் ஏற்றிக்கொண்டு கட்டளை மடத்திற்குப் போய்ச் சேர்ந்தனர். மாயூரம் ரயில்வேஸ்டேஷனிலிருந்து கட்டளை மடம் நான்கு மைல் தூரம் இருக்கும். இருவரும் வண்டியில் மௌனமாகவே சென்றனர்.

அரசருக்கு நிகழ்ந்த உபசாரங்கள் அளவற்றன. உபசாரங்கள் செய்வதில் அம்பலவாண தேசிகரைப் போன்றவர்கள் உலகத்திற் சிலரே இருக்கக்கூடும். அவருடைய கட்டளையின்கீழ் ஓர் அரசருக்கு நடைபெறும் உபசாரத்தைப்பற்றி எழுதுவது எங்ஙனம் இயலும்?

கட்டளை மடத்தில் அங்கங்கே தோட்டங்களில் கொட்டகைகளும் பந்தல்களும் அமைக்கப் பெற்றிருந்தன. நாற்காலிகளும் ஸோபாக்களும் மேஜைகளும் போடப்பட்டிருந்தன. மடத்தின் பின்புறத்திலுள்ள பெரிய வெளியினிடையே இருந்த 'சவுக்கண்டி'யில் அரசர் தங்கியிருந்தார். சுப்பிரமணியத் தம்பிரான் தம்முடன்

வந்த கனவானுக்கு அங்கேயுள்ள இடங்களைக் காட்டிச்சௌகரியமான இடத்தில் இருக்கும்படி சொல்லிவிட்டு மற்றக் காரியங்களைக் கவனித்தற்குச் சென்றுவிட்டார்.

அக்கனவான் ஒரு நல்ல இடத்தில் தங்கினார். அரசருள்ள இடத்திற்குச் செல்வோரும் அங்கிருந்து திரும்பி வருவோரும் செல்லும் வழியின் இடையில் அவருக்கு இடம் அமைந்திருந்தது. அங்கே நல்ல சோபாக்களும் வட்டமேஜையும் நாற்காலிகளும் இருந்தன.

பிற்பகலில் அரசர் வந்து இறங்கினாராதலின் அவருக்கும் பிறருக்கும் பலகாரங்கள் பழவகைகள் முதலியன அளிக்கப்பட்டன. அரசருள்ள இடத்திற்கு அவற்றை மடத்து வேலைக்காரர்கள் எடுத்துச் சென்றார்கள். இடையே தங்கியிருந்தகனவான், "என்ன அது?" என்று கேட்டார். அவர்கள், "பலகாரங்கள்" என்றார்கள். "இங்கே கொண்டு வாருங்கள். என்ன என்ன கொண்டு போகிறீர்கள்! எல்லாம் சுத்தமான நெய்யில் செய்தவைகளா?" என்று அவர் கேட்டார். வேலைக்காரர்கள் அக்கனவானிடம் அவற்றைக் கொண்டு சென்றார்கள். அவர் ஒவ்வொரு வகையிலும் சிறிதுசிறிது எடுத்து வைக்கச்செய்து உண்டு சுவை பார்த்தார்; "பேஷ்! நன்றாக இருக்கிறது, கொண்டு போங்கள்" என்று அனுமதி கொடுத்தார்.

வேலைக்காரர்கள் அக்கனவானுடைய தோற்றத்தாலும், சிறிதேனும் அச்சமின்றி அதிகாரத்தொனியோடு பேசும் பேச்சாலும் அவர் அரசருடைய அதிகாரிகளுள் முக்கியமானவரென்று எண்ணினார்கள். அரசருடைய உணவில் குற்றமில்லாதிருப்பதை அறிந்துகொள்ள அரண்மனையில் 'உண்டு காட்டிகள்' என்ற ஒருவகையினர் இருப்பதுண்டு. அவர்கள் அரசருக்குரிய உணவை அவருக்கு முன்பு உண்டு குற்றமற்ற தென்றுணர்ந்த பின்னரே அவ்வுணவு அரசருக்கு அளிக்கப்படும். அவர் அத்தகையவர்களில் முக்கியமானவராக இருக்கலாமென்று சிலர் எண்ணினர்.

கனவான் திருப்தியோடு அனுமதி கொடுத்ததனால் வேலைக்காரர்கள் மிக்க மகிழ்ச்சிபெற்றுப் பலகாரமுதலியவற்றை அரசருள்ள இடத்திற்குக்கொண்டு சென்றார்கள். அப்பால் அவர்கள் எதைக்கொண்டு போனாலும் தாமாகவே அக்கனவானிடம் காட்டி-



விட்டு அனுமதி பெற்றுச் செல்லத் தலைப்பட்டார்கள். கனவானும் ஒவ்வொன்றையும் நாவாரச் சுவைத்து வயிறார உண்டு வந்தனர். இடையிடையே, "இரண்டு கைகளிலும் எடுத்துச் செல்லுங்கள்" "அதை மூடிக்கொண்டு போங்கள்" என்பன போன்ற சிலகட்டளைகளையும் இட்டு வந்தார்.

அரசரிடம் செல்வோர்களை இங்ஙனம் அதிகாரம்செய்ததோடு நில்லாமல் அரசரிடமிருந்துவரும் அரண்மனைவேலைக்காரர்களிடமும் அக்கனவான், "எல்லாம் சரியாக நடக்கின்றனவா? அந்தப் பக்ஷணம் எப்படி? இன்னும் யாருக்காவது ஏதாவது வேண்டுமா?" என்று சில கேள்விகளையும் கேட்டார். மடத்தைச் சேர்ந்த அதிகாரியாக அவர்கள் அவரை எண்ணி அவர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் மரியாதையாக விடையளித்துச் சென்றார்கள். இங்ஙனம் இரு சாராராலும் மதிக்கப்பட்டு விருந்துணவை எல்லோருக்கும் முதலில் சுவைத்துக்கொண்டு சுகமாக அவர் இருந்து வந்தார்.

பாஸ்கர சேதுபதியரசர் இரண்டு மூன்று நாட்கள் மாயூரத்திலேயே தங்கியிருந்து அயலிலுள்ள ஸ்தலங்களைத் தரிசனம் செய்து வந்தார். நான் அக்காலத்தில் கும்பகோணம் கலாசாலையில் இருந்தேன். எனக்கு விடுமுறை நாட்களாக இருந்தமையின் நானும் திருவிடைமருதூருக்குச் சென்று அரசரது விருப்பத்தின்படி அங்கிருந்து மாயூரத்திற்கும் போனேன்.

மூன்றாம் நாள் இரவு எட்டுமணிக்குச் சேதுபதி மன்னருக்குத் திருவிடைமருதூரிலிருந்து தந்தி ஒன்று வந்தது. அதில் அரசருடைய பூஜாகைங்கரியஞ் செய்பவர்களில் மற்றொருவரும் இறந்துவிட்டாரென்றசெய்தி இருந்தது. முதலில்ஒருவர் இறந்து போனதனாலுண்டான வருத்தமே அரசருக்கு அதிகமாக இருந்தது. அவர் திருவிடைமருதூரிலிருந்து புறப்படுங்காலத்தில் மற்றொருவருக்கும் சிறிது வாந்திபேதி கண்டது. அவரும் இறந்துவிட்டாரென்ற செய்தியறிந்த அரசருக்கு ஒன்றுந்தோன்றவில்லை. பேசாமல் தலைகுனிந்தபடியே துயரத்தில் மூழ்கியிருந்தார். அவருக்கருகில் சென்று ஆறுதல் கூறுதற்கும் பேசுவதற்கும் யாவரும் அஞ்சினர். அங்கே வந்திருந்த பல்லவராயப்பட்டு அழகப்பப்பிள்ளை, வல்லம் பரமசிவம் பிள்ளை முதலிய பெரிய செல்வர்கள் பலருங்கூடி எவ்வாறேனும் அரசரோடு பேசி அவருடைய துக்கத்தை மாற்ற வேண்டுமென்று யோசித்தார்கள்; 'யார் முதலிற் போய்ப் பேசுவது?' என்ற கேள்விக்கு விடைபகர்பவர் ஒருவரும் இல்லை. அப்பால் அவர்கள் சுப்பிரமணியத் தம்பிரானிடம் தம் கருத்தை விண்ணப்பித்து அவரையேபோகும்படி வேண்டினர். அவரும்

அரசரை அணுக அஞ்சினர். இங்ஙனம் யாவரும் ஒன்றுகூடி ஒரு வழியும் தெரியாமல் கவலையுற்று, அங்கே வந்த என்னிடம் தெரிவித்தனர். அவர்களுடைய முகவாட்டத்தின் காரணத்தையும் விஷயத்தையும் உணர்ந்தேன். "ஏதோ ஒருவாறு முயன்று பார்க்கலாம்" என்று சொல்லிவிட்டு யாவரையும் அழைத்துக்கொண்டு சேதுபதியரசரிருக்குமிடம் சென்றேன். அவரோ எங்கள் வரவைக் கவனிக்கவுமில்லை; தலைநிமிரவுமில்லை; கற்சிலையைப்போல் இருந்த இடத்திலேயே அமர்ந்திருந்தார். அவர் அங்ஙனம் இருந்ததனாலேயே அவருடைய மனத்துள் இருந்த துக்கத்தை ஒருவாறு அளந்து உணர்ந்தேன்.

"அவ்விடத்துக்குத் தெரியாததல்ல. நம்முடைய இஷ்டப்படி என்ன நடக்கிறது? ஈச்வர சங்கல்பத்தை யார் மாற்றக்கூடும்" என்று துக்கம் விசாரிக்கத் தொடங்கினேன்; அரசர் தலை நிமிரவில்லை.

"வந்த இடத்தில் இப்படி நேர்ந்தது மனதுக்குக்கஷ்டம் தரக்கூடியதுதான்: ஆனாலும் மகாலிங்க மூர்த்தியின் நினைவாகவே அவர்கள் காலமாயிருக்கவேண்டும். அந்த இரண்டு ஆத்மாக்களும் நல்லகதியடையுமென்பதில் சந்தேகமேயில்லை: பெரிய விருந்தில் அதிகமாக அருந்தியிருக்கலாம். அதனால் உண்டான அஜீர்ணத்தினால் இப்படி நேர்ந்துவிட்டது. ஒருவர் போனாரென்றால் மற்றொருவருமா போகவேண்டும்? இந்த இருவருடைய கதியையும் பார்க்கும்போது எனக்கு வேறொரு கவலை உண்டாகிவிட்டது. கவலைக்கிடமான மனுஷர் ஒருவர் இவ்விடத்திலும் இருக்கிறார். அவர் செய்யுங்காரியங்களைப் பார்க்கையில் அவருக்கு எந்தச் சமயத்தில் என்ன நேருமோவென்ற பயம் எல்லோருக்கும் உண்டாகியிருக்கிறது" என்றேன்.

"என்ன?" என்று அரசர் தலைநிமிர்ந்து கேட்டார்.

"இந்த விஷயத்தை நினைத்தால் ஒரு பக்கத்தில் ஆச்சரியமும் ஒரு பக்கத்தில் கவலையும் உண்டாகின்றன. இவ்விடத்தில் ஒரு கனவான் இருக்கிறார். அவர் இந்த மூன்று நாட்களாக இவ்விடத்துக்குவரும் ஆகாரங்களையெல்லாம் வாய்கொண்டமட்டும்சாப்பிட்டு வருகிறார். அரண்மனையைச் சேர்ந்தவர்கள் அவரை மடத்து அதிகாரியாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். மடத்தைச் சேர்ந்தவர்களோ மகாராஜாவைச் சேர்ந்தவராக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அவரோ இரண்டு பக்கத்தாரையும் ஏமாற்றி அதிகாரம் செய்துகொண்டு கிடைத்தவற்றையெல்லாம் உண்டு வருகிறார். அவர் எப்படிப்பட்டவராக இருந்தாலும் குற்றமில்லை. பின்னால்



ஏதாவது விபரீத முண்டானால் என்ன செய்வதென்றுதான் யோசிக்கவேண்டியிருக்கிறது! என்ன செய்வது? சபலம்யாரைத்தான் விடுகிறது?" என்று சொல்லி அந்தக்கனவான் ரயில்வண்டியிலிருந்து இறங்கினது முதல் யாதொரு சம்பந்தமுமில்லாமல் உபசாரங்களைப் பெற்று வருவதை விரிவாகக் கூறினேன்.

அரசருக்கு உடனே சிரிப்பு வந்துவிட்டது; "அதென்ன சங்கதி? எங்கே இருக்கிறான் அந்த மனுஷன்?" என்று சொல்லிக்கொண்டே எழுந்தார். அழையா விருந்ினராகிய அந்தப்போலிக் கனவானைப் பார்க்க யாவரும் புறப்பட்டனர். தம்பிரானே மிக்க கோபத்தோடு விரைவாக முதலிற் சென்றனர். ஆரம்பத்தில் மோசம் போனவர் அவரல்லவா? தம்பிரான் வருவதைக் கண்ட அக்கனவான் 'வாருங்கள் வாருங்கள்' என்றார். தம்பிரானே கோபத்தோடு, "யாரடா நீ?" என்று கேட்டார். "நானா? நான் தஞ்சாவூர் ராஜ வம்சத்தைச் சேர்ந்தவனென்பது தெரியாதா?" என்றார் கனவான். இருவருக்கும் சிறிது வாக்குவாதம் நிகழ்ந்தது. அதற்குள் மற்றவர்களும் வந்து விட்டார்கள். அக்கனவானை ஒவ்வொருவரும் ஒவ்வொரு கேள்வி கேட்கத் தொடங்கினர்: வேலைக்காரர்கள் சிலர் அவரை வெளியிலே அழைத்துச் சென்றனர்.

சேதுபதி மன்னருக்கிருந்த துயரம் இருந்தஇடம் தெரியாமல் மறைந்துவிட்டது. "என்ன தைரியம்!" என்று சொல்லி நகைத்தார். அவருடைய துயரம் மாறியது கண்டு யாவருக்கும் ஆறுதல் உண்டாயிற்று. சுப்பிரமணியத் தம்பிரானும் மற்றச்செல்வர்களும் என்னை நோக்கி, "இந்த விஷயம்உங்களுக்கு எப்படித்தெரிந்தது"? என்று கேட்டார்கள்.

"அந்த மனிதர் கும்பகோணத்தில் பொடிக்கடை வைத்திருக்கிறார். மகாராஷ்டிரர். சில சிப்பந்திகளை வைத்துக்கொண்டு கௌரவமாக இருக்கிறார். அவரை எனக்குத் தெரியும். என்னை அவருக்குத் தெரியாது. அவரை நான் ஆரம்பத்திலிருந்தே கவனித்து வந்தேன். இதைப்பற்றி நாம் என் கவனிக்கவேண்டும் என்று விட்டுவிட்டேன். இந்தச் சமயத்தில் வேறு வழியில்லை. மகாராஜாவினுடைய துக்கத்தை மாற்றுவதற்கு அவர் கதை உபயோகமாயிற்று. பாவம்! என்னால் அவருடைய வேஷம் வெளிப்பட்டது" என்றேன்.

அன்று முழுவதும் அரசரும் மற்றவர்களும் கல்யாணங்களிலும் வேறு விசேஷங்களிலும் அழையாவிருந்தாக வந்து நுழைந்துகொண்டு ஆரவாரம் செய்பவர்களைப் பற்றியே பேசிப் பொழுது போக்கினார்கள்.

(கலைமகள்)

## கிறிஸ்தவ தேவாலயங்களிலும் சட்டம் செய்யலாமே.

'வெங்காயம் தின்றும் வியாதிதீரவில்லை' என்று வசனமுண்டு. தீண்டாதார் கிறிஸ்தவமதம் புகுந்தும் தீண்டாமைக்கு விமோசனமில்லை. குடந்தையிலுள்ள கத்தோலிக்க கிறிஸ்தவர்களில் உயர்ந்த வகுப்பார் தாழ்ந்தஜாதி கிறிஸ்தவர்களுக்குத் தேவாலயங்களில் சம அந்தஸ்துக் கொடாமல் அவர்களை ஒதுக்கி வைத்திருப்பதைப் பற்றிப் பெரிய தகராறு நடைபெறுகிறது. சர்ச்சுக்களில் தாழ்ந்த ஜாதியாருக்கு ஒதுக்குப்புறமாகத் தனியிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. உயர்ந்த ஜாதியார் உட்காருமிடத்தில் இவர்கள் பிரவேசிக்கக் கூடாது. பாதிரி கையைத் தாழ்ந்த ஜாதியார் முத்தமிடக் கூடாது. உயர்ந்த ஜாதியார் உட்காரும் ஆசனங்களைத் தொட்டுவிட்டதற்காகத் தீண்டாதாருக்கு அடிவிழுந்ததாம். இன்னும் எவ்வளவோ! இந்த விநோதங்களெல்லாம் அவர்கள் வாயிலாலேயே வெளிவந்தவை. குடந்தையில்மட்டும் இப்படியில்லை; இந்தியா வெங்குமே இப்படி இருக்கிறது. ஜாதிபேத உணர்ச்சியற்றவர்களாகச் சொல்லிக்கொள்ளும் பெரிய பெரிய பாதிரிகளே இம்மாதிரி, தீண்டாஜாதிக் கிறிஸ்தவர்களைத் தாழ்மையாக நடத்தி வருவது வெகுகாலமாகப் பிரசித்தம்; இந்த அவமானத்தைக் கண்டிக்கக் குடந்தைத் தீண்டாதார் கிறிஸ்தவர்கள் ஒரு கூட்டம் போட்டார்கள்; சென்னை அபிவிருத்தி இலாகா மந்திரியாக விளங்கும் ஸ்ரீமான் எம். ஸி. ராஜா இதில் அக்கிராசனமலங்கரித்தார்.

வாய்கொண்டவரையில் இந்த ஜாதிபேத உணர்ச்சியைக் கண்டித்துப் பாதிரிகள் இதை நிவர்த்திக்கவேண்டுமென்று கோரினார். தீண்டாதாருக்குப் புத்திசொல்லுகையில் அவர்கள் கட்டுப்பாடாகவும், சாந்தமாகவும் கிளர்ச்சி நடத்தவேண்டுமென்றும், முக்கியமாகப் போப் முதலிய பெரிய மதாசார்யர்களிடம் தெரிவித்து இந்தப் பேதத்தைப்போக்க வழி தேடுவதே நியாயமென்றும் உபதேசித்தார்.

இவ்விஷயத்தில் இவர் இவ்வளவு சாந்தமூர்த்தியாக நடித்தது விசேஷந்தான். ஹிந்துக்களில் தீண்டாமை விலக்குச் செய்யமட்டும் இவர் தடபுடலாகச் சட்டம் செய்யவும் வேறு பலமுறைகளைக் கையாளவும் துணிந்தாரே! ஹிந்துதேவாலயங்களில் ஜாதி வித்யாசம் ஆகாது என்று சட்டம் செய்யத் துடித்தாரே! இப்போதும் சட்ட மூலமாக ஆலயப் பிரவேசத்தைச் சாதிக்க இவர் முயற்சிக்கவில்லையா?

இத்தகையவர் கிறிஸ்தவ தீண்டாதாருக்கு மட்டும் வேறுவிதமாக யோசனை சொல்வது ஏன்? மதாசார்யர்களிடம் சென்று முறையிட்டுக் கொண்டு இந்தத் தகராறைத் தீர்த்துக்கொள்ளச்சொல்லுவானேன்? சட்டசபையில் இவ்விஷயமாகச் சட்டம் செய்ய வொண்ணாதா? ஹிந்து தேவாலயங்களில் தீண்டாதாரும் பிரவேசிப்பதற்கு நிர்ப்பந்தச்சட்டம் செய்வது போல் சர்ச்சுகளிலும் தீண்டாதார் எங்கும் பிரவேசிக்கவும் எதையும் தொடவும் உரிமை கொடுத்துத் தீண்டாமையைப் போக்க ஏன் சட்டம் செய்ய வொண்ணாது? ஸ்ரீமான் ராஜா தாம் மந்திரியாக இருக்கும்போதே இத்தகைய சட்டமொன்றைச் செய்து சர்ச்சுகளில் தீண்டாமையைத் தொலைத்துவிடலாமே! இவர்மந்திரிபதவியைவிடவேண்டிவந்தபோதிலும், சட்டசபை மெம்பராயிருக்கிறபடியால் இம்மாதிரி மசோதாவைக்கொண்டு வருவாரா! அல்லது பெரும்பான்மைக்கட்சியாரைக் கொண்டோ வேறுசீர்திருத்தக்காரரைக் கொண்டோ இந்த முயற்சியை இவர் பௌருஷத்துடன் செய்வாரா?

(ஆர்யதர்மம்)



## கோபுரங்களும் விமானங்களும்.

ஒரு பொருளாதார மாணவனுக்கு இந்தியா கிராமங்களைக் கொண்டதொரு நாடென்று தோன்றும். ஆனால் ஒரு சிற்ப மாணவனுக்கு இந்தியா கோபுரங்களையும் உன்னத விமானங்களையும் கொண்டதொரு தேசமென்றுதோன்றும். இந்தியாவில் எவ்வளவு கிராமங்களிருக்கின்றவோ அவ்வளவு கோபுரங்கள் இருக்கின்றன. துர் அதிர்ஷ்ட வசமாக அறிஞர்கள் இதுகாறும் இக்கோபுரங்களைப் பற்றி யாதொரு பரிசீலனையும் செய்யவில்லை. இந்தியாவில் கோபுரங்களும் விமானங்களும் எண்ணற்றனவாயிருந்தாலும், முக்கியமாக நாம் தெரிந்துகொள்ளவேண்டியவை மிகச் சொற்பமே.

மிக்க எழில்வாய்ந்த விமானங்களில் முக்கியமானது தஞ்சாவூர் பெரியகோயிற் கோபுரமாகும். இந்த விமானம் 216 அடிவரைக்கும் உயர்ந்திருக்கிறது. இந்த விமானத்தில் பதினைந்து மாடிகள் இருக்கின்றன. மேலும் இவ்விமானம் உன்னத வேலைப்பாடுகளோடு கூடிய பல ஹிந்து தேவதைகளின் உருவங்களையும் பெற்றிருக்கிறது. இதன் அஸ்திவாரத்தின் பரப்பு 96 சதுர அடி. விமானத்தின்சிகரத்தின்மேலுள்ள கலசம் மட்டும் 12 அடி 6 அங்குலம் இருக்கிறது. இச்சிகரத்தினுடையவும் ஸ்தூபியினுடையவும் நிழல் பூமியின்மீது விழுவதில்லை. இது சிற்ப வேலைக்காரர்களுக்கும் இன்ஜினீயர்களுக்கும் மிக்க ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. விமானத்தின் மற்றொரு ருசிகரமான அம்சம் என்னவென்றால் இதில் ஒரு ஐரோப்பியனுடைய உருவம் பொறிக்கப்பெற்றிருக்கிறது. இந்த உருவம், நம் தேசத்திற்கு முதன் முதலாக வியாபாரம் செய்யவந்த டச்சுக்காரராகிய 'ரோயிலேண்ட் கிரேப்' என்பவருடையதாக விருக்கலாமென்று யூகிக்கப்படுகிறது.

மதுரை மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் ராஜகோபுரம் முற்றுப்பெற்றிருந்தால், இந்நகர் இந்தியாவிலேயே ஒரு உன்னத கோபுரமுள்ளதாகப் பெருமை பெற்றிருக்கும். முற்றுப்பெறாத இந்தக்கோபுரம் வடக்குத் தெற்காக 174 அடி நீளமும், 117 அடி அகலமும் உடையதாகவிருக்கிறது. இதன் வாசல் 21 அடி 9 அங்குலம் அகலமுள்ளதாக விருக்கிறது. இவ்வித முற்றுப்பெறாத கோபுரங்கள் இந்தியாவில் இன்னும் அநேகம் இருக்கின்றன. இவ்வித கோபுரங்கள் சுமார் 70-க்கு அஸ்திவாரம் போடத் திருமலை நாயக்கரே காரணஸ்தராயிருந்திருக்கிறாரென்று தெரிகிறது. இராமேஸ்வரத்திலுள்ள கோபுரம் அதிக உயரமில்லாவிட்டாலும் மிகுந்த வேலைப்

பாடுகளுடன் அமைந்திருக்கிறது. இந்தியாவில் முழுவதும் கல்லால் கட்டப்பட்டகோபுரம் இவைகளைத் தவிர வேறில்லை.

விமானங்களும், கோபுரங்களும், ஒன்றுக்கொன்று வேலைப் பாட்டிலும் தோற்றத்திலும் ஒத்திருக்கின்றன. விமான மென்பது மூலஸ்தானத்திற்கு மேல் கட்டப்பட்டிருக்கும். மேலும் இவைகள் கோபுரங்களைவிடச் சற்றுச்சிறிதாகவிருக்கும். கோபுரங்கள் தமிழ்நாட்டுக் கோவில்களில்மிகுதியாகக் காணப்படுகின்றன. மதுரைப் பெருமாள் கோவிலிலிருப்பதற்கு விமானமென்று பெயர். விமானங்களுக்கு ஒரு மாடிமுதல் எழுமாடி வரைக்கும் இருக்கலாம். பொதுவாக ஒன்று அல்லது இரண்டு மாடிகளோடு கூடிய விமானங்கள் பரிவார தேவதைகளுக்கு மேற்கட்டப்படுவதுண்டு. ஆனால் மூலதேவதைகளிருக்குமிடங்களுக்கு மேல், மூன்றுமாடிகளுக்குமேற் கொண்ட விமானங்கள் கட்டப்படுகின்றன. ஸ்ரீரங்கத்தில் மாத்திரமே மூலவிக்கிரகமிருக்குமிடத்திற்குமேல் இரண்டுமாடிகள் கொண்ட விமானம் கட்டப்பட்டிருக்கிறது.

சிற்ப சாஸ்திரம் விமானங்களைத் தேவப் பிரசாத விமானமென்றும் மனுஷ்யப் பிரசாத விமானமென்றும் இரு பிரிவாகப் பிரிக்கிறது. சிற்ப சாஸ்திரத்திலுள்ள ஏதோ சில திட்டமான சட்டங்களை அனுசரித்துக் கட்டப்படும் விமானம் முன் இனத்தைச் சேர்ந்தது. மூலஸ்தானம் எப்பக்கமாகத் திரும்பியிருக்கிறதோ அதற்கேற்றாற்போல் விமானங்களுடைய மாடிகளும் வித்தியாசப்படும். மூலஸ்தானம் வடக்கேயோ, தெற்கேயோ நோக்கியிருந்தால் அதன்மேல் கட்டப்படும் விமானம் எழு சிறு மாடிகளைக் கொண்டதாக விருக்கவேண்டும். இது கிழக்கு நோக்கியிருந்தால், இதன் மேல் கட்டப்படும் விமானம் 9 சிறு மாடிகளைக் கொண்டதாக விருக்க வேண்டும். இது மேற்கு நோக்கியிருந்தால் இதன்மேல் கட்டப்படும் விமானம் 5 மாடிகளைக் கொண்டதாகவிருக்கவேண்டும்.

ஒரு மனுஷ்யப்பிரசாத விமானம் சிற்பசாஸ்திரியினுடைய யோசனையின்படியும், திட்டப்படியும் கட்டப்படுகிறது. மேலும் இத்தகைய விமானங்கள் சதுரவடிவமாக விருக்கின்றன. மற்றொரு வகை விமானம் நீண்ட சதுரமாகவோ வட்டமாகவோ கட்டப்பட்டிருக்கும்.

விமானங்களின் மேலுள்ள சிகரங்களின் எண்ணிக்கை அவைகளிலுள்ள மாடிகளின் எண்ணிக்கையைப் பொறுத்திருக்கிறது. ஒரு மாடி கொண்ட விமானம் ஒரு சிகரத்தைத்தான் பெற்றிருக்கும். எழுமாடிகள் கொண்ட விமானம் ஐந்து அல்லது எழு சிகரங்களைப் பெற்றிருக்கும். விமானங்களின் இரண்டு பக்கங்களில் மாத்திரம் குகைகளிருக்கின்றன.



அதாவது கிழக்கிலும் மேற்கிலுமாவது அல்லது வடக்கிலும் தெற்கிலுமாவது இருக்கும். இவைகளின் இரண்டு பக்கங்களிலும் துவாரபாலகருடைய உருவம் செதுக்கப்பட்டிருக்கும். இவ்வுருவங்கள், ஒன்று அல்லது இரண்டு மாடிகளைக் கொண்ட விமானங்களில் பொறிக்கப்படுவதில்லை. ஒவ்வொரு கல்லினுடைய மூலையிலும், ஆண் தேவதைகள் அல்லது பெண் தேவதைகள் உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கும். உச்சியிலுள்ள சிறு குழிகள், திருவிழாக்காலங்களில் விளக்குகள் வைப்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

மூலஸ்தானத்தினுடைய உயரமும், விமானங்களுடைய உயரங்களுக்குத் தகுந்தாற்போல் மாறுகிறது. உதாரணமாக நான்கு மாடிகள் கொண்ட விமானம் கட்டப்பட்டிருக்கும் மூலஸ்தானம், தரையிலிருந்து 33 அடி உயரமிருக்கவேண்டும். இவ்வித மூலஸ்தானத்தைக்கொண்ட கோயிலுக்கு ஸ்ரீ கந்தகோவிலென்று பெயர். மதுரை ஸ்ரீ மீனாக்ஷியம்மன் போன்று அதிகச் சக்திவாய்ந்தபெண்தேவதைகளுக்கே இவ்வித மூலஸ்தானம் கட்டப்படுவது வழக்கம். விமானத்திலுள்ள ஒவ்வொருமாடியும் ஒவ்வொரு ரிஷியின் பெயரால் அழைக்கப்படுகிறது. எழுமாடிகளைக் கொண்டது உத்தம விமானம். அத்ரி, பிருகு, குச்ச, வஸிஷ்டா, கௌதமா, காசியபா, ஆங்கிரஸ ஆகிய பெயர்கள் இதன் மாடிகளுக்கு இடப்பட்டிருக்கின்றன. விஷ்ணுகோவில்களிலுள்ள விமானத்தின் நான்கு புரங்களிலும் கருடன் உருவம் அமைக்கப்பட்டிருக்கும். சிவன் கோவில்களிலுள்ள விமானங்களில் நந்தியின் உருவங்கள் அமைக்கப்பட்டிருக்கும்.

விமானத்திற்கும் கோபுரத்திற்கும் வித்தியாசம் கண்டுபிடிப்பது எப்பொழுதும் சாத்தியமல்ல. ஆனால் எல்லாக் கோவில்களுக்கும் விமானங்கட்டப்படுவதுண்டு. பெரிய கோவில்களுக்குக் கோபுரங்களே கட்டப்படுவது வழக்கம். அர்ஜுனன், காளி, துரோபதை, மாரியம்மன் ஆகிய தேவதைகளின் கோவில்களின் வாசற்படிகளுக்கு மேல் கோபுரங்கள் கட்டப்படுவதில்லை. ஒரு கோவிலின் கிழக்குக்கோபுரம் இந்திரன் கோபுரம் என்றும், மேற்கு கோபுரம் வருணன் கோபுரம் என்றும் அழைக்கப்படுகிறது. இந்தியர்களின் சிற்ப வேலையின் திறனையும், உட்கருத்தையும் தெரியாதவர்கள் நமது கோபுரங்கள், விமானங்கள் ஆகியவைகளைப் பற்றித் தப்பபிப்பிராயம் கொள்ளுகிறார்கள். அதன் உட்கருத்து அவர்களுக்கு விளங்குவதில்லை.

(செட்டிநாடு)

# பழத்திற் சிறந்தது எது?

எலுமிச்சம் பழத்தின் நூற்றுக்கு 99 பாகம் தண்ணீராகவிருக்கிறது. இதைச் சாப்பிடுவதன் மூலம், மூத்திரப் பைகளில் வியாதியேற்படுவதில்லை. ஆனால் நமது இடுப்பில் அமைக்கப்பட்டிருக்கும் சிறிய நீர் தெரிக்கும் கருவிகளைச் செவ்வனே தங்கள் வேலைகளைச் செய்யும் வண்ணம் இந்த ரசம் சுத்தி செய்கிறது. இவ்வாறு சுத்திகரிக்கப்படாவிட்டால், அக்கருவிகளிலுள்ள அசுத்தங்கள் இரத்தத்தைக் கெடுத்துத் தேகத்திற்கு அசௌகர்யத்தை உண்டாக்குகிறது.

உண்மையில் எலுமிச்சம்பழத்தில் அதிக புரோட்டினும், கொழுப்புப் பொருளுமில்லை, ஆனால் ஒருவன் இவைகளை மற்றப் பொருள்களிலிருந்து கிரம்பப்பெறலாம். சாதாரணமாக ஒவ்வொருவனும் தேவைக்கு அதிகமான புரோட்டினும் கொழுப்புப் பொருளும் உட்கொள்ளுகிறான்.

பெண்கள் தங்கள் கைகளிற் கறைகள் விழுந்திருந்தால் இப்பழத்தின் ரசத்தையும் தோலையும்கொண்டு அவைகளில் தேய்க்கின்றனர். இது போன்று மற்ற எந்த வஸ்துவும் கறைகளைப் போக்கக் கூடியவைகளன்று. இஞ்செக்ஷன்களுக்கும் இப்பழத்தின் சாற்றை வெதுவெதுப்பான ஜலத்தில் ஊற்றி உபயோகிக்கலாம்.

முகத்திற்கு மிருதுவும் அழகும்வேண்டுவோர் எலுமிச்சம் பழத்தின் தோலையும் உள்ளிருக்கும் நாரையும் கன்னங்களில் தேய்க்கவேண்டும். இவ்விதமின்றிக் கடைகளில் விற்கும் வாசனைப் பொடிகளை உபயோகித்தால் பணவிரயமும் அதனால் முகத்திற்குக் கெடுதலும் உண்டாகிறது. இப்பொடிகளில் விஷவஸ்துகள் நிறைந்திருக்கின்றன.

தொண்டையில் ஏற்படும் ரணத்திற்கு இப்பழத்தின் ரசத்தை வாயில் ஊற்றிக்கொப்பளிக்கவேண்டும். குரல்வளையில் ஏற்படும் கஷ்டங்களுக்குச் சம அளவுள்ள தேனையும் எலுமிச்சம்பழச் சாற்றையும் கலந்து தடவைக்கு ஒரு ஸ்பூன் சாப்பிடவேண்டும்.

நாம் உட்கொள்ளுமாகாரம் மணமுடைத்தா யிருக்கவேண்டுமாயின் ஆரஞ்சு எலுமிச்சம்பழம் ஆகியவைகளின் தோலை வறுத்து அவைகளோடு உபயோகிக்கலாம். பித்தாசயத்தில் ஏற்படும் கஷ்டங்களுக்கு ஒருகிளாஸ் தண்ணீரில் இப்பழத்தின் சாற்றை ஊற்றிக் காலையும் மாலையும் சாப்பிட்டால் நிவாரணமாகும். தொண்டை வரண்டுபோனாலும் காய்ச்சலாயிருந்தாலும் சூடான பழத்தின் ரசத்தை உபயோகிக்கவேண்டும். வேண்டுமானால் இதோடு தேன் சேர்த்துக்கொள்ளலாம்; ஆனால் சீனியைச் சேர்த்துக் கொள்ளக்கூடாது. சொரி கரப்பானுக்குக் காடியைவிட எலுமிச்சம்பழத்தின்சாறே மேன்மையானது.

எலுமிச்சம் பழத்தில் கால்சியமென்ற பொருளும் அதிகமாகவிருக்கிறது. இந்தப் பொருள் பற்களும் எலும்புகளும் உறுதியாயிருப்பதற்கு மிக்க அவசியம். இதில் மெக்னீசியம் பொருளும் அதிகமாயிருக்கிறது. இது பல் எயிறு உறுதியாயிருப்பதற்கு அத்தியாவசியம். (செட்டிநாடு)



# சரீரம் ஐவகைப்படும்.

(குதுமலை சிவஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக்குருக்களவர்கள்)

1. காரண சரீரம்
2. கஞ்சுக சரீரம்
3. குணசரீரம்
4. சூக்குமசரீரம்
5. தூலசரீரம் என ஐவகைத்தாம்.

1. காரணசரீரமாவது:— அசுத்த மாயையைப் பதியின் சத்தியினால் அதிட்டிக்கப்படுகிற அனந்ததேவநாயனார் கலக்க அம்மாயை காரியமாதற் பொருட்டுக் கலக்குண்டிருக்கும். அதனை உதாரணத்தால் விளக்கவேண்டில், ஒருவிதை முளைக்கவேண்டிய பொழுது முளையெழுதற்கு முன் நீரோடுசேர அந்நீரின் செயலினால் அதிலுள்ள முறை முதலியவைகள் பொதுமையில் விரிவுறுதல்போலுமென்று கூறலாம். அப்படி மாயையிலிருந்து பொதுமையில் விரிவுறுதலாகிய கலக்குண்டபாகத்தை ஆன்மா அடையும்பொழுது ஆன்மாவுக்கு அது ஒரு சரீரமாகின்றது. அது காரியமாதலின்றிக் காரணரூபமாகவே யிருத்தலால் காரணசரீரமென்று சொல்லப்பட்டது.

2. கஞ்சுகசரீரமாவது:—பின்பு அம்மாயையிலிருந்து காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் ஐந்து தத்துவங்கள் தோன்ற ஆன்மா அவற்றோடுகூடிற்று. கலையினால் ஆன்மாவினது கிரியா சத்தி விளங்கிற்று. வித்தையினால் ஆன்மாவினது ஞான சத்தி விளங்கிற்று. அராகத்தினால் ஆன்மாவினது இச்சாசத்தி விளங்கிற்று. இம்மூன்று தத்துவங்களாலும் ஆன்மாவின் அறிவு இச்சை தொழில்கள் முழுவதுமல்ல ஏகதேசமாக விளக்கமாயின. அப்பொழுது நியதிதத்துவம் ஆன்மாவினது கன்மத்தை நிச்சயஞ் செய்யத் தொடங்கிற்று. காலதத்துவம் அதனை வரை செய்யத் தொடங்கிற்று. வரை செய்தலாவது அளவு படுத்துதல். இந்தஐந்து தத்துவங்களோடு கூடியபொழுது ஆன்மா அந்தமாகி இச்சாஞானக் கிரியைகளுடையதாய்க் கன்மப்பயனாகிய போகத்தை நுகர்தற்கு நானேகர்த்தா, போகத்தைப்புசிப்பவனாகிய போக்தாநானே யென்றெண்ணி அதனாலே ஒருகடிப்புறுதலால், அக்கடிப்புஒருமலமாகிப் பும்சத்துவமல மெனவாயிற்று. ஆன்மா அதனோடு கூடினமையால் புருடனெனப்பட்டான். புருடத்தன்மையையுண்டாக்கிய அவையாவும் பொதுமையிற் புருடதத்துவமென்று பெயராயின. இங்ஙனம் புருடத்தன்மையையடையும்படி செய்ததத்துவங்கள் ஆன்மாவுக்கு அந்நிலையில் ஏகதேசத்தை யுண்டாக்கிச்சட்டைபோலிருந்தமையால் அத்தத்துவங்களாய சரீரத்தைக்கஞ்சுகசரீரமென்றுசொன்னார்கள்.

3. குணசரீரமாவது:— அதன்மேல் முன் சொன்னதத்துவங்களுள் ஒன்றாகிய கலையிலிருந்து பிரகிருதி மாயை தோன்ற அதிலிருந்து முக்குணங்கள் தோன்றின. அம்முக்குணங்களோடு புருடன் சேர்ந்தான். அக்குணங்களுள்ளே, சத்துவகுணம் புருடனுக்குச் சிலவற்றைச் சுகமென்று காட்டிற்று. தாமதகுணஞ் சிலவற்றைத் துக்கமென்று காட்டிற்று. இராசதகுணம் அச்சுகதுக்கங்களில் மோகத்தையுண்டாக்கிற்று. ஆன்மா அநுபவிக்க வேண்டியசுகதுக்கங்களைஇம்முக்குணங்கள் பகுத்துக்காட்டுதலால், இவற்றோடுகூடிய நிலை ஆன்மாவுக்கு ஒரு சரீரமாயிற்று. அச்சரீரம் குணசரீரமெனப்பட்டது.

4. சூக்கும சரீரமாவது:— புருடனைப் போகத்தில் உள்முகமாகிய உயிர் முதலில் முக்குணங்களாற் சுகமென்றும் துக்கமென்றும் பகுத்துணர்தற்கு எதுவாய் நிற்கும். அப்படிச் சுகதுக்கங்களை நுகர்தற்கு எதுவாய் நின்ற புருடனுக்குச் சுகதுக்கரூபமாகப் புறத்திலிருந்து வரும் விடயங்களை இந்திரியங்கள் வாயிலாக மனம் பற்றி உள்ளே கொடுக்க, அகங்காரம் அவற்றை வாங்கிப் புத்தியிற்சேர்ப்பிக்கப்புத்திநிச்சயிக்கும். புத்தியினால் அவ்வாறு நிச்சயிக்கப்பட்டவைகளையே புருடன் முக்குணங்களோடு கூடி இது சுகம் இது துக்கமென்று விரும்பியுண்பன். அதனால் மனம் அகங்காரபுத்தி ஆகியதத்துவங்கள் புருடனுக்கும் இந்திரியங்களுக்கும் இடையில் உண்ணின்று தொழில் செய்தலால், அவை அந்தக்கரணம் எனப்பட்டன. மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் புறவிந்திரியங்களுக்குப் பிருதிவி முதலிய பஞ்சபூதங்கள் பற்றுக்கோடாய்த் தூல சரீரமாய் நிற்பதுபோல, அந்தக் கரணங்களுக்குச் சத்தஸ் பரிசரூபரசகந்தங்களென்னும்தன் மாத்திரைகள் அகத்தே பற்றுக்கோடாய் நிற்பதனாலும், அவை சூக்கும பூதங்களாயிருத்தலாலும் அந்தச் சூக்கும பூதங்களாகிய தன் மாத்திரைகளைந்தும் அவற்றோடு கூடி நின்று தொழில் செய்யும் அந்தக் கரணமூன்றுமாகிய எட்டுஞ் சேர்ந்து ஒரு சரீரமாகின்றது. அந்தச் சரீரம் சூக்கும சரீரமென்று சொல்லப்படும்.

இந்தச் சூக்கும சரீரம் சிருட்டிமுதல் சங்காரகால பரியந்தம் அழிவின்றி நிலையுடையதாயிருக்கும். புருடன் இந்தச் சூக்கும சரீரியாய் மேலுள்ள சுவர்க்காதிகளிலும், கீழுள்ள நரகபேதங்களிலும்; நடுவிலுள்ள பூமியிலும் போக்குவரவு செய்து அங்கங்கே ஒவ்வொரு தூல சரீரங்களை எடுக்கும். சுவர்க்கத்திலெடுக்குந் தூல சரீரம் பூதசார சரீரமென்று சொல்லப்படும். பூமியிலெடுக்குந் தூல சரீரம் பூதபரிணாம சரீரமென்று சொல்லப்படும். நரகத்திலெடுக்குந் தூல சரீரம் பூதசரீர மென்று சொல்லப்படும். இவ்வாறு தூல சரீரம் மூவகைப்படும். இத்தூல சரீரங்களெல்லாம் சூக்கும சரீரத்திலிருந்தேயுண்டாகும். அது எப்படியெனில்,

(வரும்)

உ

# திருத்தொண்டத்தொகையின் மகிமை.

(திருவல்லிக்கேணி திரு, நல். கண்ணப்ப முதலியாரவர்கள்)

தியாகராஜப்பெருமான் கட்டளைப்படி திருநாவலூர்க்கோனாகிய சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளிய "தில்லைவா ழந்தணர்தம் மடியார்க்கு மடியேன்" என்னும் முதலடியையுடைய திருத்தொண்டத்தொகையைப் பிறவிக்கஞ்சி வீடுபேற்றின் அவாமிக்குடையார் மந்திரமாகக்கொண்டு மயிர் சிலிர்த்து நைந்துருகி மெய்யன்பால் யாண்டும் எஞ்ஞான்றும் ஓதிவருவார்களாயின், அவர்கள் கைதவத்தினும், புல்லறிவினும், கற்பனையினும், மையலினும் பொருந்தாது அத்துவிதானந்த அகண்ட பரிபூரணத்தில் நித்தியமாய் வாழ்வது சத்தியம். பஞ்சாக்கரம் சிவமென்னும் ஒருபொருளையேகுறிக்கும். ஒரு சொல்லெனப்படும். சிவமந்திரமாய் நிற்பதுபோல் திருத்தொண்டத் தொகையுட்பட்ட நாமங்கள் பலவாயினும் அவையெல்லாம் சிவானுபூதியைத்தருதற்குஒருமந்திரமேயாகவமைந்தது.

சிவபெருமானருள்வேண்டிச் சிவனடியை யர்ச்சித்தற்கு சிவமந்திரம் மலராயிருப்பதுபோல் அன்பு வேண்டியர்ச்சிப்போர்க்கு நாயன்மார் திருநாமக்கோவையாகிய திருத்தொண்டத்தொகை மந்திரமாயமைந்தது.

பஞ்சாட்சரத்தில் ஆகமப்பொருள், ஆரணப்பொருள், புராணப்பொருள், ஆனந்தத் தாண்டவப்பொருள், மோனானந்தமாகிய முத்திப்பொருள் ஆகிய ஐம்பொருளும் நிறைந்திருப்பதுபோல், சிவஞானசாதனம், சிவஞானப்பேறு, சிவானுபவம், சிவானந்தம், அன்பு ஆகிய ஐவகையமைந்துள்ளன. எனவே சிவஞான சாதனத்தாற் சிவப்பேறும், சிவப்பேற்றால் சிவானுபவமும், அச்சிவானந்தம் நீங்காதிருக்கச் செய்யவல்ல அன்பும் பெறத்தகும்.

சிவனடியார் என்று சொல்லப்படுகிற ஒவ்வொரு அன்பரும் தினந்தோறும் காலைமாலை உச்சிக்காலபூஜைகளில் திருத்தொண்டத்தொகை ஆரம்பமுதல் திருக்கடைக் காப்பு இறுதியாயுள்ள பதினொரு திருமந்திரங்களைச் செபித்து அதனாலடையும் பயனாகிய சிவப்பேறெய்துவார்களாக.

உ

# ஐய வினா

## சிதம்பர தத்துவம்.

1. சிதம்பரம் ஸ்ரீ நடராஜப்பெருமானை மூலஸ்தானமாகக் கருதுவதா? அன்றி உற்சவமூர்த்தியாகக் கருதுவதா? மூலஸ்தானமாகக் கொள்ளின், உற்சவங்கொண்டெழுந்தருளுவதேன்? அன்றியும் ஸ்ரீ மூலநாதர் என மூலலிங்கம் தனியே இருக்கின்றதே. அதன் உண்மை என்ன?

2. உற்சவ மூர்த்தியாகக் கொள்ளின், துவஜாரோகண முதலிய எல்லா வுபசாரங்களும் நடராஜப்பெருமானுக்கே நடப்பதேன்?

3. எல்லாத்தலங்களிலும் விநாயகரை முன்னதாகக்கொண்டு வீதிக்குச் சுவாமி எழுந்தருளிவரச்சிதம்பரத்தில் மட்டும் விநாயகரை இறுதியில் கொண்டு சுவாமிகள் ஏன் எழுந்தருளவேண்டும்?

4. சிதம்பரம் சிற்சபையில் நடராஜப்பெருமான், சிவகாமசுந்தரி என்றும், மூலஸ்தானத்தில் ஸ்ரீ மூலநாதர் உமையபார்வதி என்றும் தனித்தனியே சுவாமிதேவியாரிருக்க, இவை யிரண்டுமன்றித் தனியேசிவகாமசுந்தரிக்குச் சிவகெங்கைக்கு மேற்கே தனித்து ஒரு ஆலயம் வகுக்கப்பட்டிருக்கின்றது ஏன்?

5. பிரமாவுக்குத் தனி ஆலயமின்மையால் சண்டேசுரர் ஆலயத்தில் இடம் வகுத்துப் பிரதிஷ்டித்திருப்பதாகவும் அதனால் பிரம சண்டேசர் என்று பெயரும் சொல்லப்படுகிறது. ஆனால் அம்பாள் ஆலயத்திலும் இதுபோல் இரண்டு மூர்த்திகள் காணப்படுகின்றன. அவற்றின் பெயர்களும் சரித்திரமும் என்ன?

இதனைக்கண்ணுறும் அன்பர்கள் தாங்களாகவேனும் அல்லது அறிந்துள்ள பெரியார் வாயிலாகக் கேட்டுணர்ந்தேனும் விடைகளை இப்பத்திரிகை வாயிலாக வெளியிடுமாறு பெரிதும் விரும்புகின்றேன்.

சந்தேகி.

உ

# ஹிந்திமொழிக் கண்டனம்.

திருநெல்வேலியில் ஏற்படுத்தியிருக்கும் தமிழ்ப் பாதுகாப்புச் சங்கத்தின் சார்பில் 5—9—37 ஞாயிற்றுக்கிழமை காலையிலும் மாலையிலும் கீழரத வீதியிலிருந்து ஒரு ஊர்வலம் புறப்பட்டுத் தமிழ்மொழி வாழ்க, தமிழ் மக்கள் வாழ்க, தமிழ் நாடு வாழ்க என்ற முழக்கத்துடன் தமிழ்த்தாய் வாழ்த்துகளைப் பாடிக்கொண்டு நகரின் முக்கிய வீதிகளின் வழியாகச் சென்று மாலை 7-மணிக்கு ஸ்ரீ மந்திரமூர்த்தி ஹைஸ்கூல் மைதானத்தில் ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று. அப்பொழுது இந்திமொழி கட்டாயப் பாடமாக்குவதால் வருந் தீங்கை விளக்கி, அதைத் தமிழ்மக்கள் யாவரும் எதிர்த்தொழிக்க வேண்டுமென்ற அறிக்கைகள் எல்லோருக்கும் வழங்கப்பட்டன.

கூட்டத்திற்குத் தலைமை வகித்த திருவாளர் டாக்டர் R. V. சொக்கலிங்கம் பிள்ளை (M. B. B. S.) அவர்கள் இந்திமொழி கட்டாயப் பாடமாக்குவதால் வருந் தீங்கையும் அதனால் தமிழுக்குந் தமிழ் மக்களுக்கும் உண்டாகுங் கெடுதியையும் எடுத்து விரிவாகக்கூறியதின் சாரமாவது:—

தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்குத் தடையாகவிருக்கும் இந்தியை வலியப் புகுத்துவது கொடுஞ் செயலாகும். பத்துப்பதினொரு வயதுள்ள சிறுபிள்ளைகளுக்கு இரண்டு அயல்மொழிகளைக் கட்டாயப்பாடமாக வைத்துப் படிக்கும்படி செய்வது எந்த நாட்டிலுமில்லாத செயலாகும். ஏற்கனவே எத்தனையோ தமிழறிஞர்களும் தமிழ்ச்சங்கங்களும் பெருமுயற்சிகள் செய்தும், இன்னும் நமது தாய்மொழி கட்டாயப்பாடமாக்காத இந்நிலையில் பிறமொழிகளை வலுவிற் புகுத்திப் படிப்பிக்கச் செய்வது மாணவர்களின் தகுதிக்கும் அறிவிற்கும் ஏற்றதாக இல்லாததோடு மாணவர்க்குத் தாய்மொழிப் பற்றுச் சிறிதும் உண்டாகமாட்டாது. தேசீய ஆட்சி ஏற்பட்டிருக்கும் இக்காலத்தில் அந்தந்த நாட்டினர்க்குரிய தாய்மொழியே கட்டாயப்பாடமாகச் செய்யவேண்டும். அதுவே நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் உண்டாக்குஞ் செயலாகும். தேசீய ஆட்சிபெற்ற மற்ற ஐந்து மாகாணங்களிலும் இந்தியைப்பற்றிய பேச்சே இல்லாதிருக்க, நம்சென்னை மாகாணத்தில் மட்டும் இந்தியைக்கட்டாயப்பாடமாக்க வேண்டிய அவசியம் என்னவிருக்கிறது? நமது முதன் மந்திரியார் இந்தியைப்பற்றி இவ்வளவு அவசரமாகச் செய்யும் முயற்சியானது தமிழ் மக்களால் நன்கு யோசிக்கத்தக்கது.

நாம் என்ன செய்கிறது. வருவதை அநுபவிக்கவேண்டியதுதான் என்று இருப்போமானால் தமிழ்மொழியும் அம்மொழிபேசுந் தமிழ்மக்களும் அழிந்தொழிய வேண்டியதுதான். ஆதலால் ஒவ்வொரு தமிழ் மகனும் இதை எதிர்த்தொழிக்கும் முயற்சியில் உடனே முற்படவேண்டும். இம்முயற்சியால் நாட்டில் குழப்பங்களும் பிளவுகளும் ஏற்படும் என்பதைச் சென்னை அரசியலார் கவனித்து, இம்முயற்சியை விட்டுத் தமிழ்மொழியைக் கட்டாயப்பாடமாக்குவார்களென நம்புகிறேன். இல்லாவிடில் சென்னைக் கவர்னரவர்கள் தமது விசேஷ அதிகாரத்தால் தடைசெய்யட்

டும். அதுவுமில்லையானால் ஆறிலுஞ்சாவு நூறிலுஞ் சாவு என்று நாம் பார்த்துக் கொள்ளவேண்டியதுதான் என உருக்கமுடன் பேசிமுடித்தார்கள்.

பிறகு திருவாளர், M. V. செல்லையப்பபிள்ளையவர்கள் தமிழ்மொழியின் தற்கால நிலைமையைப் பற்றிப் பேசுகையில், சென்ற நூற்றைம்பது ஆண்டுகட்கு மேலாக ஆங்கிலமோகங்கொண்டுதமிழ்மொழியைப் புறக்கணித்தபடியாற்றான் நந்தமிழ்மொழியிலுள்ள அரும் பெருங்கருத்துக்களை உணராமல் கஷ்டப்படுகிறோம். ஆங்கிலங் கற்றுப் பெரிய உத்தியோகத்திலிருப்பவர்களும் சரியான வாழ்க்கை நடத்துகிறார்களா? தாழ்ந்த மக்களிடத்தில் அன்புடன் நடந்து, அவர்களோடு கலந்து வாழ்கின்றார்களா? எத்துறையிற் பார்த்தாலும் சீர்கேடாகவே காணப்படுகிறது. இதற்கெல்லாம் நம் தாய்மொழிக் கல்வியில்லாமையே காரணமாகும். நமது முன்னோர்கள் ஆங்கிலமோகத்தால் தமிழுக்குண்டான தீங்கை எண்ணி நாம் வருந்துவது போலவே, நம் பின்னோர்கள் நம்மீது பழி சுமத்துவார்கள். ஆதலால் பெருமுயற்சி செய்து தமிழ் மகன் ஒவ்வொருவனும் தமிழைக் கட்டாயப் பாடமாக்கும் விஷயத்தில் பாடுபடவேண்டும் என்றுங் கூறி முடித்தார்கள்.

பின்னர், திருவாளர் M. S. பூர்ணலிங்கம் பிள்ளையவர்கள் தமிழ்மொழி கட்டாயப்பாடமாக்கவேண்டியதை விரிவாக எடுத்துக்கூறி 1902, 1903ல் கவர்ன்மெண்டார் சமஸ்கிருதத்தைக் கட்டாயப்பாடமாக்கத் தீர்மானித்திருப்பதைக் கேட்டு, சென்னையில் ஒரு பெருங் கூட்டங்கூட்டித் தமிழ்மொழியைத்தான் கட்டாயப்பாடமாக்க வேண்டுமென்று நாங்கள் பேசினோம். கடைசியில் இங்கு வந்திருக்கும் அறிஞர் கூட்டத்தில் சமஸ்கிருதம் பேசக்கூடியவர்கள் 100-க்கு இருவராவது உண்டா? பேசுபவர் இருந்தால் சமஸ்கிருதமே கட்டாயப் பாடமாக்கலாம் என்று ஒருகேள்வி கேட்டோம். ஒருவரும் காணவில்லை. அதுபோல, இன்று இந்தி நம் நாட்டிற்கு வந்திருக்கிறது. அதில் 100-க்கு இருவராவது பேசக்கூடியவர்கள் இருக்கின்றார்களா? இல்லையே. ஆதலால் தமிழ் மொழி சீர்கேடடைந்து இருக்கும் இந்நிலையில் தமிழை எல்லோரும் படிக்கவேண்டுமென்ற கட்டாயப்பாடமல்லவா செய்தல்வேண்டும். அதைவிட்டுக் காரியத்தில் ஒரு பயனுங் கொடாத இந்தியைக்கொண்டு வந்து புகுத்துவது சிறிதும் அடாதசெயலாகும் என்றுங்கூறினார்கள். பிறகு திருவாளர்களான வித்துவான் பு. சி. புன்னைவனநாத முதலியார், வள்ளல் சிவஞானதேசிகர் முதலியோர்தமிழ்க் கல்வி கட்டாயப்பாடமாகவேண்டிய அவசியத்தை எடுத்துக்கூறினார்கள். முடிவில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

1. பள்ளிக்கூடங்களில் முதல் மூன்று பாரங்களில் (6, 7, 8-ம் வகுப்புக்களில்) ஹிந்தி மொழியைக் கட்டாயப்பாடமாக்கச் சென்னை மாகாண அரசியலார் முயன்று வருவதை இத்தமிழர் கூட்டம் பலமாகக் கண்டிக்கிறது. இது M. S. பூரணலிங்கம் பிள்ளை B. A. L. T. அவர்களால் பிரேரிக்கப்பட்டு M. V. செல்லையப்ப பிள்ளை B. A. அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.



2. A. தமிழ் ஜில்லாக்களிலுள்ள பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் எல்லா வகுப்புக்களுக்கும் தாய்மொழியாகிய தமிழ்மொழியை இன்னும் கட்டாயப்பாடமாக்கும் விஷயமாகத் துரைத்தனத்தார் அசட்டையாயிருப்பது குறித்து இக்கூட்டம் மிகவும் வருந்துகிறது. இனியேனும் விரைந்து தமிழ்மொழியை எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் கட்டாயப் பாடமாக்குமாறு அரசியலாரை இக்கூட்டம் வேண்டுகிறது.

2. B. ஆங்கிலமொழிப்பாடம் ஒழிந்த ஏனைய பாடங்களை யெல்லாம் தமிழ் மொழியிலன்றி வேறு எம்மொழியாலும் கற்பிப்பது முறையற்றது என்று இக்கூட்டம் கருதுவதுடன், சரித்திரபாடத்தை இந்தி மொழியினால் எழுதிப் படிப்பிக்க வேண்டுமென்று யோசனை கூறுவது, தூய பழைய தமிழ்ப்பயிற்சி யறிவையும், தமிழரையும் அவமதிப்புச்செய்வதாகும் என்று கருதுகிறது. வள்ளல் சிவஞான தேசிகரால் முன்மொழியப்பட்டு, வித்துவான் பு. சி. புன்னைவனநாதமுதலியாரால் ஆமோதிக்கப்பட்டு எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் பட்டது.

3. இக்கூட்டம், குற்றாலத்தில் வைத்துத் தாய்மொழிப்பாதுகாப்பு விஷயத்தை ஆதரித்துப் பேசிய திருவாளர் நாடிமுத்துப் பிள்ளையவர்களுக்குத் தன் நன்றியறிதலைத் தெரிவிக்கின்றது. ஆயினும், தமிழ் இலக்கியத்திற்கும், மொழிவளர்ச்சிக்குமே தம் அரியவாழ்நாளைத் தத்தஞ்செய்து வருகின்ற பெரியாராகிய திரு. உமாமகேசுரம் பிள்ளையவர்களது வேண்டுகோட்கிணங்கி அவர்களமைத்த பொதுக்கூட்டத்துடன் ஒத்துழைக்க மறுத்தமைக்கு வருந்துகின்றது. அவர்கள், கொள்கைச் சுதந்திரம் மலிந்துள்ள இந்நாளிலுங் கூடக் காங்கிரஸ் அதிகாரிகளின் கட்டுப்பாட்டிற் கஞ்சித் தம் மனோபாவத்தை விட்டுக் கூறத் தயங்கியதைக்கேட்டு வருந்துகின்றது என்ற தீர்மானம் திருவாளர் K. அப்பாத்துரைப் பிள்ளை (B. A. Hons) அவர்களால் முன் மொழியப்பட்டு, திருவாளர் வ. திருவரங்கம் பிள்ளையவர்களால் ஆமோதிக்கப்பட்டு நிறைவேறியது.

4. சென்னை அசெம்பிளியில் 1-முதல் 3-பாரங்களில் ஹிந்திமொழியைக் கட்டாயப் பாடமாக்கும் பிரேரணையை அரசியலார் கொண்டுவருவது தென் இந்தியாவில் வழங்கும் தமிழ்மொழி நலத்திற்கும், அதனைப் பேசும் தமிழ் மக்கள் நலத்திற்கும் கேடு பயப்பதாயிருத்தலால் அந்தப் பிரேரணையை அசெம்பளியில் பிரேரிக்க வொட்டாது தடுக்கும் தங்கள் விசேஷ அதிகாரத்தை உபயோகிக்கவேண்டுமென்று மாட்சிமிக்க மாகாண கவர்னர் அவர்களை இக்கூட்டம் தாழ்மையாய்ப் பிரார்த்தித்து வேண்டிக் கொள்கிறது. இத்தீர்மானம் தலைவரவர்களால் கொண்டுவரப்பட்டதை வித்வான் S. G. மதுரைநாயகம் அவர்களால் முன் மொழியப்பெற்று, திரு. தங்கவேலு அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேறியது.

5. இக்கூட்டம் மேற்கண்ட தீர்மானங்களை மாட்சிமிக்க சென்னை மாகாண கவர்னர் பெருமானுக்கும், அரசியல் முதல் மந்திரியாருக்கும், கல்வி மந்திரியவர்கட்கும், பத்திரிகைகளுக்கும் அனுப்பி வைக்கும் உரிமையைச் சங்கக் காரியதரிசிக்குக் கொடுப்பதாகத் தீர்மானிக்கிறது. இது

தலைவர் டாக்டர் R. V. சொக்கலிங்கம் பிள்ளையவர்களால் பிரேரிக்கப்பட்டு எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

முடிவில், வள்ளல் சிவஞானதேசிகர் அவர்கள், கூட்டத்தலைவர் அவர்கட்கும், கூட்டத்திற்கு வந்திருந்த எல்லோருக்கும் நன்றி கூறினார்கள். கூட்டம் இரவு 9½ மணிக்கு முடிவடைந்தது.

10—9—37 இரவு 9-மணிக்குத் தமிழ்ப்பாதுகாப்புச்சங்க ஆதரவில், மேலைப்பஜாரில், இவ்வூர்ப் பிரபல வர்த்தகரும், தமிழன்பருமாகிய திருவாளர், மு. சுப்பிரமணியன் செட்டியாரவர்கள் தலைமையின் கீழ் 'ஹிந்தி' மறுப்புக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. குறித்த கருத்தைத் தலைவரவர்கள் தெளிவாகக் கேட்பவர் மனத்தில் பதியத்தக்க விதமாய்ப் பேசினார்கள்.

பின்பு ரிட்டயர்டு(Retired) தாசில்தார் M. V. நெல்லையப்பபிள்ளையவர்கள் தமிழ்த்தொன்மொழி, எல்லா வளங்களும் நிறையப்பெற்றது. அதனைக் கட்டாயப்பாடமாக்காமல் இதுவரை தாழ்த்தது நியாயமன்று. இனி உடனே தமிழைக்கட்டாயப்பாடமாக ஆக்கித்தருமாறு அரசியலாரைக் கேட்கிறோம் என்று பேசினார். பின்னர் டாக்டர் R. V. சொக்கலிங்கம் பிள்ளையவர்கள் பேசியதில் காங்கிரஸ் வெற்றிபெற்ற ஏழுமாகாணங்களில் தமிழ் மாகாணமாகிய சென்னை மாகாணத்தில் மட்டும் ஏன் கட்டாயப் பாடமாக்க வேண்டும். உலகப் பொதுமொழியாக ஆங்கிலத்தையும் தேசப் பொதுமொழியாக ஹிந்தியையும் இரண்டு பெருஞ் சுமைகளை மாணவர்கள் தலையில் வற்புறுத்துவது எவ்வளவு பெரிய அநீதி. ஆங்கிலம் வேண்டுமானால் ஹிந்தியை ஒழிக்கவேண்டும் ஹிந்தி வேண்டுமானால் ஆங்கிலத்தை ஒழிக்கவேண்டும் என்று கூறினார்.

இக்கூட்டம் நடைபெறும்பொழுது அஹிம்சாதர்மம், சுதந்தர வாழ்க்கை இவைகளையே தலைமையான நோக்கமாகக் கொண்ட காங்கிரஸ் வாலிபர் சிலர் இடையிடையே குசுகுசுவென்று இரகசியங்கள் பேசுவதிலும் சிரிப்பதிலுமாக நின்றார்கள். ஒருவர் இந்தக் கூட்டத்தின் நோக்கத்திற்கு மாறாக மதசம்பந்தமான சிலகொள்கைகளை எழுதிக்கொண்டுவந்து டாக்டர் அவர்கள் கையில் கொடுத்தார். அவர் இந்தக் கேள்விகள் என்னைமட்டும் சார்ந்திருக்கின்றன. கூட்டத்திற்குச் சிறிதும் சம்பந்தமில்லை. ஆகையால் இதற்குப் பதில் நான் சொல்லவேண்டிய அவசியம் இப்பொழுது ஏற்படவில்லை. அரசினர் துறையில் வேறெதிலும் நாங்கள் தலையிடவில்லை. கனம் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்களை நாங்கள் மேற்கொள்ளுகிறதென்னவென்றால், தமிழைக் கட்டாயப்பாடமாக்கவும் அவசியமானால் ஹிந்தியை விருப்பப்பாடமாக்கவும் தாழ்மையாய்க் கேட்டுக்கொள்கிறோம் என்று கூறிமுடித்தார்கள். முற்குறித்த காங்கிரஸ் இளைஞர் சிலர் சில கேள்விகளைக் கேட்க முயன்றார்கள். கூட்டத்தில் வந்து பேசும்படி கேட்டதில் ஒருவரும் முன்வரவில்லை. கூட்டத்தினரின் பொறுமை அந்நிகழ்ச்சியைத் தடைபண்ணியது. கூட்டம் அத்துடன் இனிது முடிவெய்தியது.

—ஈழகேசரி.

உ

# "நாட்டின் முன்னேற்றம் அந்நாட்டு மொழியை வளர்ப்பதே"

(தில்லைத் தமிழ்க் கழக முதல்ஆண்டுவிழாவில் தலைமை வகித்து நச்சாந்துப்பட்டி பெருந்திருவாளர், பெ. ராம. ராம. சிதம்பரம்செட்டியார் அவர்கள் நிகழ்த்திய விரிவுரை:—)

ஸ்ரீமந் நடராஜப்பெருமானுடைய திருவருள் விலாசம் நிறையப்பெற்ற சிறந்த திருத்தலமாகிய இந்நகரில் சிறந்த கல்வியாளர்களாகிய உங்களால் நிறுவப்பெற்று அப்பெருமான் திருவருட்பாங்கால் நடைபெற்றுவரும் "தில்லைத் தமிழ்க் கழகம்" என்னும் இச்சபையின் ஆண்டுவிழாநிமித்தம் இங்கு கூடியிருக்கும் இப்பெருங் கூட்டத்தில் என்னைத் தலைவனாக இருக்கும்படி என் நண்பர்களாகிய இக்கழக வுறுப்பினர் எனக்கு இட்ட கட்டளையை மறுத்தற்கு அஞ்சி, தகுதியில்லாத நிலையிலும் ஏற்றுக்கொள்ளத் துணிந்ததற்குக் காரணம் அறிவுடைப் பெரியோர்களாகிய உங்களோடு கலந்து நம் தமிழ்மொழியின் இன்பத்தை அனுபவிக்க வேண்டுமென்னும் பேரார்வமேயாகும்.

இத்தில்லைத் தமிழ்க்கழகம் ஓராண்டு நிரம்பப்பெற்ற குழவிப் பருவம் உடையதாகவுள்ளது. இச்சிறு பருவத்தே இக்கழகம் செய்துவரும் நற்செயல்களை இப்பொழுது இதன் அமைச்சரால் படிக்கப்பட்ட அறிக்கையாலும், இதன் உறுப்பினராகிய என் நண்பர்களாலும் அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். பிற நகரங்களில் தோன்றும் பல்வேறு கழகங்களிலும் இந்நகரில் நிறுவப்படுங் கழகங்களே மிகவும் சிறந்தனவாகு மென்பதை, இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவன் சபாநாயகர் என்னும் பெயருடையாராய்ச்சபைத்தலைமைஏற்று விளங்குவதே தெரிவிக்கும்.

இக்காலத்தில், நம் தமிழ் அன்பர்களுள் தனியே ஆங்கிலங் கற்றோரும், தனித்தமிழே கற்றோருமாகக் காணப்படுபவர் பலராவர். இரண்டு மொழிகளையும் ஒருங்கு கற்றவர் மிகச் சிலரேயாவர். ஆங்கிலம் வல்லவர் தம் தாய்மொழியாகிய தமிழைப் புறக்கணித்தலும், தமிழறிஞர் ஆங்கிலம் வல்லாரோடு பழகி அம்மொழியிலுள்ள நல்ல கருத்துக்களை அறிந்துகொள்வதில் பராமுகராகவிருத்தலும் நம்மனோர் அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் தடையாகு

மென்பது யாவரும் ஒப்புக்கொள்ளத் தக்கதே. இந்நிலையிலுள்ள இவ்விருதிறத்தாரும் தாம் தாம் அறிந்த நல் பொருள்களைக் கொண்டுங் கொடுத்தும் உள்ளம் ஒத்த அன்பினராக ஒருங்குகூடி அனுபவிக்கும் இன்பமே நம் வாழ்க்கையிற் சிறந்த தொன்றாகும்.

ஒரு மொழியைப் பரிபாலிப்பதென்பது அம்மொழியிலுள்ள உயர்ந்த நூல்களைச் சுவை நலம் உணர்ந்து கற்பதேயாகும். அங்ஙனம் கற்றுணர்வதைக்கைவிட்டுமொழியைப்பேணுகின்றோமென்று சொல்பவர்கள் உண்மை அபிமானம் உடையவராகார். ஒருநாடு முன்னேற்றம் அடைவதற்குரிய துறைகள் பலவாக விருப்பினும் அவற்றுளெல்லாம் சிறந்தது அந்நாட்டு மொழி முன்னேற்றம் அடைய முயல்வதேயாகும். இத்துறையில் இக்கழகம் செய்து வரும் பணிகளை அறிந்து மிகவும் பாராட்டுகின்றேன்.

தமிழ் மொழியின் தொன்மையும் சிறப்பும் சொல்லுதற்கரியனவாகும். தமிழ் அரசர்களால் இத்தென்னாடு ஆட்சி செய்யப்பட்டுவந்த காலத்தில் இம்மொழி அரசியல் மொழியாகவும் விளங்கியது. சைவ சமய குரவர்களாலும் ஆழ்வார்களாலும் தெய்வ மணங் கமழும் பாசுர வடிவமாக வெளிப்பட்டுத் தெய்வீக மொழியாகவும் விளங்கியது. ஒருமொழிக்கு ஒரேகாலத்தில் இவ்விரண்டு முதன்மையும் அமைந்திருப்பின் அது நிகரற்ற சிறப்புடையதாக விளங்கியிருக்குமென்பதை எளிதில் உணரலாம். இக்காலத்தில் இச் செந்தமிழ்மொழிக்கு அவ்விரண்டினுள் ஒன்றாகிய அரசியல் சம்பந்தம் இல்லாமை ஒரு பெருங்குறையேயாகும். இக்குறைநாட்டு நலம் பேண வெழுந்த காங்கிரஸ்மகாசபை ஆட்சியில் ஒழிந்துவிடலாம்என்று எதிர்பார்த்ததுண்டு. அதற்கு மாறாக நம் சென்னை மாகாணத்துமுதல்அமைச்சர் "ஹிந்தி மொழியைக் கட்டாயப்பாடமாக்கப் போகின்றோம்." என்று சமீப காலத்தில் சில இடங்களில் வற்புறுத்திப் பேசிய செய்தி தமிழன்பர்களின் மனத்தை வருத்தமுறச் செய்கின்றது. ஒருபுறம் ஆங்கில மொழியில் நெருக்குண்ட தமிழன்னை தன் மக்கள் ஆட்சிக்காலத்திலாவது தனக்கு நலம் விளையுமென்று விரும்பியிருக்க ஹிந்தி மொழியால் மற்றொருபுறமும் தாக்கப்படுவாளாயின் அவ்வன்னையின் எதிர்கால நிலைமையெவ்வாறாகுமென்பதை நீங்களே சிந்தித்துப்பாருங்கள். ஹிந்தி கட்டாயப்பாடமாகஇல்லாமல்இஷ்டப்பாடமாகப் பயிலப்படுமாயின் நந்தமிழ்மொழி வளர்ச்சிக்குத் தடையாக மாட்டாதென்று எண்ணுகிறேன். ஆகவே தற்காலம் ஹிந்தியால் நேர விருக்கும் தடைக்குப் பரிகாரந் தேடவேண்டுவது தமிழர் கடமை யென்பதை ஞாபகப் படுத்துகிறேன்.



ஒரு மொழிக்கு அமைய வேண்டிய இலக்கணங்களெல்லாம் நிரம்பப்பெற்ற நம்செந்தமிழ்த்தெய்வமொழியானது, தனக்குஇயல்பின் அமைந்த ஆற்றலாலும் தன்னைப்பேணும் உண்மைத் தமிழன்பர்களது துணைவலியாலும் ஏதுங்குறைவின்றி விளங்குமென்னும் உறுதிப்பாடுடையேன். அதற்கு இத்தில்லைக் கழகம் பெரிதும் ஆதரவளிக்கும் என்று எதிர் பார்க்கின்றேன். இக்கழகமும் இதன் அன்பர்களும்நீடூழிவாழ்க! என்னை இப்பணியில் ஈடுபடச்செய்து கௌரவித்த இக்கழகத்து அன்பர்களுக்கு என் நன்றியறிதலைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

# சுவாதீனம் அல்லது வெற்றிக்கோடி.

(போத்தனூர் வைத்தியர் திரு. R. வேங்கடநாராயண சர்மா அவர்கள்.)

"துணைநல மாக்கந் தரூஉம் வினைநலம்
வேண்டிய வெல்லாந் தரும்" (திருக்குறள்)

எல்லா உலகமும் கருணைக் கடலான கடவுளின் வசமாம் என்ற உண்மையை, 'தெய்வாதீனம் ஜகத் ஸர்வம்', 'அவனன்றி யோரணுவு மசையாது' என்பனவாதிய ஆப்தவாக்கியங்களால் அறிவுறுத்திய நம்மவர்களைப் புறம்பானவர்களும் போற்றுகிறார்கள்.

ஆனால் ஒரே காரியத்திற்கு ஒரே காலத்தில் அனைவரும் அதிகாரிகளாயிருத்தல் முடியாதென்ற முடிவைப் புறக்கணித்து ஜாதிசமயங்களெல்லாம் ஒன்றே என மயங்கிப் பலர் ஏமாறுகிறார்கள். அவர்கள் ஏமாறுவதோடு நில்லாமல் மற்றவர்களையும் ஏமாற்றமடையச் செய்கிறார்கள். அந்தோ! என்னே இவர்களது நிலைமை? இறைவன் அருள் பாலிப்பாராக. எந்தத் தெய்வீக புத்தியை அஸ்திவாரமாகக்கொண்டு சுவாதீனம் கோருகிறவர்கள் வினை நலம் செய்கிறார்களென்று அவரவர்களே சிந்தித்துப் பார்க்கட்டும்,

கல்வியாலறிவும், அறிவாலாற்றலும், ஆற்றலால் மெய்ப்பொருளும். மெய்ப்பொருளாலின்பப்பேறும் பெறப்படுகின்ற நிலைகள் நூல்களில் நேர்த்தியாக நுவலப்பட்டிருக்கின்றன. கற்றதனாலாய பயனை நற்றாள் தொழுதலிற் பதித்தும், மெய்ப்பொருள் காண்பதறிவு என்று அறிவிலக்கணத்தையும், 'ஒருமையுளாமை போலைந்தடக்கலாற்றின், எழுமையுமே மாப்புடைத்து' என்று ஆற்றலின் பெருமையையும், 'இருணீங்கி யின்பம் பயக்குமருணீங்கி, மாசறு காட்சியவர்க்கு' என்று இன்பப்பேற்றின் தன்மையையும்விளக்கிப்போந்த குறட்பாவைக்கூர்ந்துணர முடிவானஎல்லையில்லா இன்பப் பேற்றின் சமநிலைக்கு ஏறும்படிக்கட்டுகளே மதங்கள் என விளங்கும். மதமின்றி எக்காரியத்தை எம்மனிதன் எக்காலத்தில் சாதித்து

ளான்? பதார்த்த பரிசோதனைகளில் தேர்ந்து சுவாதீன மடைந்துள்ளோர் வந்து புகவேண்டிய இடம் மதமேயாகும். எம்மதங்களையும் தம்மதத்து ளடக்கிய சிகரமான சைவ சமயம் மலைமாட்சி யென்ற ஆசிரியரிலக்கணம் போன்று மலைமேலாய் போற்றியெனப் போற்றப்படுகிறது. "தன்னை யார்க்கும் அறிவரியான் என்றும் மன்னிவாழ் கயிலைத் திருமாமலை" என்ற பெரிய புராணத் திருமலைச் சிறப்பை உன்னுக.

உண்மையான சுவாதீனம் வேண்டுவோரனைவரும் பொதுவான (இந்து) மதக்கொள்கையுடையவர்களேயாவர். 'யான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக' என்பதல்லவோ கொள்கை. "சாதுக்கள் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே" (சம்பந்தர்) "மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே (திருவாசகம்) "சேரவாரும் சகத்தீரே" (தாயுமானவர்)

பல மன்னர்களையும் தமது புயபலத்தால் தலைவணங்கச் செய்து வெற்றிக்கொடி நாட்டும் வேந்தர்களும் தேசேந்திரியாதி பஞ்சமலப் போரில் தலைகீட்டவல்லவரில்லை யென்றால், அப்போரிலும் வெற்றியுற்ற மதமார்க்க தரிசிகளான பெரியோர்களைப் பேணாது, எவ்வெற்றிக்கு எம் மதம் செல்கின்றீர்? நோக்குக!

அலங்காராதி ஆடம்பரங்களாலடையப்படாத அரன் அன்பினாலே அடையப்படுதல் போலச் சுவாதீனமும் அப்பியாசத்தாலேயே அடையப்படுகின்றது. அப்பியாசமாவது, அன்பு நிறைந்த உண்மை ஊழியங்களேயாம். மதத்தில் புகுந்தாலன்றி மாறுபடா உண்மை ஊழியங்களையுணர முடியாது. மதத்தால் ஐவகைப் பயத்தினின்றும் பிரஜைகளைப் பரிபாலிக்கும் அரசனை ஆட்டுவிக்கும் அதிகார புருஷன் யாரென்பதை உணர அப்பொழுது நாம் சொல்லும் பாதை நலமானதாகவிருக்கும்.

வெற்றிக்கொடி யென்பது சுவாதீனத்தின் அறிகுறியாகும். இது மேம்பாடான நிலை. "விடைகாட்டும் கொடியானே" (சம்பந்தர்) கோவில்களிலே நாட்டப்பட்டிருக்கும் கம்பத்தினுச்சியில் கட்டப்படும் கொடியேற்றவிழா நம் நாடறிந்ததே. உமாபதி சிவாசாரியார் அருளியுள்ள கொடிக்கவியின் பெருமையும் மேலோர் அறிவர். இவற்றானே விளங்குவது இறைவனே முதல்வன்; அவன் வழியே மதம்; அம்மதமே காரிய சித்திக்குச் சம்மதம். இது முக்காலும் சத்தியம். இக்குறிப்பையுணர்ந் தொழுகின் சுவாதீனம் சித்தம். "அரன் நாமமே சூழ்க வையகமும் துயர் தீர்கவே" (திருஞானசம்பந்தர்)

"சேவார் வெல்கொடிச்சிவனே போற்றி" (மாணிக்கவாசகர்)

உ

# இன்னும் அறியேன்!

(சென்னை மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உயர்திரு, உ. வே. சாமிநாதையரவர்கள்)

தமிழ் ஆராய்ச்சியில் நான் ஈடுபட்ட பிறகு தமிழ் ஏட்டுச்சுவடிகளைத் தேடுவது என் வாழ்க்கையில்ஒரு முக்கியமான வேலையாகிவிட்டது. அச்சிட்ட புத்தகமோ, அச்சிடாததோ எதுவானாலும் சுவடியின் உருவத்திலே காணும்பொழுது ஏதோ தெய்வத்தின் உருவத்தைக் காண்பது போலவே நான் எண்ணுவது வழக்கம். சுவடிகளைத் தேடி அவை இருக்குமிடம் சென்று மூலை முடுக்குகளிற் கிடக்கும் அவற்றைத் தொகுத்து ஆராய்வதில் என் உள்ளம் ஒரு தனி இன்பத்தை அடையும். என் உடலில் முதுமைப் பருவத்தின் தளர்ச்சி ஏறிக்கொண்டே வந்தாலும் என் உள்ளத்தில் மட்டும் ஏட்டுச்சுவடிகளின்பாலுள்ள பற்று இறங்கவேஇல்லை.

சில வருஷங்களுக்கு முன்வரையில், ஒவ்வொரு வருஷமும் எங்கேனும் சென்று ஏட்டுச் சுவடிகள் தேடி வருவதை முறையாகவே செய்து வந்தேன். எனக்கு அதுவே தீர்த்தயாத்திரையாகவும் தலயாத்திரையாகவும் உள்ளது.

தமிழ் நாட்டில் ஏட்டுச் சுவடிகள் இருக்கும் இடங்கள் பெரும்பாலானவற்றிற்குச் சென்று பார்த்திருக்கிறேன். நான் இப்படி ஏடுதேடும் முயற்சியை மேற்கொண்டிருப்பதைத் தமிழ் நாட்டினர் பலரும் அறிவர். அதனால் எனக்குச் சில அபவாதங்கள்கூட நேர்ந்ததுண்டு; நான் போகாத இடங்களில் உள்ளவர் சிலர் தம்மிடமுள்ள சுவடிகளை நான் கொண்டு போய்விட்டேனென்று சொல்வதாகக் கேள்வியுற்றிருக்கின்றேன்.

கும்பகோணம் காலேஜில் நான் வேலையில் இருந்தபோது பிள்ளைகளிடம் சில சமயங்களில் அவர்களுடைய ஊர்களில் யார் யார் தமிழ் வித்துவான்கள் இருந்தார்களென்றும், யார் வீட்டிலேனும் ஏட்டுச் சுவடிகள் உள்ளனவாவென்றும் கேட்டு அறிவேன். சிலர் கூறிய செய்திகளைக் கொண்டு நான் பயனடைந்ததும் உண்டு.

1900-ஆம் வருஷம் மே மாதம் இரண்டாந்தேதி பிற்பகல் மூன்று மணிக்கு நான் பி. ஏ. வகுப்பில் வழக்கம் போலப் பாடஞ் சொல்லத் தொடங்கினேன். அப்பொழுது * ஒரு மாணாக்கர் எழுந்து நின்றார். ஏதாவது வேலையாகப் போகவேண்டி அவர் என்னிடம் அநுமதி கேட்க

* இப்போது மாயூரத்தில் அட்வோகேட்டாகவுள்ள ஸ்ரீமான் சாம்பசிவ செட்டியார்.

நிற்பதாக நான் எண்ணி, "எங்கேயாவது போகவேண்டுமானால் போய் வரலாமே" என்றேன். அவர் பெயர் சாம்பசிவ செட்டியாரென்பது.

"இல்லை; உங்களிடம் ஒரு சமாசாரம் சொல்லவேண்டும்" என்றார் அம்மாணாக்கர்.

நான்: சொல்லலாமே.

அவர்: நான் சாப்பிடும் விடுதியில் ஒருவர் வந்திருக்கிறார். அவர் மிக்க செல்வராக இருந்தவராம். பெரிய குடும்பத்திற் பிறந்தவராம். நல்ல நிலையில் இருந்தவராம். அவரைப் பார்க்கும்போதே அவர் பெரிய மனிதரென்று தோற்றுகிறது. இப்பொழுது தம்முடைய செல்வத்தையெல்லாம் இழந்துவிட்டுக் கடன்காரர்களுக்குப் பயந்து தலைமறைவாக இருக்கிறாராம். அவர் தம்முடைய வீட்டிற் பலகாலமாக உள்ள ஏட்டுச் சுவடிகளையெல்லாம் கொண்டுவந்திருக்கிறார்.

அதுவரையில் அம்மாணாக்கர் கூறியது சத்தில்லாத சமாசாரமாக இருந்தது. சற்றுப் பராமுகமாகவே கேட்டு வந்தேன். ஏட்டுச் சுவடிகளென்ற வார்த்தை என் காதில் விழவே கவனமாகக் கேட்கத் தொடங்கினேன்.

"என்ன ஏட்டுச் சுவடிகளா கொண்டுவந்திருக்கிறார்?" என்று ஆவலோடு வினவினேன்.

"ஆமாம்; நூறு சுவடிகளுக்கு மேலே கொண்டு வந்திருக்கிறார். அவைகளை அவருடைய முன்னோர்கள் பாதுகாத்து வைத்திருந்தார்களாம். அவர் வீட்டில் இருந்த பலவகைப் பொருள்களையும் கடன்காரர்கள் ஏலம் போட்டுவிட்டார்களாம். இந்தச் சுவடிகளையும் அவர்கள் கையில் விட்டுவிட்டால் என்ன கதியாகுமோவென்று பயந்தாராம். அவற்றைப் பாதுகாத்து வைத்து உபயோகப்படுத்திக் கொள்பவர்களிடம் கொடுக்கவேண்டுமென்று எண்ணினாராம். தங்களிடம் ஒப்பித்தால் நல்லதென்றறிந்து அவற்றைக்கொண்டுவந்திருக்கிறார்."

தங்கப்புதையலுக்கு வழி சொல்லும் மந்திரவாதியைப் போல் அம்மாணாக்கர் சொல்லச் சொல்ல என் மனம் ஊக்க மிகுதியால் நிலைகொள்ளாமல் தவித்தது.

"அந்தச் சுவடிகளை என்னிடம் விற்றுவிடலாமென்று தானே வந்திருக்கிறார்?" என்று நான் கேட்டேன்.

"இல்லை; இல்லை. எனக்கும் அந்தச் சந்தேகம் வந்தது. 'இவ்வளவு சுவடிகளையும் விலைக்கு வாங்கிக்கொள்ள எங்கள் தமிழாசிரியரால் முடியாதே' என்று அவரிடம் சொன்னேன். 'பணம் வேண்டாம்; இவைகளை



வாங்கிக்கொண்டு பாதுகாக்க வேண்டுமென்பதுதான் என் விருப்பம். என்னுடைய கஷ்ட காலம் இவைகளைத் தரும்படியாயிற்று! அருமை தெரியாதவர்கள் கையில் அகப்பட்டு வீணாவதைவிடத் தக்கவர்களிடம் இருந்தால் நல்லதென்றெண்ணிக் கொண்டு வந்தேன்' என்று அவர் சொன்னார்."

"அப்படியானால்; வா; அவரைப் போய்ப் பார்க்கலாம்" என்று புறப்படத் தொடங்கினேன்; காலேஜ் தலைவரிடம் அநுமதி பெற்றுக்கொண்டு போகலாமென்பது என் கருத்து. அதனை உணர்ந்த மாணாக்கர் என்னைத் தடுத்து, "இப்பொழுது போகவேண்டிய அவசியமில்லை. அந்தக் கனவான் சாயங்காலம் வரையில் காத்திருப்பதாகச் சொன்னார். காலேஜில் வேலை முடிந்தவுடன் போகலாம்" என்றார்.

அதன்பின் என் உடல்தான் காலேஜில் இருந்தது; என் உள்ளம் நான் பெறப்போகும் சுவடித்தொகுதியை நினைந்து ஊசலாடிக்கொண்டிருந்தது. ஒரு நிமிஷம் ஒரு யுகம்போலத் தோற்றியது. 'எப்பொழுது கடைசி மணியாகும்?' என்று எதிர் பார்த்திருந்தேன். மணியும் அடித்தது; ஒரே ஓட்டமாக ஓடி அந்தக் கனவான்முன் நிற்கவேண்டுமென்பது என் ஆசை!

அந்த மாணாக்கர் வந்தார். நான் அவருடன் புறப்படலானேன்; அப்பொழுது அவர், "நீங்கள் வீட்டிற்குப் போங்கள். அவர் சாப்பாட்டு விடுதியில் இருக்கிறாரா என்று பார்த்து வருகிறேன். தம்மையாராவது பார்ப்பதாக இருந்தால் அவர் மிகவும் லஜ்ஜைப் படுகிறார்" என்றார்.

நான் என்வீடு சென்றேன். என் வீட்டிலிருந்து அவ்விடுதி மிகவும் சமீபமாகவே இருந்தது. நான் வீட்டுக்குப் போன சிறிது நேரத்தில் அம்மாணாக்கர் தம்மால் தூக்கிக் கொள்ளக்கூடிய சுவடிகளை அள்ளிக் கொணர்ந்து என் வீட்டிற்கு வந்து என் முன் போட்டார்.

"என் அப்பா! நான் வருகிறேனே அவர் இருக்கிறாரா?" என்று கேட்டேன்.

"அவர் தங்களைப் பார்க்க மிகவும் நாணுகின்றார். தம்முடைய ஊர் பெயர் இவைகளில் ஒன்றையும் தெரிவிக்கமாட்டேனென்கிறார். இன்னும் சுவடிகள் இருக்கின்றன. கொண்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு அவர் மீண்டும் சென்றார். அவர் ஊக்கமும் தேகவன்மையும் உடையவர். அப்பால் நாலைந்துமுறை முன் கொணர்ந்தபடியே சுவடிகளைக் கொண்டு வந்தார்.

சுவடி தேடுங்காலங்களில் நான் பலவிதமான துன்பங்களை அடைந்தவன். பல விடங்களில் சுவடிக்குரியவர்களைத் தேடிச் சென்று அலைந்து கால்கள் தேய்ந்துபோயின. சிலர், வீட்டில் இருந்துகொண்டே இல்லை

யென்று சொல்லி யனுப்பிவிடுவார்கள். சிலர், பலமுறை வரச்சொல்லி அலைக்கழிப்பார்கள். சிலரிடம் எவ்வளவோ நயந்து கெஞ்சிப் பிணை கொடுத்துச் சுவடிகளைப் பெறவேண்டியிருக்கும். சிலரிடம் அவமதிப்புக்கூட அடைந்திருக்கின்றேன். குழந்தையைப் பெறும்பொழுது படுந் துன்பமெல்லாம் அக்குழந்தையைக் கண்ட காலத்திலே மறைந்துவிட, தாய் பெரிய இன்பத்தை அடைகின்றாள். அதுபோலவே சுவடிகளுக்காகப் படும் சிரமங்களெல்லாம் அவற்றைப் பெற்றவுடன் மாறிவிடுகின்றன. என் உள்ளம் பெருமகிழ்ச்சியை அடைகின்றது.

பலவகையில் துன்பங்களை அடைந்து தேடாமல், சுவடிகள் வலிய வந்து எனக்குமுன் குவிந்தனவென்றால் எனக்கு உண்டான மகிழ்ச்சிக்கு வேறு எதையாவது ஒப்புக்கூற முடியுமா? 'இவற்றை வழங்கிய உபகாரியைப் பாராமல் இருப்பது பிழை' என்று எண்ணினேன்.

“சுவடிகளின் அருமை உனக்குத் தெரியாது. இவற்றைத் தந்த அந்தக் கனவானை நான் பாராமல் இருப்பது பாவம்! வா; பார்க்கலாம்” என்று நான் அம்மாணாக்கரிடம் சொன்னேன்.

“நான் என்ன செய்வேன்! அவர் கண்டிப்பாகத் தம்மைப் பார்க்க வேண்டாமென்று சொல்லுகிறார்” என்று பின்னும் அவர் சொன்னார்.

“அவர் அப்படிச் சொன்னாலும் அவரைப் பாராமற் போனால் எனக்குத் திருப்தியாக இராது” என்று புறப்பட்டேன். மாணாக்கர் என்னைத் தொடர்ந்து வந்தார்.

போகும்போதே என் மனத்தில் அக்கனவானுடைய நிலையைப் பற்றிய எண்ணங்கள் எழுந்தன: 'நல்ல குடும்பத்திற் பிறந்தவராக இருக்கலாம்; பாவம் தமிழ்ச் சுவடிகளைப் பிறரிடம் கொடுப்பது பெரிய அகௌரவமென்றும் பஞ்சகாலத்தில் பிள்ளையைக் கொடுத்துவிடுவது போன்றதென்றும் எண்ணினார் போலும்! இவ்வளவு கஷ்டத்தில், இவைகளை நம்மிடத்தில் ஒப்பிக்க வேண்டுமென்ற கருத்து வந்தது நம்முடைய நல்லகாலந்தான். அக்கனவான் ஓர் அபூர்வப் பிறவியுடையவர். அவரைப் பார்த்து மகிழ்ந்து ஸல்லாபம் செய்யவேண்டும்' என்று எண்ணினேன்; வறுமையின் கொடுமையைப் பற்றி நினைத்தேன். சுவடிகள் கிடைத்தது பற்றிச் சந்தோஷமும் அக்கனவானது நிலைபற்றி வருத்தமும் மாறி மாறி என் மனத்தே உண்டாயின. என்னுடைய நன்றியறிவை அவருக்கு நன்றாக வெளிப்படுத்த வேண்டுமென்று கருதினேன். ஆயினும் என் உள்ளிருந்த முழு உணர்ச்சியையும் வார்த்தைகளால் எப்படி வெளியிடமுடியுமென்று தயங்கினேன்.



இங்ஙனம் பலவாறு எண்ணமிட்டுக் கொண்டே சாப்பாட்டு விடுதிக்குள் நுழைந்தேன். மாணாக்கர் என்னை உள்ளே அழைத்துச் சென்றார்.

நான் யாரைப் பார்க்கவேண்டுமென்று அவ்வளவு ஆவலோடு சென்றேனோ அந்தக் கனவான், தம்முடைய சுவடிகளெல்லாவற்றையும் அம்மாணாக்கர் என்னிடம் சேர்ப்பித்து விட்டதை யறிந்து ஒருவரிடமும் சொல்லாமற் போய்விட்டார். நான் அவரை அங்கே காணவில்லை.

“அப்பொழுதே அவர் சொன்னார்: தம்மை யாரும் பார்க்கவேண்டாமென்றும், தம் ஊர் பேர் ஒன்றும் சொல்லவிரும்பவில்லையென்றும் வற்புறுத்தினார். சுவடிகளைத் தங்களிடம் சேர்ப்பித்தோமென்ற திருப்தியோடு போய்விட்டார்” என்று மாணாக்கர் கூறினார்.

என்னுடைய நன்றியறிவை எதிர்பாராமலே அவ்வுபகாரி சென்றுவிட்டார். உபசாரத்தை அவர் விரும்பவில்லை. சுவடிகளுக்கு அடைக்கலஸ்தானம் ஒன்று வேண்டுமென்று அவர் கருதினார்; தக்க இடம் அகப்படாமற் கஷ்டப்பட்டார்; அப்பால் ஓரிடம் தெரிந்தது. அவ்விடத்திற் சேர்ப்பித்தார்; அந்தக்கடமையைச் செய்துவிட்டுப் போய்விட்டார்.

நான் அவரைக் காணாமையால், சிறிது நேரம் அங்கே ஸ்தம்பித்து நின்றேன். 'தம்மைக் காட்டிக் கொள்ளாமல் மகோபகாரம்செய்த அவரைப் பார்க்க முடியவில்லையே!' என்று வருந்தினேன். 'ஒரு சிறுகாரியம் செய்தாலும் ஊரறிய விளம்பரம் செய்துகொள்ளும் இந்தக் காலத்தில் இப்படி மௌனமாகப் பிறர் அறியாவாறு உபகாரம்செய்பவர்களும் இருக்கிறார்கள்' என்பதை நினைக்கும்போது என் உள்ளங் கசிந்தது. 'வலக்கை செய்யும் உபகாரம் இடக்கைக்குத் தெரியாமற் செய்க' என்று பைபிளில் இருப்பதாகச் சொல்வார்கள். அவ்வாக்கியத்திற்கு இலக்கியமாகிய பேருபகாரியினிடம் உபகாரம் பெற்றும் நான் அவரை அறியக்கூடவில்லை.

அன்று எனக்குக் கிடைத்த சுவடிகளை அப்பால் ஆராய்ந்தேன். அவற்றிற் பெரும்பாலான அச்சிட்ட நூல்களாகவே இருந்தன. ஒரு பழஞ் சுவடியின் சுற்றில் * “தமிழ்விடு தூது” என்னும் பிரபந்தம் இருந்தது. அதைப் படித்து வந்தேன். என்னுடைய வாழ்க்கையின் லக்ஷியம் அந்த நூலில் இரண்டடிகளிலே சொல்லப்பட்டிருப்பதைக் கண்டேன்.

“இருந்தமிழே உன்னால் இருந்தேன்; இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்”

என்னும் கண்ணியிலே என் உள்ளம் சிக்கிக்கொண்டது. அப்பொழுது பெயர் தெரியாமல் அதனையும் மற்றச் சுவடிகளையும் உதவிய பெருந்தகைமையாளரை மீட்டும் நினைந்து நினைந்து பாராட்டி வாழ்த்தினேன். அவர் யாரோ! இன்னும் அறியேன்!

---

* இந்நூல் பிறகு என்னால் 1930-ம் வருஷம் அச்சிடப்பட்டது.

௮

# கூத்தரும் குலோத்துங்கனும்.

(ஐயர்திரு, உ. வே. சாமிநாதையரவர்கள்.)

முற்காலத்திருந்த சோழ அரசர்கள் தமிழ்ப் புலவர்களை ஆதரித்துப் போற்றி வருவதைத் தம் கடமையாகக் கொண்டிருந்தனர். அவர்களுள் விக்கிரம சோழனென்பவன் கவிச் சக்கரவர்த்தியாகிய ஒட்டக் கூத்தரைத் தன் அவைக்களப் புலவராக நியமித்து உபசரித்து வந்தான். கூத்தர் அம்மன்னனுடைய அன்புக்கிருப்பிடமாகி யாவராலும் மதிக்கப்பெற்று வாழ்ந்து வந்தார். விக்கிரம சோழன் அத்தகைய கவிஞரொருவர் தனக்குக் கிடைத்திருப்பதை ஒரு பெரும் பேருக எண்ணி மகிழ்ந்தான். தான் அவராற் பயன் பெறுவதோடு தன் குமாரனுகிய குலோத்துங்கனும் இளமைக் கால முதலே அப்பெரியாருடைய நல்லுரைகளைக் கேட்டுச் சிறந்த அறிவுடையவனுகலா மென்பது அவனுடைய நினைவு. அதன்படியே ஒட்டக் கூத்தரிடத்தில் இளமையிலேயே மாணுக்கனுக ஒப்பிக்கப்பட்டவன் இரண்டாங் குலோத்துங்க சோழன்.

குலோத்துங்கன் முடி புனைந்து சக்கரவர்த்தியான காலத்தும் கூத்தருக்கு மாணுக்கனுகவே இருந்து வந்தான். பலகாலம் பழகி அவருடைய சிறந்த கவித்துவத்தை யுணர்ந்தவனுதலின் அவரது மனங் கோணுமல் நடந்து வந்தான். தமிழ்மொழிப் பரப்பைத் தம் அறிவினுல் ஆண்டு வந்த அக்கவிச் சக்கரவர்த்தியின்பெரும்புலமையையும்தமிழ்நிலப்பரப்பைத் தன் ஆணையால் ஆண்டுவந்த புவிச் சக்கரவர்த்தியின் பேரன்பையும் தமிழ் நாட்டார் உணர்ந்து வியந்தனர்.

ஒட்டக் கூத்தர் குலோத்துங்கனுக்கு ஆசிரியராகவும் அவன் அவைக் களத்துப் பெரும் புலவராகவும் விளங்கினுர். ஆசிரியராக இருத்தலின் கூத்தருக்குத் தலைமையும், அரசனுக இருத்தலின் குலோத்துங்கனுக்குத் தலைமையும் இருந்தன. இரண்டு முறையாலும் அவர்களுக்குள் அன்பும் பற்றும் வளர்ந்து வந்தனவே யன்றிக் குறையவில்லை.

கூத்தர் குலோத்துங்கனுக்கு ஞானத் தாயாக விளங்கினுர்; அதனுல் அவனைப் பிள்ளையாக வைத்து ஒரு பிள்ளைத் தமிழ் பாடினுர்; உலாவொன்றையும் இயற்றினுர். இவற்றையன்றி நாள்தோறும் ஒவ்வொரு செய்யுள் கூறி அவனை வாழ்த்தி வந்தார்.

இங்ஙனம் தன்னை அரசனென்ற முறையிற் பலபடியாகக் கவிச்சக்கரவர்த்தி பாராட்டுதலை யறிந்த குலோத்துங்கன், 'தமிழ் நயங்களை வெளியிடும் இந்நூற்களாற் புகழ்ப்பெறுவதும் நம் பாக்கியம்' என்று எண்ணினுன். தன்னை அவ்வாறு புகழும் ஆசிரியரை வணங்கி ஒரு பாட்டேனும் இயற்றி அவர்பால் தனக்கு உள்ள நன்றியறிவைப் பலரும் அறியும்படி செய்ய வேண்டுமென்பது அவன் கருத்து; அதற்குரிய செவ்வியை எதிர் பார்த்திருந்தான்.

வழக்கம்போல் ஒருநாள் அரசவை கூடியிருந்தது. நியாய சபையாகிய அறங்கூறவையத்தினரும் மந்திரிகளும் பிற அதிகாரிகளும் தங்கள் தங்களுக்குரிய ஆசனங்களில் இருந்தனர். புலவர் பலர் ஒரு வரிசையில்



களிதுளும்பும் முகங்களோடு உட்கார்ந்திருந்தனர். அவர்களுக்குத் தலைவராகக் கூத்தர் அமர்ந்திருந்தார்.

நாள்தோறும் சொல்லும் வழக்கப்படி ஒரு புதிய கவியை அன்று ஒட்டக்கூத்தர் சொல்லத் தொடங்கி,

"ஆடுங்கடைமணி நாவசை யாம லகிலமெல்லாம்
நீடுங் குடையிற் றரித்த பிரான்"

என்று சொல்லிச் சிறிது நிறுத்தினுர். உடனே தொடர்ந்தாற் போலச் சிங்காதனத்திலிருந்து,

"........என்று நித்த † நவம்
பாடுங் கவிப் பெருமான்"

என ஓர் ஒலி கேட்டது. எல்லோரும் நிமிர்ந்து அங்கே பார்த்தார்கள். என்ன வியப்பு! சோழமன்னன் தன் ஆசிரியர் பாடலின் பிற்பகுதியைப் பாடுகிறுன்:

"........என்று நித்த நவம்
பாடுங் கவிப்பெரு மானொட்டக் கூத்தன்பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்க சோழனென்றேயெனைச் சொல்லுவரே"

என்று முடித்து நிறுத்தினுன். சபையோர் யாவருக்கும் மயிர்க்கூச்செறிந்தது. புலவர்கள் தம் காதையும் கண்ணையும் நம்பவில்லை.

ஒட்டக் கூத்தர் தம்மையே மறந்து விட்டார். சோழவரசனே, நெடுநாளாக எண்ணியிருந்த ஓர் அரும்பெருங் கடமையை நிறைவேற்றிய மகிழ்ச்சி முகத்தே தோன்றக் குறுநகையுடன் வீற்றிருந்தான்.

"உண்மையா இது? அரசரா பாட்டுச் சொன்னுர்? கூத்தருடைய பதாம்புயத்தைச் சூடும் குலோத்துங்கனென்றல்லவோ சொல்லுகிறுர்!" என்று ஒவ்வொருவரும் தமக்குள் வினவிக் கொண்டனர்.

ஒட்டக்கூத்தர் தம்முடைய உணர்வுபெற்று, "எதிர்பாராதபடி மன்னர்பிரான் இங்ஙனம் வாய்மலர்ந்தருளக் காரணம் என்ன?" என்று பணிவோடு கேட்டார்.

"காரணமா? உலகம் அறிந்தது தானே? நான் தங்களுடைய மாணுக்கன். தங்களிடம் நான் கற்றுக்கொண்டதன் பயனையும் எனது நன்றியறிவையும் ஒருவாறு தெரிவிக்க எண்ணினேன்" என்றுன் வேந்தன்.

"நான் ஒரு புலவன்தானே என்னை அப்படிச் சொல்லலாமா? தாங்கள் முடிமன்னரல்லவா?" என்றுர் புலவர்பிரான்.

"ஆனுலும் நான் தங்கள் மாணுக்கன்தானே? என்னைப் பலவாறு பாராட்டி உலகமுள்ளளவும் என் புகழ் நிலைத்திருக்கும்படி செய்யும் தேவரீருக்கு நான் என்ன கைம்மாறு செய்யமுடியும்? இந்த ஒரு செய்யுளைத் தாங்கள் பெரிதாகப் பாராட்டுகிறீர்களே! இதிலும் தங்கள் அடியைப் பின்பற்றித்தானே நான் பாடினேன்? எனக்குத் தமிழ் விஷயத்தில் தனித் தலைமை ஏது?' என்று அரசன் கூறித் தன் பணிவையும் நன்றியறிவையும்

---

† நவம் பாடுதல் - புதிய சொற்களைப் பாடுதல்.

புலப்படுத்தினான். ஒட்டக்கூத்தரிடத்தில் அவனுக்கிருந்த அன்பை அநேகரும் ஓரளவு யாவரும் அறிந்திருப்பினும் அன்று மிகவும் நன்றாக அறிந்து கொண்டனர்.

பின்பு ஒருநாள் குலோத்துங்கன் தன் அரண்மனையில் உணவருந்திக் கொண்டிருந்தான். அப்பொழுது அவன் வாயில் ஒரு சிறு கல் அகப்படவே அவனுக்குக் கடுங்கோபம் உண்டாயிற்று. அரசனுக்கு ராஜஸ குணம் இயல்பல்லவா?

"இந்தமாதிரி கவனமில்லாமல் சமைத்த சமையற்காரனை வேலையை விட்டுத் தள்ளிவிடவேண்டும்" என்று மன்னன் உத்தரவிட்டான். அவனது கட்டளைப்படியே அச்சமையற்காரன் வேலையினின்றும் விலக்கப்பட்டான். பலகாலமாக அரசனுக்கு ஊழியம் புரிந்த அவன் தன் குற்றத்தை நினைந்து வருந்தி அதிகாரிகளிடம் கெஞ்சியும் அவர்கள் இரங்கவில்லை. அரசன் ஆணைக்குமேல் ஓர் ஆணையுண்டா?

சமையற்காரன், 'இனி என்ன செய்வது!' என்று கவலையோடு யோசித்தான்; 'அரசனது ஆணைக்குமேலே ஒருவர் வார்த்தையும் செல்லாதே!' என்று எண்ணி வருந்தினான். திடீரென்று ஒட்டக்கூத்தருடைய நினைவு வந்தது. உடனே ஓடிச்சென்று கண்ணீர் ஆறாகப் பெருக ஒட்டக்கூத்தரது மாளிகையுட்புகுந்து அவர் காலடியிற் கதறிக்கொண்டு வீழ்ந்தான்; "உங்களை விட்டால் எனக்கு வேறுகதியில்லை. இவ்வளவு காலம் சக்கரவர்த்திக்கு ஊழியம் செய்து வந்தேன். என் தலைவிதி குறுக்கே நின்றதால் இன்று என் வேலை போயிற்று. நீங்களே அடியேனைக் காப்பாற்றவேண்டும். சக்கரவர்த்தியின் கோபத்தை உங்களையன்றி வேறு யாராலும் தணிக்கமுடியாது" என்று முறையிட்டான். அவனுடைய முறையீடு கூத்தருடைய உள்ளத்தை உருக்கியது. நடந்தவற்றை அவன் வாயிலாக அவர் அறிந்தார்; "அரசருடைய உணவென்றால் கவனமாக இருக்கவேண்டாமா? இவ்வளவு குடிகளுக்கும் அவர் உயிரல்லவா?" என்று கேட்டார் கூத்தர்.

"பெருமானே! நான் செய்தது பிழை. அதற்கு என் தலைவிதியை நொந்துகொள்வதையன்றி வேறு வழியில்லை. பெரியவர்கள் இந்த ஏழையை எப்படியாவது காப்பாற்றிவிடவேண்டும்" என்று மீண்டும் கதறினான் அவன்.

கூத்தர், "சரி; நீ வீட்டிற்குப்போ. என்னால் ஏதாவது முடியுமானால் செய்கிறேன்" என்று சொல்லி அவனை அனுப்பினார்.

சில தினங்கள் சென்றன. ஒரு நாள் மாலையில் அரசனும் புலவரும் மகிழ்ச்சியோடு தனியே பல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். இடையே உணவைப் பற்றிய பேச்சு வந்தது. அதுதான் சமயமென்றறிந்த ஒட்டக்கூத்தர், "மகாராஜாவுடைய மடைப்பள்ளியில் ஏதேனும் மாறுதல் உண்டோ?" என்று விசாரித்தார். "வழக்கமாக இருந்த ஒரு சமையற்காரன் வேலையைவிட்டு நீக்கப்பட்டான்" என்றான் அரசன்.

கூத்தர்: என்ன காரணமோ?

அரசன்: மடையன்; சோற்றிற் கல்லும் மண்ணும் இருப்பதைக்கவனியாமலிருந்தான்.



கூத்தர்: அவன் தொழிலாலும் மடையன்தானே! மகாராஜா இந்தச் சிறுகுற்றத்தைப் பெரிதாகக் கருதலாமோ? நாங்களாவது கல்லும் மண்ணும் இருந்தால் கஷ்டப்படுவோம். மகாராஜாவுக்கு அவற்றை யுண்ட பழக்கம் உண்டே!

அவர் சொல்வதன் கருத்து அரசனுக்கு விளங்கவில்லை; "என்ன! எனக்கு எப்படிப் பழக்கம்?" என்று வியப்போடு அவன் கேட்டான்.

"பெரிய மலைகளையும் மண்ணையும் விழுங்கியபழக்கம் மகாராஜாவுக்கு உண்டே! அது மறந்து போயிற்றா?" என்று கவிச் சக்கரவர்த்தி சொல்லி விட்டுத் தொடர்ந்து,

‡ "மீனகம் பற்றிய வேலையை மண்ணையவ் வெற்படங்கப்
போனகம் பற்றிய மாலலையோ பொருந் தாவரசர்
கானகம் பற்றக் கனவரை பற்றக் கலங்கள்பற்ற
வானகம் பற்ற வடிவேல் விடுத்த மனதுங்கனே"

என்று ஒரு செய்யுளைப் பாடினார். குலோத்துங்கனுக்கு அவர் கருத்து விளங்கிவிட்டது.

அரசர்களைத் திருமாலின் அம்சமாகக்கருதுவது பெரியோர் வழக்கம். அதனைப் பின் பற்றித் திருமால் செய்த செயல்களை யெல்லாம் அம்மன்னர்கள் செய்தனவாகப் பாடுவர் புலவர். இந்தச் செய்யுளிலும் ஒட்டக்கூத்தர் அங்ஙனம் பாடியிருக்கிறார். "நீ முன்பு சமுத்திரத்தையும் மண்ணுலகத்தையும் மலைகளையும் உணவாக உண்ட திருமாலல்லவா?" என்ற கருத்து இப்பாடலில் அமைந்துள்ளது. 'இவ்வாறு மண்பரப்பையும் மலைகளையும் உண்ட நீ இப்பொழுது மண்ணும் சிறு கல்லும் உணவில் இருந்தனவென்று சினங்கொள்ளலாமா?' என்ற குறிப்பும் வெளிப்படுகின்றது.

சோழமன்னன் அந்தப் பாட்டின் நயத்தில் ஈடுபட்டான். ஒட்டக்கூத்தருடைய சாதுர்யத்தை யுணர்ந்து வியந்தான். அவருடைய திருவுள்ளத்தில் மடையன்பாற் கருணையுண்டாயிருத்தல் புலப்பட்டது. 'ஒட்டக்கூத்தன் பதாம்புயத்தைச்சூடும் குலோத்துங்க சோழனாகிய தான் அப்புலவர் பிரானுடைய குறிப்பறிந்து நடத்தல் கடமையென்று துணிந்தான்.

"தங்கள் உள்ளக்குறிப்பை உணர்ந்தேன். இன்றிரவே அவன் நம் அரண்மனையில் மீட்டும் பணிசெய்யத் தொடங்குவான். தாங்களும் இன்றிரவு என்னோடு விருந்துண்டு மகிழவேண்டும்" என்று அன்போடு அரசன் புகன்றான்.

வேலையினின்றும் விலக்கப்பட்ட சமையற்காரன் அன்றிரவு சமைத்த சமையல் மன்னனுக்காகவா, அன்றிப் புலவருக்காகவா வென்பதை யாரேனும் வரையறுத்துச் சொல்லமுடியுமா?

—கலைமகள்

‡ பகையரசர்கள் உனக்கு அஞ்சிக் காட்டையடையவும் பெரிய மலைகளையடையவும் புறநாடுகளுக்குக் கடல் கடந்து செல்லும்பொருட்டுக் கப்பலையடையவும் உயிர் நீங்கி மேலுலகடையவும் கூர்மையான வேலை விட்ட குலோத்துங்கனே! மீன்கள் உள்ளே வாழும் பொருட்டுப் பற்றிய சமுத்திரத்தையும் பூமியையும் அந்த மலைகள் முழுவதையும் உணவாகப் பற்றிய திருமால் நீயல்லவா?

உ.

# தமிழ் வழக்கு.

(செந்தமிழ்ப் பத்திராசிரியர் உயர்திரு, நாராயணையங்கார் அவர்கள்.)

தமிழ் வழக்கு என்பது இங்கு, தமிழாகிய வழக்கு என விரியும். வழக்கு எனினும் பாஷை எனினும் ஒக்கும். அது ஒருவன் கருதிய பொருளை அறிவுறுக்கும் சொற்றொடர்களின் நிகழ்ச்சியாம். சொற்பொருளொற்றுமை நயத்தால், பொருட்டொடர் நிகழ்ச்சியும் வழக்கெனப்படும். தமிழாகிய சொற்றொடர்களின் நிகழ்ச்சியை (தமிழ்ப் பாஷையை) ஆராய்தலால் இதற்குத் தமிழ் வழக்கு எனப் பெயர் கொடுக்கப்பட்டது.

தமிழ் வழக்கு, உலக வழக்கு செய்யுள் வழக்கு என இரு வகைப்படும். உலக வழக்கு—லௌகிக பாஷை. செய்யுள் வழக்கு—காவ்யபாஷை.

உலக வழக்கு செய்யுள் வழக்கு என்னும் அவ்விருவகை வழக்கையும் * முதற்பொருளாகவும், அவ்விருவகை வழக்கிற்கும் † உறுப்பாயுள்ள எழுத்து, சொல், பொருள் என்னும் இவற்றை அம்முதற்பொருள்களின் சினைப்பொருள்களாகவும்கொண்டு இலக்கணங்கள் வரையப்பட்டுள்ளன.

இக்கருத்து, தொல்காப்பிய பாயிரத்துள், "வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின் எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி." என்று பனம்பாரனாரால் வெளியிடப்பட்டது.

இதன் பொருள்: 'உலக வழக்கு செய்யுள் வழக்கு என்னும் அவ்விரண்டு முதற்பொருள்களுக்கு முரிய சினைப்பொருள்களாகிய எழுத்து, சொல், பொருள் என்னும் இவற்றின் இலக்கணங்களைச் சொல்ல விரும்பி என்பதாம்.

இதனுள், உலக வழக்கை வழக்கு என்றும், செய்யுள் வழக்கைச் செய்யுள் என்றும் ¶ நாமைகதேசக் கிரகணம் என்னும் நியாயத்தாற் சுருக்கிச் சொல்லலாயிற்று.

---

* முதற்பொருளாவது:— பலசினை (கிளை)களடங்கிய பிண்டமாம். அது பல உறுப்புக்களடங்கிய உடல்போல்வது.

† உறுப்பு எனினும் சினை எனினும் அங்கம் எனினும் ஒக்கும்.

¶ நாமைகதேசக் கிரகணமாவது: ஒரு பொருளுக்குரிய முழுப்பெயரின் ஏகதேசமாகிய ஒரு பகுதியைக் கொண்டு அப்பொருளை வழங்குவது. அது—நரசிங்கப்பிரானைச் சிங்கப்பிரான் எனவும், வீமசேனனை வீமன் எனவும் வழங்குதல் போல இங்கு உலக வழக்கை வழக்கு என்றும், செய்யுள் வழக்கைச் செய்யுள் என்றும் அப்பெயர்களின் நிலைமொழி வருமொழிகளுள் ஒன்று கொண்டு வழங்கியிருப்பது.



"ஆயிரு முதல்" என அகரச்சுட்டு நீண்டு நின்றது; அவ்விருமுதல் என்றபடி. வழக்கும் செய்யுளுமாயுள்ள அவ்விரண்டினையும் 'முதல்' என்றமையால், அவற்றின் உறுப்பாயுள்ள எழுத்தும் சொல்லும் பொருளும் அம்முதற் பொருளின் இயைபிரிதாகிய சினை எனப் பொருள் கொள்ளக்கிடக்கின்றன. 0

சொற்றொடர் நிகழ்ச்சியால் ஒலி வடிவான பாஷைக்கு எழுத்தும் சொல்லும் ஒலிவடிவால் ஒற்றுமையுடைமையால் அவை அகத்துறுப்பாகிய சினையேயாம்; அவை, ஒருவனுக்குக் கை கால் விரல் உகிர் முதலியன போல அங்கமாகவும் உபாங்கமாகவும் ஏற்றபெற்றி கொள்ளக்கிடக்கும்.

பொருள் ஒன்றுமட்டும் ஒலிவடிவான சொற்றொடரின் வேறுபிருத்தலாற் புறத்துறுப்பாகிய சினையாம்; அது ஒருவனுக்கு ஆடை அணிகலன்கள் போல்வது.

இவ்வாறு ஒரு பொருளுக்கு இருவகையுறுப்புக்கள் உண்டு என்பதை, 'புறத்துறுப் பெல்லாம் எவன் செய்யும் யாக்கை-யகத்துறுப் பன்பி லவர்க்கு' என்பதனாலும் அறியலாம்.

ஆகவே, பாஷையாகிய சொற்றொடர் நிகழ்ச்சிக்கு எழுத்தொலியும் சொல்லொலியும் அகத்துறுப்பாகிய சினையாகவும் அச்சொற்றொடரொலிகளால் உணர்த்தப்படும் பொருள் புறத்துறுப்பாகிய சினையாகவும் கொள்ளப்பட்டு அவற்றின் இலக்கணங்கள் தொல்காப்பியனாரால் ஆராய்ந்து உரைக்கப்பட்டன என்பதாம்.

உலக வழக்கிற்கும் செய்யுள் வழக்கிற்கும் உரிய எழுத்திலக்கணங்கள் எழுத்ததிகாரத்தாலும் அவற்றிற்குரிய சொல்லிலக்கணங்கள் சொல்லதிகாரத்தானும் ஒருங்கு உரைக்கப்பட்டன; அவற்றுள் உலக வழக்கிலக்கணங்களே பெரும்பான்மையாகவும் செய்யுள் வழக்கிலக்கணங்கள் சிறுபான்மையாகவும் உள்ளன.

உலக வழக்கிற்குரிய பொருள்களெல்லாம் கற்றுணரவேண்டாது உலகியலறிவாலே பட்டாங்குணர்த்தும் சொல்லுணர்ச்சி கொண்டே தெள்ளிதின் அறியக் கிடத்தலால் அவற்றை இலக்கணங் கூறியுணர்த்தாது விடுத்துச் செய்யுட்குரிய பொருளிலக்கணங்கள், நாடக வழக்கும் உலகியல் வழக்கும் விரவிய புலநெறி வழக்கிற்குரியவாய் நூலறிவானன்றி உலகியலறிவால் அறிதற்கரியனவாயிருத்தலால் அவையே பெரும்பாலும் பொருளதிகாரத்தாற் சொல்லப்பட்டன.

---

0 இப்பாயிரப் பகுதிக்கு இவ்வாறுபொருள்கொள்ளாத பிறரெல்லாம் வேறு வேறு பொருளுரைத்து இடர்ப்படுப.

அவற்றுள், அகத்திணையியல் புறத்திணையியல்களவியல் கற்பியல் பொருளியல் என்னும் இவற்றால் அகப்பொருள் புறப்பொருள் என்னும்இருவகைப்பொருள்பற்றிநிகழும்செய்யுள்வழக்கிற்குரிய பொருளிலக்கணங்கள் வரையறுக்கப்பட்டன. இவைசெய்யுள்வழக்கிற்குப் புறத்துறுப்பாகிய அங்கங்களாம்.

செய்யுளியலால் அப்பொருள் பற்றி நிகழும் செய்யுட்பகுதிகளெல்லாம் வரையறுக்கப்பட்டு அவற்றின் இலக்கணங்களும் உரைக்கப்பட்டன. இவை செய்யுள் வழக்கிற்கு அங்கமாகிய பொருளின் வாயிலாக உபாங்கங்களாம். இவ் அங்கோபாங்கங்கள் சினையின் பாற்பட்டன.

உவமவியல் மெய்ப்பாட்டியல்களிரண்டும் இருவகை வழக்கிற்கும் பொதுவாய் அப்பொருள்பற்றி நிகழும் தோற்றம், சுவை முதலிய காட்சிக்கும் கருத்துக்கும் இலக்காகும். அப்பொருள்களின் இயல்புகளைப் புலப்படுத்தலால் அவை அப்பொருள்களின் வாயிலாக இருவகை வழக்கிற்கும் உபாங்கமாகிய சினைப்பொருள்களாம்.

மரபியலால் அவ்விருவகை வழக்கினும் வழங்கற்குரியபொருட்பெயர் முதலானபலவகை இலக்கணங்களும் அவ்வம்மரபு பற்றியுரைக்கப்பட்டமையால் அவை அப்பொருளின் புறத்துறுப்பாகி உபாங்கம் என்னும் சினைப்பொருளாயின.

இங்ஙனம் உலக வழக்கும் செய்யுள் வழக்குமாகிய தமிழ்ப் பாஷைக்குரிய எழுத்து சொல் பொருள் என்னும் சினைப் பொருள்களைச் சாங்கோபாங்கம் ஆராய்தலால் தொல்காப்பியம் வழக்கு நூல் என்னும் பாஷாசாஸ்திரமாயிற்று.

இதனுட் சொல்லப்படும் களவு, கற்புமுதலிய பலவகை ஒழுக்கங்களும் பொருளின்பாற்படும்; அப்பொருள் பற்றிவரும் கூற்று, கிளவி, துறை எனப் பெயர்பெறும். சொற்றொடர்களெல்லாம் செய்யுள் வழக்காகிய காவ்யபாஷை யெனப்படும்.

இவ்வாற்றான் உலகவழக்கும் செய்யுள்வழக்கும் வகுத்துரைக்கும் தொல்காப்பியத்துக்கு வழக்குநூல் என்பது நுவல் பொருள் பற்றிய பெயராயிற்று.

இங்ஙனங் கொள்ளுதலால் தொல்காப்பியம் வழக்கு, (பாஷை) என்னும் ஒரு பொருணுதலிவரும் மூன்றுறுப்படக்கிய பிண்டமாய் ஒரு நூலாயிற்று.

இங்ஙனங் கூறியவாற்றால் தமிழ் வழக்கிற்குரிய பிரமாணம் தொல்காப்பியம் என்பதும், பாஷைக்குவழக்கு என ஒரு பொதுப் பெயர் உண்டென்பதும் நிரூபிக்கலாயிற்று.

---

உ

# விடை ஊரும் விமலன்.

(ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் திருமயிலை வெள்ளீச்சரத்தில் 27—4—37ல் நிகழ்த்திய சொற்பொழிவின் குறிப்பு. திரு. கச்சிமுனிசாமி உடையார் B. A. அவர்களால் எழுதப்பெற்றது.)

அயனுந் திருமாலும் வந்து பிறப்பதற்கு ஆசைப்படுகின்ற இச் சிறந்த உலகத்தில் பலவகைப்பட்ட பிறவிகளுக்குள் மிக உயர்ந்த ஒன்றாயிருக்கின்ற மனிதப் பிறவியை அடைந்த நாம் பல பொருள்கள் உடையராயிருக்கின்றோம். அவற்றுளெல்லாம் மிகச் சிறந்தது அறிவு. எது ஒன்று உடைமையால் எல்லாம் உடையராய்க்கருதப்படுகின்றோமோ, எது ஒன்று இன்மையால் மற்றைய யாவுமிருந்தும் ஒன்றும் இலராய்க் கருதப்படுகின்றோமோ, அது அறிவாகும்.

"அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்
என்னுடைய ரேனு மிலர்"

இவ்வறிவு ஒன்றே மனிதனைச் சிறப்பிப்பது. இஃது ஆராய்ச்சி அறிவு அனுபவ அறிவு என இருவகைப்படும். ஆராய்ச்சி அறிவு இருந்தபின் தான் அனுபவ அறிவு விளங்கும். ஆராய்ச்சி அறிவை நாம் முன்னர்த் தொழிற்படுத்த வேண்டும். அறிவு தொழிற்பட மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து கருவிகள் உதவி செய்கின்றன. இவற்றுள் தூரத்தில் சென்று அறியும் இயல்புடைமையின் கண் மிகச் சிறந்த கருவி. கண்ணுக்குப் புலப்படும் பொருள்களை முதலில் ஆராய்ந்து பின் புலப்படாதபொருளை ஆராய்ந்து அதைப் பெற்று அதனால் உண்டாகும் இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்றுநிச்சயிப்பவரே அறிவு பெற்றோராவர்.

கண்ணைக் கொண்டு ஆராயப்புகின் அதற்குப் புலப்படுவது உலகமும் அதிலுள்ள பலவகைப்பட்ட உடல்களுமாம். ஐம்பூத இயற்கை நிலை உலகம், அவற்றின் மாறிய நிலை உடல். உடல்கள் அவன், அவள், அது எனும் மூவகைப் பகுப்பினவாயிருக்கின்றன. ஒவ்வொரு பகுப்பும் பலவேறு வகைப்பட்டிருக்கின்றன. பலவேறு வகைப்பட்ட அவயவப் பகுப்புடைய இவ்வுலகம் அறிவுடையதாயிருக்கவும் இல்லை. உலகத்தை ஐயந்திரிபற உண்மையாய்க் காண்கின்றோம். ஆகவே கண்ணறிவு கொண்டு உலகத்தை ஆராய நுழைந்த காலத்து அஃது பலவேறு வகையாய் அவன், அவள், அது எனும் அவயவப்பகுப்புடையதாய், கண்ணுக்குப் புலப்படுவதாய், அறியாமையுடையதாய்த்தோன்றுகின்றது. ஒரு தன்மைத்தாயிராமல்

பல்வேறு வகையாய் மூன்று அவயவப்பகுப்புடைமையின் உலகம்இயற்கையன்று, நித்தியமன்று, என்பதும், அறிவற்ற பொருளானமையின், தானே தொழிற்படும் சக்தியின்றி ஒருவனால் தொழிற்பட வேண்டுதலின் அது செயப்படுபொருள் என்பதும்; செயப்படுபொருளாய்க் கண்ணால் காணப்படுவதால் அழியும் பொருள் என்பதும் நன்றாய் விளங்குகின்றன.

செயப்படுபொருளாகிய உலகத்திற்குக் கர்த்தா ஒருவன் இருக்க வேண்டும். அவன் நம்மில் ஒருவனன்று, ஏனெனில் நம்மில் யாருக்கும் இவ்வுலகத்தில் ஒரு சிறு பாகத்தையேனும் உண்டு பண்ணிக்கொள்ள ஆற்றலில்லை; நம் உடலில் ஒரு சிறு அவயவத்தையும் உண்டு பண்ணிக் கொள்ள நமக்கு ஆற்றலில்லை என்றால் இப்பெரிய அதி விசித்திரமான உலகத்திற்கு நாம் எங்ஙனம் தலைவராகக்கூடும். ஆகவே உலக கர்த்தா உயிர் வர்க்கங்களில் ஒருவனல்லன். அவனைத் தேடப் புகின் அவன் உலகத்தைக் கடந்திருப்பான்—குடத்தைச் செய்த குயவன் குடத்தைக் கடந்திருப்பது போல். அதனால் அவன் கடவுள். அவன் உலகமாகிய ஐந்து பூதங்களில் ஒன்றல்லன், அவை ஒன்று சேர்ந்த உலகமுமல்லன், உலகத்திலுள்ள உயிர் வர்க்கங்களிலும் ஒன்றல்லன். எனினும் அவன் நம்மால் ஆராயத்தக்கவன். உலகத்தைக்கொண்டு ஆராய்ந்தால் கொஞ்சந் தோன்றுவான். இப்படி ஆராய்ந்து அறிந்து அனுபவித்த பெரியார்களின் வாக்கு இதற்குச் சான்றாயிருக்கின்றது.

"மண்ணல்லை விண்ணல்லை வலயமல்லை
மலையல்லை கடலல்லை வாயுவல்லை
எண்ணல்லை யெழுத்தல்லை யெரியுமல்லை
யிரவல்லை பகலல்லை யாவுமல்லை
பெண்ணல்லை யாணல்லை பேடல்லை
பிறிதல்லை யானும் பெரியாய் நீயே
உண்ணல்லை நல்லார்க்குத் தீயையல்லை
உணர்வரிய ஒற்றியூருடைய கோவே" —அப்பர்

"யாவையும் எவருந் தானாய் அவரவர் சமயந்தோறும்
தோய்விலன் புலனைந்துக்கும் சொலப்படான் உணர்வின் மூர்த்தி
ஆவிசேர் உயிரி னுள்ளால் ஆதுமோர் பற்றிலாத
பாவனை யதனைக்கூடில் அவனையுங் கூடலாமே"

—நம்மாழ்வார்

"பெரியாய் நீயே" என்றமையால் அவன் பெருமை உடையவன்' என்பது விளங்கும் பெருமை யுடையதைத்தான் நாம் பேசவேண்டும்.



சிறுமையுடையதைப் பேசின் அச்சிறுமை நம்மையே வந்தடையும்; நாம் அழிவது தோன்றுவதில்லை. இறப்பு பிறப்புகள் நிகழ்கின்றனவேயெனின் இறத்தல் அழிதலல்ல. இறத்தல் எனுஞ் சொல் முடிதல் தாண்டுதல் எனப் பொருள்படும். இறக்கின்றோம் என்றால் நாம் ஒன்றைத் தாண்டுகின்றோம் என்பதாகும். அதாவது தூல உடலைத் தாண்டுகின்றோம். "தூல உடல் அாலினது தேகல் என்ன நீங்கவே" என்றார் சிவஞான முனிவர் அகிலாண்டேஸ்வரியம்மைபதிகத்தில். உலகமோ அழியுந்தன்மையுடையது. உலகத்தை ஆராயப்புகுந்து, அது அழியுந் தன்மையுடையது, முடிவில்ஒரு பொருளும் இல்லை யென்று கண்டால் மலைகல்லியும் எலியும் அகப்படவில்லை என்பது போல் நம் ஆராய்சிபயனற்றதாகி விடுமல்லவா! இப்படி அயர்வதற்கு இடந்தராது அப்பருடைய உறுதியான வாக்கு. "உள்நல்லை நல்லார்க்கு" என்று அது உணர்த்துகிறது. நம்மாழ்வாரும் "உணர்வின் மூர்த்தி", என்றோதுகின்றார். கடவுள் நல்லவர்கள் உள்ளத்தில் இன்பந்தருபவனாயிருக்கின்றான். அவனை ஆராய ஆராய இன்பமுண்டாகும். ஆராயாதிருக்க இருக்கத் துன்பமே உண்டாகும். ஆராய்ச்சியினால் மட்டுமே அவ்வின்பப் பொருளை அனுபவிக்கமுடியும்!

இனி வடமொழி நூல்களில் சென்று ஆராயுமிடத்து ஸ்வேதாஸ்வதரம் 5-வது பாகம் 10-வது ஸ்லோகம் 'நீ அவன் அவள் அதுவல்ல' என்று கடவுளைப் பேசுகிறது. தைத்ரீயம் "எந்த இடத்திலிருந்து உன்னால் காணப்படுகின்ற இந்தப் பூதங்கள் தோன்றிற்றோ, எதனாலே அது காக்கப்படுகிறதோ, எதில் இவை இலயம் அடைகிறதோ, அந்தப்பொருளை நீ அறிய முயல்" என்று கூறுகிறது. வியாச சூத்திரம் (2-வது சூ.) "எங்கேயிருந்து உலகங்கள் தோன்றிற்றோ அது" என்றமையால் உலக காரணன் கடவுள் என்பது விளங்குகின்றது. "ஆன்மாவின் அறிவு சுத்தப்படுவது ஈசுவரனை அறிவதால்" என்றார் நீலகண்ட சிவாசாரியார். நாம் அறிவையும் அறியாமையையும் கூடியவராய் இருக்கின்றோம். அறியாமையால் துக்கமுறுகின்றோம். அறிவு சுத்தப்படக் கடவுளை ஆராயவேண்டும். "ஒரு மரம், அதில் ஒரு புருஷன் மோகனாகி ஈஸ்வரனுயில்லாமையால் அடிமையாயிருப்பதால், எப்போதும் துக்கமுடையவனா யிருக்கிறான்; தன்னிடத்திலேயே யிருக்கிற ஈஸ்வரனை நினைத்தால் மோகம் நீங்கினவனாவான்" என்ற அபிப்பிராயத்தை முண்டகம் தெரிவிக்கிறது. ஈசாவாசியமும் இதே அபிப்பிராயப் படுகிறது. நமக்குள்ள இயற்கை யறிவும் பல நூல்கள்கற்றதன் பயனாய் வந்த அறிவுங் குருமொழியால் உண்டான அறிவும் ஆகிய இவ்வளவிருந்தும், ஒன்றைத் தப்பென்று தெரிந்தும் அதை விடாம

விருப்பது மோகமாகும். வாசனை விளாம்பழத்தைக் காட்டி விடுவது போல் மோகம் ஆணவமல உண்மையைக் காட்டிவிடுகிறது.

ஆணவம், கர்மம், மாயை ஆகிய மூன்று மலங்களும் பதின்மூன்று வகையாக வேலைசெய்கின்றன. மோகம், மதம், இராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் ஆகிய ஏழும் ஆணவமல காரியம். மோகம் எது என்பது முன்னர்க் கூறப்பட்டது. தன்னைப் புகழ்ந்து கொள்ளுதல் மதமாகும். கிடைக்காத பொருளில் ஆசை கொள்ளுதல் இராகம். கிடைத்த பொருள் பிரிந்ததின் காரணமாகப்படும் துக்கம் கவலை. இறப்பை நோக்கி உற்றார் உறவினரும் பிரியநேரிடும் என்று நினைந்து வருந்துதல் தாபம். இறந்தாரை நினைத்து உயிரின் அறிவை இழந்து உடலும் இளைத்தல் வாட்டம். உலகத்தில் எல்லாம் வினைவழியாய் நிகழ்கின்றது என்பதை மறந்து, தன்னால் நிகழ்கின்றது என்றும், தான் பிறருக்கு நன்மை செய்ததாகவும், தான் பிறருக்குத் தீமை செய்ததாகவும் நினைத்தல் விசித்திரம். இன்ப துன்ப உணர்ச்சி கர்மமல காரியம். நமக்குக் கிடைத்த உடம்பு அதிலுள்ள மனம் நாம் இருக்கும் இடம் அனுபவிக்கும் போகப் பொருள்கள் மாயாமல காரியம். ஆகவே மூன்று மலங்களும் பதின்மூன்றுவகையாக வேலை செய்கின்றன. நம்முடைய அறியாமை இப்பதின்மூன்று வகையாயிருக்கின்றது.

இப்பதின்மூன்றும் நம்மால் ஆராயப்படும்பொருளாகிய கடவுளுக்குக் கிடையாது. அப்பொருள் அறியாமை பொருந்திய நம் மனத்தைச் சுத்தப்படுத்தித் துக்கத்தைப் போக்கி இன்பத்தைத் தருவது. "சிவபெருமானாகிய கடவுளே விமலன், நமக்கு மங்களத்தைச் செய்கின்றவன், நாம் மற்றெல்லாவற்றையும் நீக்கிவிட்டு அவனைத் தியானிக்கவேண்டும்" என்கிற அபிப்பிராயத்தை அதர்வசிகை என்னும் உபநிஷத் தெரிவிக்கிறது. எனவே அவன் பதின்மூன்று வகையாக வேலைசெய்யும் மலங்களினின்றும் நீங்கினவன். மலம் அனாதியே இல்லாமையின் சிவன்.

'நிறைமலம் அனாதியின் நீங்கிநிற்றலின்
அறைகுவர் சிவனென அறிவின்மேலவர்'

என்றார் சிவஞான முனிவர். நம்முடைய மலங்கள் கழிய நாம் மலமில்லாதவனை—விமலனை—தியானிக்கவேண்டும்.

எவன் தன் ஆன்மாவில் உள்ள கடவுளைப் பார்த்தானோ அவன்தான் தீரன் என்று கடோபநிஷத்பேசுகிறது. அக்கடவுள் தூலசரீரத்திலும்(தாணிலும்) சூக்குமசரீரத்திலும் (துரும்பிலும்) இருப்பான். துக்கத்தை அடைத்து



வைத்திருப்பவன் துக்கத்தினின்றும் எப்படி நீங்குகிறதில்லையோ அது போல் கடவுள் உள்ளேயிருந்தால் மட்டுமே துன்பம் போவதில்லை. துக்கத்தை வெளியில் கொட்டி ஆற்றிவிட்டவன் எப்படி அதனால் துன்புறவில்லையோ அதுபோல் உள்ளிருக்கும் கடவுள் வெளியில் வந்தால்தான் உயிர்கள் துன்பம் நீங்கி இன்பம் அடையும். "ஆவுறு பிணிகெட ஆவின் பால் கறந்து ஆவினுக்கூட்டல்போல்" உள்ளிருக்கும் கடவுளை வெளிவரச் செய்து மறுபடியும் உள்ளே போகச்செய்தால் தான் நமக்கு இன்பம் கிடைக்கும்.

"என்னிலாரு மெனக்கினி யாரிலை
என்னிலும் மினியானொரு வன்னுளன்
என்னுளே யுயிர்ப்பாய்ப் புறம்போந்துபுக்
கென்னுளே நிற்கும் இன்னம்ப ரீசனே"

என்றார் நாவுக்கரசர். உள்ளிருக்குங் கடவுளை வெளிவரச் செய்து மறுபடியும் உள்ளே நிறுத்தி வைக்கும் அறிவும் ஆற்றலும் மலத்தால் கட்டுண்டுள்ள உயிர்களாகிய நமக்கு இல்லை. ஆகையால் கருணாமூர்த்தியாகிய கடவுள் உயிர்கள்படும் துன்பத்திற் கிரங்கி அவரே திருமேனி தாங்கி வெளிவருகின்றார். அவர் கொள்ளும் திருமேனி கர்மத்தாலன்று கருணையினாலாகும். "அருளால் மேனிசாத்திய" என்றார் ஒரு பெரியார். "நந்தம் கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு" என்றது சித்தியார். கருணை, தயை, கிருபை, உமை என்பன ஒரே பொருளைக் குறிப்பின. "உமையலா துருவமில்லை" என்னும் அப்பர் வாக்கை நோக்கவும்.

கருணையினால் கடவுள் வடிவங்கொள்ளும்போது முற்றறிவுடையவனாதலின் உயிர்களின் பக்குவத் தன்மைக்குத் தக்கவாறு ஒன்பது வகைத் திருமேனிகள் கொள்ளுகின்றான். நாதம், விந்து, சத்தி, சிவம் எனும் அருவத் திருமேனி நான்கும், இலிங்கமெனும் அருவுருவத் திருமேனி ஒன்றும், பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன். எனும் உருவத் திருமேனி நான்கும் ஆக ஒன்பது வடிவங்கள் கொள்கின்றான். பிரமனாய்ப் படைத்தும், விஷ்ணுவாய்க் காத்தும், உருத்திரனாய் ஒடுக்கியும், மகேஸ்வரனாய் மறைத்தும், நாத விந்து சத்தி சிவமாய் அருளியும் ஐந்தொழிலை இயற்றுகின்றான். நிஷ்கிரியத்திற்கு அருவுருவத் திருமேனி கொள்கிறான். இவ்வொன்பது வடிவங்களாகியும் இவற்றைக் கடந்தும் அவன் இருக்கின்றான். கடவுள் கொள்ளும் உருவத் திருமேனிகள் போக வடிவம், கோரவடிவம், யோகவடிவம் என மூவகைப்படும். உயிர்கள் உலக இன்பங்களை அனுபவிக்கப் போக வடிவமும், உயிர்களின் வினைகழியக் கோரவடிவமும், உயிர்கள் முத்திபெற யோக வடிவமுங்கொள்ளுகிறார்.

"போகியா யிருந் துயிர்க்குப் போகத்தைப் புரிதலோரார்
யோகியா யோக முத்தி உதவுதல் அதுவும் ஓரார்
வேகியா னற்போற் செய்த வினையினை வீட்ட லோரார்
ஊகியா மூடரெல்லாம் உம்பரின் ஒருவன் என்பர்"

அம்மையோடு கூடியிருக்கும் வடிவம் போக வடிவம். அதிகை முதலிய வீரஸ்தானங்களில் அம்பு வில் முதலிய ஆயுதங்கள் தாங்கி இருக்கும் வடிவம் கோரவடிவம். தட்சிணாமூர்த்தி வடிவம் யோகவடிவம்.

ஈண்டுப் பேசப்படுவது போக வடிவம். "இடப்பாக மாதராளோடியைந் துயிர்க் கின்ப மென்று மடைபரனும்" என்றமையால், உயிர்க்குப் போகத்தைப் புரிய இறைவன் அம்மையோடு கூடிப் போக வடிவங் கொண்டான். உலகத்தின் சாரம் தர்மம். "தர்மசாரம் இதம்ஜகத்" என்றார் வால்மீகர். தருமத்தைப் போற்றிடின் அன்பு வளரும், அன்பு முதிர அருள் விளங்கும். அன்பும் அருளும் வந்தவழி தவம் சித்திக்கும். பின் மனந் தெளியப் பெற்று உயிர் கடவுளைச் சேரும். சேரவே பிறப்பு நீங்கிப் பழமையாய்ச் சார்ந்திருக்கப்பட்ட மும்மலங்களும் கழிந்து இன்பமுண்டாகும். எனவே தருமத்தின் உயர்வை யாரே அறையவல்லார்.

"தருமமே போற்றிடின் அன்பு சார்ந்திடும்
அருளெனுங் குழவியு மணையு மாங்கவை
வருவழி தவமெனு மாட்சி யெய்துமேல்
தெருளுறு மவ்வுயிர் சிவனைச் சேருமால்
சேர்ந்துழிப் பிறவியும் தீரும் தொன்மையாய்ச்
சார்ந்திடு மூவகைத் தளையும் நீங்கிடும்
பேர்ந்திட லரியதோர் பேரின்ப மதனை
ஆர்ந்திடு மதன்பரி சறைய வல்லதோ."

இத்தகைய தருமம் மகா சங்கார காலத்தில் தானும் அழிய நேரிடுமென்றேங்கி யோசித்து விடையுருக்கொண்டு இறைவனை யடைந்து "யானிறவாமையும் தேவரீருக்கு வாகனமாகுந் தன்மையும் மிக்க வலியுடைமையும் பெற்று உயிர் வாழ அடியேனுக் கருளவேண்டும்" என்று வேண்டி நின்றது. அடைந்தோரைக்காக்கின்ற அருட்கடலாகிய இறைவர் தருமதேவதையை ஏற்றுக்கொண்டு எப்போதும் நீங்காது தன்னிடத்து ஊர்தியாய் வைத்துக் கொண்டார். அந்நாள்முதல் இறைவன் அம்மையோடும் முருகப்பெருமானோடும் தருமதேவதையாகிய விடையை ஊர்ந்து அடியார்களுக்குக் காட்சி கொடுத்தருளாநின்றனர்.

—சித்தாந்தம்.

உ

# மாதர் மறுமணம்.

(தருமர் சாற்றுவது)

**மா**தர் மறுமணம் என்பது தன் பெயராலேயே மறுமணத்தை விரும்பி ஆதரிக்கிற அல்லது வெறுத்து ஆட்சேபிக்கிற இருவகையானஎல்லாஆடவரையும் ஒழித்துநிற்பதென்பதும், மாதருள்ளும் மறுமணத்திற்குத் தகுதிவாய்ந்த கைம்மையர் அல்லது முதல் மணஞ்செய்துகொண்டு விலகி மறுமணம் செய்துகொள்ள அவாவும் மங்கையர் என்னும் இருசாரார் தவிர ஏனை முதல்மணஞ், செய்து வாழும் மங்கையரையும், மணமாகாத கன்னிகைகளையும், மணஞ்செய்து கணவனிழந்தும் மறுமணஞ் செய்துகொள்ள அவாவில்லாத மாதரையும் ஒழித்து நிற்கின்றதென்பதும் தானே போதருகின்றது.

எனவே எல்லா ஆடவர்கட்கும், மாதருள் கன்னிகைகட்கும், மணஞ் செய்து வாழும் மங்கையருக்கும், மணஞ்செய்து கணவனிழந்தும் மறுமணஞ் செய்துகொள்ள அவாவாத மாதருக்கும் இம்மாதர் மறுமணம் ஒரு பயனும் தருவதில்லை என்பதும் பெறப்படுகின்றது. எதனாலெனின் இது மறுமணம் என்ற ஒரு பயனை தருமன்றி வேறொன்றும் சாதிப்பதில்லை என்பது அதன் பெயராலேயே விளங்குவதால், அந்த மறுமணம் என்பதை விரும்பாதவருக்கு அது யாது பலனைச் செய்யப்போகிறதென்பதுதானே தெளிய விளங்குவதனாலென்க.

இன்னும் மறுமணமாதர், அல்லது மறுமணமாதர்கள் என்னும் உயர்திணைச் சொல்லாகயின்றி மாதர்மறுமணம் என்று இலக்கணச் சிறப்பில் பெயராய் அமைந்திருப்பதும் ஊன்றி நோக்கும் காலத்துச் சிறப்பில்லாத செயல் என்பதும் அதனுள்ளாகவே அமைந்து விளக்குவது தெரியவருகிறது. இது நிற்க.

மாதர் மறுமணத்தால் இளவிதவையர் துயர் நீங்க ஏதுவாகாதோ எனின்? நன்று சொன்னாய்! இளவிதவையர்பெருகுவதற்கு மூலகாரணமாய பாலிகை மணம் ஒழிந்தபாடில்லை. அதற்கு ஏற்பட்ட சட்டங்களும் பலன் தருவதாயில்லை இவ்வாறு இருக்கும் நிலையில் இளம் விதவையர் உற்பத்தியாவதைத் தடுக்கவேண்டிய காரியங்களைச் செய்யாது அதனை வளர விடுத்து விதவை மணம் செய்தால் மரம் வளரவிட்டு வளரவிட்டு வெகு பிரயத்தனத்தோடு பெருமுயற்சி செய்து அம் மரத்தில் ஏதோ ஒரு பகுதியில் சிறிது குறைபடுத்துவதை ஒத்ததாய் இருக்கிறது. மரம் வளருமுன் முளையிற் பறித்தெடுத்தலாகியகாரியம் இளம்பாலிகை மணத்தைத் தடுக்கும் பணியேயாம். அதுவே சிறந்ததாக விளங்கும் என்க. வளர்ந்த மரத்தில் ஓர் பகுதியைக் குறைப்பதால் மரம் கெடாதவாறுபோல பாலிகை மணத்தால் விதவைகளை வ[illegible]இலவிதவைகளுக்கு

186961

மட்டும் மறுமணம் செய்வதால் எல்லோர்க்கும் துயர்நீக்கி விதவைகளைக் களைய முடியாதென்க.

இளவிதவைகளேயன்றி இல்லத்துறை மடந்தையரும் குடும்பத்தில் ஒவ்வாத நிலையில் வாழ்வதைவிட மறுமணம் செய்து வாழலாகாதோ எனின்? வெகுநன்று! ஒவ்வாத நிலைமை என்பது எல்லாருக்கும் எல்லாக்குடும்பத்திலும் உள்ளஇயற்கையே. ஒவ்வொருசமயம் ஒவ்வொரு விவகாரத்தில் ஒவ்வாதிருக்கலாம். பின் ஒத்துவரக்கூடும். இது எங்கும் காணக்கூடியதே. ஒவ்வாமையானது பெரும்பான்மையாக நீடித்து விளங்குமாயின் அது இல்லத்தில் இன்பம் தாராது என்பது இயல்பே. ஆனால் அதற்கு மூலகாரணம் இளமையில் தங்கள் மனப்பான்மை ஒற்றுமையையுணரா முன்னோர் செய்யும் மணமேயாம். இதற்கும் இளமை மணமே மூலகாரணமாம். அன்றி மறுமணம் செய்துகொள்வதென்று கொண்டால் தனக்குத் தன் மனம் போனபோக்கெல்லாம் போகாவிட்டால் கணவன்மேல் குற்றம். அக்காரணத்தினாலும் தன் கணவனைவிடக் காளை ஒருவன் மிக எழிலும் இளமையும் உடையவனாய் காணப்பட்டால் அவன்மேற் காதல் கொள்ளுதலும் மனதின் இயற்கை. அக்காரணத்தினாலும் கொண்ட கணவனைத் திண்டாட விட்டு வந்த கணவனை மணந்து அவனோடு மருவி வாழ்ந்து வரும்படி நேரும். அப்போதும் அவன் வறுமையுடையவனாகவோ, வருவாயில்லாதவனாகவோ இருப்பானாயின் அவனிடம் தன்னைப்பேணும் சக்தியில்லை. ஆனால், அழகு இளமை முதலியவற்றில் குறைவின்மையால் பிரியவும் மனமில்லை. எனவே அவாவி வாழ்வதற்கு இவனையும் தன்னை ஆதரித்துப் போற்ற வேறொருவனையும் விரும்பவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அப்போது வேறொரு கணவனை மறுமணஞ் செய்து வாழ்கிறாள். இவ்வாறாக வாழும் மறுமணவாழ்க்கைக்கும் தேவைக்குத் தக்கபடி கணவனைப் பொருள் விரும்பிக் கூடும் வேசைத் தொழிலுக்கும் சிறிதும் வேற்றுமையில்லை. மேலும் இத்தொழிலிலாவது மறுமண வாழ்க்கைப்படியும் கணவனுக்கு அடங்கி நடத்தல் முதலியவற்றினால் பெண்கள் சுதந்திர வாழ்விற்குப் பங்கம் ஏற்படும். வேசைத் தொழிலிலோ அம்மாதிரி அடங்கி நடக்கவேண்டிய அவசியமேயில்லை. இதுவரை கூறியதிலிருந்து மாதர் மறுமணமென்பது ஒருபலனும் இல்லாத செயல் என்பதும், மாதர் மறுமணத்தால் இளவிதவையர் துயர் நீக்க நினைப்பதினும், வேசைத் தொழிலில் ஈடுபடும்படிச் செய்வது அதிகபலன் தருவதாகும் என்பதும் பெறப்படுகிறது. எனவே பெண்கள் சுதந்திரவாழ்விற்குக்கைகொடுத்து அவர்துயர் தீர்ப்பதற்குக்கச்சைகட்டிக்கொண்டுமுன்னின்று மறுமணப்பிரசாரம் செய்து மார்தட்டும் இளைஞர்கள் இனி அதைவிடுத்து வேசைத்தொழிலில் ஈடுபடும்படி பிரசாரஞ்செய்வதேமிகவும் சிறந்ததாகவிளங்குகிறது.

உ

# திருக் கயிலாயகிரி யாத்திரை.

(ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயத்தில் ஸ்ரீ சித்பவாநந்த சுவாமிகள் எழுதியது)

"வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே யாளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி யுள்ளே யொளித்தாய் போற்றி
யோவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி யங்கே யமர்ந்தாய் போற்றி
யாறங்க நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி."

"பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
பிறவி யறுக்கும் பிரானே போற்றி
வைச்சாட லன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாக மசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி".

பூலோகத்தில் திருக் கயிலாகிரி என்று ஒரு ஸ்தலம் இருக்கிறது. மற்ற க்ஷேத்திரங்களுக்குப் போன்று இதற்கும் யாத்திரை போகக்கூடும் என்பது பலர்க்குத்தெரியாது. முன்னாளில் பெரியார்கள் பலர் கயிலாயகிரிக்கு யாத்திரைசெய்த வரலாறுகள் இருக்கின்றன. அவைகளில் முக்கியமானவைபாண்டவர்களைப்பற்றியதும், சுந்தரமூர்த்தி சுவாமிகளைப்பற்றியதுமாம். அப்பர்சுவாமிகள் கயிலையைநோக்கிவடதிசையாகச்சென்றார். அங்குச் சென்று இறைவனை வழுத்தவேண்டுமென்ற பேரவா அவர்க்கு உண்டாயிற்று. ஆனால் மேலும் செல்லச் சரீரம் இடங்கொடுக்கவில்லை. உடலால் ஏற்பட்ட இடைஞ்சலை எண்ணி அவர் வருந்துகையில், கயிலையின் தரிசனத்தைத் திருவையாற்றினின்றே பெறும்படி அவர்க்கு அனுக்கிரகம் உண்டாயிற்று. அம்மலை எங்கிருக்கிறது, அதன் சிறப்பு என்ன என்பது பலர்க்குத் தெரியாது.

பூர்வகாலத்தில் தீர்த்த யாத்திரை பண்ணுவது மிகக் கடினமாயிருந்தது. பிரயாண வசதிகள் அப்போது இடையவே கிடையா. வழியில் விபத்துக்கள் பல இருந்தன. காசி போன்ற இடங்களுக்குப் போய் வருவதே செயற்கரிய செய்கையாயிருந்தது. கயிலாத்துக்குப்போவது இன்னும்

எவ்வளவு கஷ்டமானது என்பது சொல்லாமலே விளங்கும். அந்நாளில் அதை நோக்கிச் சென்றவர்கள் திரும்பி வரவில்லையாதலால் கயிலாயம் போவது பரகதியடைவதோடு ஒப்பிடப்பட்டது. அது சிவனாரது உறைவிடம். சிவசாயுச்யம் என்பதும் அதுவே. அங்குச் செல்பவர் சிவனோடு லயமாகி விடுகின்றனர். மரணமடைபவர் கயிலாயபதவியைப் பெற்று விட்டதாகக் கருதப்படுகிறார். கயிலையைப்பற்றி இன்றைக்கு இவ்வாறு கருதப்படுகிறது.

தில்லையம்பலம் என்பது ஒரு பாரமார்த்திக நிலையாயிருப்பது போன்று அப்பெயர் பூண்ட ஸ்தலம் ஒன்று மண்ணுலகிலும் உண்டு. பாரமார்த்திக உண்மையை விளக்கிக்காட்டும் முறையில் அக்கோயில் அமைக்கப்பட்டிருக்கிறது. திருக்கயிலாயம் இயற்கையாகவே கோயில் போன்று அமைந்துள்ளது. இது இமய மலையின் வடசாரலில் மேற்குத் திபேத்தில் இருக்கிறது. இமயமலை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. சிறிய இமயம், பெரிய இமயம், எல்லை கடந்த இமயம் என்று அப்பிரிவுகளுக்குப் பெயர். ஆங்கிலத்தில் The Lesser Himalayas, the Greater Himalayas, and the Trans-Himalayas) என்று அப்பிரிவுகளைச் சொல்லுவார்கள். கயிலாயம் எல்லை கடந்த இமயத்தில் இருக்கிறது. பெரிய இமயம் என்றைக்கும் உருகாத பனிக்கட்டியை உடையது. இந்தியாவுக்கு வடபுறத்தில் இயற்கை யெல்லையாக ஏற்பட்டது இதுவே. கிழமேற்கில் இது இரண்டாயிரம் மைல் தூரமுள்ளது. இதைக்கடந்து வடபுறம் செல்லுதற்கு வசதியான கணவாய்கள் இல்லை. உபயோகத்தில் உள்ள சில கணவாய்கள் வேனிற் காலத்தில் மட்டும் வழிதிறக்கப்படுகின்றன. மற்றைக் காலங்களில் அவைகள் பனிக்கட்டியால் மூடிக்கிடக்கும். இக்கணவாய்களில் ஒன்றாகிய லிப்புத்தடாகக் கணவாய் வழியாக யாத்திரைவாசிகள் இப்போது பெரிதும் கயிலாயத்துக்குப் போகின்றனர்.

பெரிய இமயத்தின் தென்சாரலில் பேர் பெற்ற வேறு பல க்ஷேத்திரங்கள் இருக்கின்றன. அவைகளில் முக்கியமானவை திருக்கேதாரம், பத்ரிகாஸ்ரமம், கங்கோத்ரி, யமுனோத்ரி, அமரநாதம், பசுபதிநாதம் என்பனவாம். இவைகளுக்கு வருஷந்தோறும் ஆயிரக்கணக்கான யாத்திரைவாசிகள் போய்வருகின்றனர். பிரயாணமும் அவ்வளவு கடினமானதன்று. இக்காலத்திற் பாதைகள் மிகவும் திருத்தப்பெற்றிருக்கின்றன. வயதுசென்றவர்களுங் கூடப் பயணம் போவதைக்காணலாம்.

கயிலாய யாத்திரை ஒன்றுமட்டும் இன்றைக்கும் கடினமானதாயிருக்கிறது. சிலவருஷங்களுக்கு முன்பு இங்குச் சென்றவர்களின் தொகை மிக மிகச் குறைவு. இரண்டு மூன்று வருஷங்களுக்கொரு தடவை யாரோ



இரண்டொருவர் இதைப்போய்த் தரிசித்து வருவார்கள். ஆபத்துக்கு உட்பட்டு மடிந்து போவதும் சர்வசாதாரணம். வட இந்தியாவில் உள்ள வயிராகிகள் இந்த யாத்திரையை மேற்கொண்டு மடிவதையே ஒரு புண்ணியகர்மமாகக்கொண்டு சென்றனர். காலக்கிரமத்தில் பாதைகள் பெரிதும் செப்பனிடப்பட்டிருக்கின்றன. இன்றைக்குவழியின் நிலைமை மிகவும் பொருத்தமானதாயிருக்கிறது. கடக்க முடியாத அவ்வளவு கஷ்டமுடையதுமன்று. யாத்திரையில் சிரத்தையில்லாதவர்களும் சுலபமாகப் போகக்கூடிய சௌகரியம் வாய்க்கப் பெற்றதுமன்று. சிரமத்தைப் பொருட்படுத்தாது போகின்றவர்களுக்கு இது சாத்தியமாகும். இந்தியாவின் பல மாகாணங்களினின்றும் இப்போது சுமார் நூறுபேர் வருஷந்தோறும் போகின்றனர். வங்காளத்தினின்றும், ஐக்கியமாகாணத்தினின்றும் பெண்பாலாரும் சிலர் செல்கின்றனர். மற்ற மாகாணங்களினின்று பெண்மக்கள் போகும் வழக்கம் இன்னும் அதிகரிக்கவில்லை. இன்னும் கொஞ்சகாலத்துக்குள் கயிலாய யாத்திரை மிகவும் பிரசித்திபெறும் அறிகுறிகள் காணப்படுகின்றன.

இந்தியாவுக்குச் சிரசாயிருப்பது இமயமலை. பல்லாயிரம் வருஷங்களாக இந்த நாட்டில் எண்ணப்பட்ட உயர்ந்த எண்ணங்களும் மேலான கோட்பாடுகளும் இந்த மலையினுள் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கின்றன. கன்னியாகுமரி முதல் காஷ்மீரம் வரையில் உள்ள பிரதேசங்களின் சீரிய விற்பன்னங்களுக் கெல்லாம் உறைவிடமாயிருப்பது இது. ஆங்காங்கு அவதரித்த பெரியோர் பலர் இங்குச்சென்று சிறிது காலமாவது வாசஞ் செய்யவிரும்பினர். உலகிலேயே மிகப்பெரிய மலையாகிய இது உயர்ந்த எண்ணங்களுக்கெல்லாம் புகலிடமாய் அமைந்திருக்கிறது. இது நிலைத்திருப்பது போன்று இந்தியாவின் நாகரிகமும் அழிவற்றிருக்கும் என்று பெரியோர்களால் கருதப்படுகிறது. கங்கை, யமுனை, சிந்து, பிரம்மபுத்ரா போன்ற புண்ணிய நதிகளெல்லாம் இதில் உற்பத்தியாகி இந்தியாவுக்குள் வருகின்றன. ஆக இமயமலை இந்தியாவுக்கு ஞானசம்பந்தமான உணவை அளித்துக்கொண்டிக்கிறது.

இமயமலைக்கு முடியாயிருப்பது கயிலாயகிரி. அதற்கு அருகாமையில் மானஸசரோவரம் என்று ஒரு தடாகம் இருக்கிறது. அழகில் அதற்கு ஒப்பான தடாகம் வேறெதுவும் இல்லை என்பது உலகம் முழுவதையும் சுற்றிப்பார்த்தவர்கள் கொள்கை. கயிலாயமும் மானஸசரோவரமும் சேர்ந்து கௌரி சங்கர் என்று சொல்லப்படுகிறது. இந்த ஸ்தலம் ஹிந்துக்களுக்கும், பௌத்தர்களுக்கும் புண்ணியம் வாய்ந்தது. திபேத்தில் இருப்பவர்களெல்லாம் புத்த மதத்தைச் சேர்ந்தவர்கள். கடவுள் வழிபாடு அவர்

களுக்கில்லை. முன் காலத்தில் புத்த மதம் இந்தியாவில் என்ன நிலைமையில் இருந்ததோ அதேநிலைமையில்இன்று அது திபேத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கிறது. புத்த மதத்தின் மேலான அம்சங்களை யெல்லாம் ஹிந்துமதம் தன்னகத்து எடுத்து இணைத்துக்கொண்டுள்ளது எனும் உண்மையும் திபேத்துக்குச் சென்று பார்த்தால் விளங்கும். திபேத்தில் உள்ள பௌத்தர்கள் கயிலாயகிரியின் மீதும், மானஸசரோவரம் தடாகத்தின் மீதும் கொண்டுள்ள பயபக்தி இணையற்றது. ஹிந்துக்களோடுகூடி அவர்கள் கயிலையைச் சிவனது உறைவிடம்என்கின்றனர். சிவபதவி என்பதும் மகா நிர்வாணம் என்பதும் அவர்களுக்கு ஒன்றே. புத்தர்கள் பலர் கயிலையின்கண் மகா நிர்வாணம் அடைந்துள்ளனர் என்று அவர்கள் சொல்கின்றனர். இந்தியாவினின்று கயிலைக்குப் போகின்றவர்களிடத்தில் அவர்கள் பேரன்பு பாராட்டுகின்றனர். ஹிந்துக்கள் தொன்றுதொட்டு இந்த க்ஷேத்திரத்தைப் பயபக்தியுடன் பாராட்டி வந்திருக்கின்றனர். பூர்வ காலத்தில் பல மகரிஷிகள் இப்பதியின்கண் தபசு பண்ணிக்கொண்டிருந்ததாக ஐதிகம் உண்டு. அவர்கள் தபசு புரிந்த இடங்கள் இன்றைக்கும் காண்பிக்கப்படுகின்றன. அசுரர்கள் தபசு பண்ணிய இடங்களும் அங்குக் காண்பிக்கப்படுகின்றன. இராவணனைப் பற்றிய வரலாறு திபேத்தில் ஏராளமாயுண்டு. கயிலையை எடுத்துக்கொண்டு போதற்காக இலங்கை வேந்தன் வந்தவிதம், அவன் தவமிழைத்த தடாகம், கயிலையை எடுக்க முயன்றது ஆகியவைகள் அப்பிரதேசத்தில் பெரிதும் சொல்லப்படுகின்றன.

கடவுள் பக்தியில்லாதவர்களும் கயிலையைப் போய்ப்பார்த்தால் அது உலகில் ஓர் அற்புதமான இடம் என்று ஒத்துக்கொள்வர். இரவும் பகலும் வேளைதோறும் அதன் தோற்றத்தில் உண்டாகும் வேறுபாடுகள், வேறுபாடுகளுக்கிடையில் அதன்கண் மாறாது மிளிரும் மகிமை, அவ்விடத்தில் உள்ள மனதைக்கவரும் அருட் பிழம்பு ஆகியவைகளை மானுடர் யாரும் மறுக்கமுடியாது.

இமயமலையில் அல்மோரா எனும் ஊரினின்று கயிலைக்குச்சென்று, திரும்பவும் அவ்வூர் வருதற்கு ஐந்நூறு மைலுக்குச் சற்று அதிகமாகவே இருக்கின்றது. பாதைமிக ஒடுங்கியது. வண்டி முதலியவைகள் அங்குச் செல்லா. யாத்திரைவாசிகள் நடந்தேசெல்லவேண்டும். வழிமுழுதும்நடக்க இயலாதவர்கள், அல்லது ஐதிகமாக யாத்திரை பண்ண இயலாதவர்கள் சிற்சில இடங்களில் குதிரையின்மீது போகலாம். யாத்திரைகளில் இது ஒப்பற்றது. அநேகவிதமான அரிய அனுபவங்கள் இதில் உண்டாகின்றன. பார்ப்பதற்கு அரிய காட்சிகள், மீளுதற்கு அரிய ஆபத்துக்கள், செய்தற்கு அரிய தபசு ஆகியவைகள் ஒன்று கூடியது இந்த யாத்திரை. தென்னிந்தியாவினின்று நாங்கள் ஒரு சிலர் சென்ற மேமாதம் இந்த யாத்திரையின் பொருட்டு இமய மலைக்குள் சென்றோம்; ஆகஸ்டுமாதத்தில் அம்மலையினின்று வெளியே வந்தோம். எங்கள் யாத்திரையின் வரலாறு முழுதும் இப்பத்திரிகையில் தொடர்ந்து பிரசுரிக்கப்படும். அதில் மூன்று பாகங்கள் அடங்கியிருக்கும். முதலாவது பாகத்தில் யாத்திரை நடந்தேறியவாறு விளக்கப்படும். இரண்டாவது பாகத்தில், யாத்திரையினால் உண்டான நன்மைகள் சொல்லப்படும். இறுதியாகத் திருநாவுக்கரசு சுவாமிகள் கயிலையைப் பற்றிப் பாடிய தேவாரத்துக்கும் நாங்கள் கண்ட காட்சிக்கும் இடையே ஏற்பட்ட பொருத்தம் விளக்கப்படும்.

௧

# செந் தமிழ்த் தென்றல்.

(வித்துவான், திரு, A. சண்முகவேற் பிள்ளை யவர்கள்.)

தென்றற் காற்றே! தென்றற் காற்றே!
மன்றல் தவழுந் தென்றற் காற்றே!
குன்றப் பொதியி னின்றே தோன்றி
அன்று மின்று நன்றே சென்று
அறிவு கொளீஇ அழகுற நடைபெறும்
தென்றற் காற்றே! தென்றற் காற்றே!
குறுமுனி நாவினிற் சிறுநடை கற்று
"வையை யென்னும் பொய்யாக் குலக்கொடி"
சுற்றிப் படர்தரும் வெற்றிசேர் கூடல்
பங்கமு தற்றெளிர் சங்கமு தேறி
எங்குஞ் செலீஇத் தங்கிய தென்றலே!
சீர்நிறை மூவரும் பேர்நிறை யேனையக்
குறுநில மன்னரும் பெருநிலக் கிழவரும்
விரும்பி வளர்த்த அருந்தமிழ்த் தென்றலே!
தேனென முரலுந் தென்றமிழ்த் தென்றலே!
பைங்கிளி பயிலும் பைந்தமிழ்த் தென்றலே!
தீங்குயில் மிழற்றுந் தீந்தமிழ்த் தென்றலே!
பூவை பாடப் பொலிவுறுந் தென்றலே!
வள்ளியோ ரறியுந் தெள்ளிய தென்றலே!
செந்நாப் புலவர்தந் திருவா யதனிடை
எந்நா டோறு மிலகுறுந் தென்றலே!
வானவர் வாழ்த்தும் வளந்தனை யறிந்து
மக்கள் மனையொ டொக்கலுஞ் சேர்தர
நாளும் பருகுற நலந்தனி சிறக்கத்
தமிழர்கள் போற்றுந் தண்டமிழ்த் தென்றலே!
ஓங்கி யாங்கள் உரம்பெறீஇ வளரப்
பாங்குற வீசும் பழந்தமிழ்த் தென்றலே!
ஈங்கெமை நீங்கிநீ யாங்குறைந் தனையோ!
நாவெனும் பேர்நிறீஇக் கருங்கடல் தாவிய

மேற்றிசைக் காற்றும் வேற்றிசை ஆங்கிலம்
காலையு மாலையுங் கடிதே அடித்துப்
பால்மண மாறப் பாலர் தம்மையும்
ஏக்க மிகுதரத் தாக்கி நின்றம்ம!
ஆண்மை தன்றி அடிமை ஒன்றி
மிடிமை யொன்றுநம் குடிமை யாக
நிச்ச நிரப்பக் கச்சங் கட்டி
அச்சமுந் துன்பமு மெச்சமே யாக
தூங்கிச் சோர்ந் தேங்கியாம் புலம்ப
பன்னருந் தென்றல் இன்னுயிர் கொண்டுநீ
யாங்கொழிந் தனையோ! யாங்கொழிந் தனையோ!
கண்டில மாகிக் கலங்கின நேடி
இந்நாட் கண்டன மென்னே கலந்தற
நன்றி யறியா நடையினர் சூழ்ச்சியால்
வடவெலை கடந்து திடமுடன் நந்தம்
விருப்ப மின்றி 'விறுவிறு' வென்றே
மாறு தடித்துஞ் சூறு வளியாம்
பூசற் காற்றே நேசத் தென்றலென
பாசமீக் கொண்டொளி ஈசல் போல
மோசமா யினரே! மோசமா யினரே!
தேயங் காட்டி மாயஞ் செய்யும்
கலைபயில் சிறர்தம் தலைவிதி யாகவே
மதியைக் கெடுக்க விதிகொண் டெழூஉம்
பேத மிக்க ஊதைக் காற்றும்
இந்தி கற்க முந்தி நின்று
'நாகர லிபி'யில் மோகங் கொண்டு
காக மெனவே கரைந்து பறந்து
தேகந் தன்றுங் கூகைகாள்! நுங்கள்
உடைமை விற்றுக் கடமை மறந்து
தாய்க்கொலை புரிய வாய்ப்புற் றனிரே
தாழ்ச்சி மிகுதர வீழ்ச்சி செய்யும்
நஞ்சங் கலந்தே யஞ்சாது வீசும்
வாடை வரவினை நாடிய தமிழன்



'ஐயகோ' வென்றே யலறிமெய் துடிக்க
மட்டி போலக் கொட்டாவி விட்டு
எட்ட நின்றெமக் கென்னென் றிராது
கட்டாய வாடையை அட்டுநின் றென்றுங்
கொட்ட மடக்கி நட்டம் புரிந்து
முன்றில் தோறும் தென்றல் கமழ
இன்றே முந்துமின்! நன்றே புரிமின்!
உள்ளங் குளிர்தர உடல்பூ ரிப்புறத்
தேன்பா லெனவே ஊன்கலந் தினிக்க
ஆரா வின்பமும் பேரா உவகையுந்
தாரா நிற்குந் தமிழெனுந் தென்றலை
நன்றே உட்கொண் டின்றே வென்றி
வீரத் தமிழீர்! வீறிட் டெழுமின்!
ஆசை கொண்மின்! மீசை முறுக்குமின்!
சோம்பறைத் துடைமின்! மேம்பட நின்மின்!
சுயநல நீங்குமின்! பயமிக விடுமின்!
நாய்க்கலை போற்றிப் பேய்க்கலை ஒழிமின்!
தெய்வத் தென்றலை மெய்பெறச் செய்மின்!
அன்பு கனிமின் இன்பங் கொண்மின்!
வாழியர் பாடிநீ டூழி வாழ்மின்!
வாழியர் தமிழர்தம் வளமிகு தென்றல்!
வாழியர் தமிழகம்! வளத்தொடு
ஊழி யூழி வாழியர் பெரிதே.

---

# தமிழின் வளர்ச்சி.

---

முற்காலத்தில் தமிழ்நாடு பரந்த நிலப்பரப்புடைய தேயமாக விளங்கிற்று. தனித் தமிழே எங்கும் செறிந்து நிலவிற்று. மூன்று தமிழ்ச் சங்கங்களும் தமிழை மிகவும் போற்றிப் பொலிவு பெறச் செய்து வளர்த்தன. அளவில்லாத தமிழ்ப் புலவர்கள் தெய்வீகத் தன்மையுடன் விளங்கித் தமிழில் பொருட்செறிவோடு

நயம்படச்செய்து வந்த பாடல்கள் இன்றும் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. அக்காலத்தில் தமிழ் தன்நிலை குன்றாது வீசியமணமே இன்றுவரை கமழ்ந்துகொண்டிருக்கிறது. நாமும் அதுகாரணமாக ஆனந்தப்படுகிறோம்.

தற்காலத்தில் பரந்து விளங்கிய தமிழ்த்தேயத்தின் பெரும் பகுதிகள் கடலுக்கு இரையாயின. அரிய பல நூல்களும் தொலைந்தன. எஞ்சிய தேயத்திலும் ஒரு பகுதி தெலுங்கு மொழியும் ஒரு பகுதி மலையாளமுமாக மாறிற்று. இவற்றிற்கெல்லாம் தப்பியுள்ள சிறு பகுதியையே தமிழ்நாடென்று வழங்குகிறார்கள். இந்நாட்டிலும் ஆங்கில ஆட்சியின் கீழ்ப்பட்டு யாண்டும் ஆங்கிலமே வழங்குவதன்றி ஆங்கிலத்தின் இடையே அடிபட்டும், இடிபட்டும் மற்றும் பிறமொழிகளின் இடைப்பட்டும் விரவித் தமிழானது வருந்துவதாய்க் காணப்படுகிறது. தனித்தமிழை வழங்குவது யாண்டும் காண்பதரிதாயிற்று. ஒரு கலாசாலையிற் பயிலும் தமிழ் மகனுய ஒரு மாணவன் தமிழினிடத்தே உண்மை யன்பு பூண்டு விளங்குகிறானா? இல்லவே யில்லை. படிக்கும்போதே இந்தத்தமிழ்ப் பண்டிதனும், தமிழும் என்றைக்கு......என்பதாகச் சொல்லி அழுகிறான். தமிழ்ப் பண்டிதரைக் கண்டாலே நஞ்சாக விருக்கிறது. தமிழ்ப் புத்தகம் படிப்பதென்றால் விளக்கெண்ணெய் குடிப்பது போல் இருக்கிறது.

பிற்காலத்தில் எந்தத் தமிழ்மகன் ஆங்கிலேய நாகரீகத்தை விரும்பாதிருக்கிறான்? யார் ஆங்கிலம் பேசுவது நாகரீகம் அல்ல என்று கருதுகிறார்கள்? எல்லாரும் ஆங்கிலம் தெரியாவிட்டாலும் பிழையோடு அரைகுறையாகவாவது பேசவேண்டுமென்றே விரும்புகிறார்கள். இதனால் ஆங்கிலத்தைக் குறை சொல்லுவதாக நினைக்கக்கூடாது. தன் சொந்தப்பாஷையில் பயிற்சி, அபிமானம், தன்நம்பிக்கை யிருக்குமானால் அவன் எந்தப் பாஷையை வேண்டுமானாலும் இன்னும் எத்தனை பாஷைகள் வேண்டுமானாலும் பயிலலாம், பேசலாம். சொந்தப் பாஷையில் பயிற்சியும் அபிமானமும் இல்லாமல் வெறுப்புக்கொண்டு, பிறபாஷைகள் படித்துப் பெருமையடைவது பிரயோசனமில்லாத காரியம். இந்நிலையில் நம் நாட்டுப் புதிய மந்திரிகள் ஹிந்தி பாஷையையும் வேண்டாம் என்பவன் கழுத்தில் சுவாமியைக் கட்டுவதுபோல் வலியவே கொண்டுவந்து புகுத்துகிறார்கள். இந்த நாகரீகமெல்லாம் எந்த நிலையில் முடியுமோ? எப்படியாகுமோ? யார் கண்டது. அதெல்லாம் உங்கள் கைவசத்தில் இருக்கிறது. நான் சொல்வதால் ஆவதென்ன?

தமிழ் அபிமானி.

---

# மதிப்புரை மஞ்சரி.

திருவள்ளுவர் பெருமை:— என்னும் ஒருவசன நூலை யாழ்ப்பாணம் வித்துவசிரோமணி ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப்புலவரவர்கள் மாணாக்கரும், கம்பை செட்டியார் உயர்தரக் கல்வி நிலையத் தமிழ்ப் பண்டிதரும் ஆகிய திரு. வ. மு. இரத்தினேசுவரையரவர்கள் இயற்றிவெளியிட்டுள்ளார்கள். "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார், தோன்றலிற் றோன்றாமை நன்று" என்பது திருவள்ளுவர் அருளிய தமிழ்வேதமாகிய திருக்குறள் 1330-ல் ஒன்று. அக்குறட்பாவுக் கிலக்கியமாகப் புகழொடு தோன்றியவர்களுள் முதன்மையாளர் அத் திருவள்ளுவரே. அவர் பெருமை அவர் தோன்றிய காலத்திலிருந்து இன்றும் என்றும் பொன்றாப் புகழுடன் நின்று நிலவுவது. உலகம் போற்றும் உத்தமரென்று அவரைத்தான் சொல்லலாம். உலகத்திலுள்ள மக்களுள் அறிவுள்ளாராமொருவரும் திருவள்ளுவரைப் பற்றி இம்மியளவுங் குறைகூற மாட்டார்கள். அவர் வகுத்தநீதி நூலாகிய திருக்குறள் தண்டமிழின் மேலாந்தரமாகத் தமிழ்வேதமாக இத்தமிழ் நாட்டவரால் போற்றப் பெறுவதோடமையாது பிறநாட்டவரும் அருமை யறிந்து தத்தம் மொழிகளிற் பெயர்த்துப் பயின்று பயன்றுய்த்துப் பாராட்டும் பெருமைபெற்று விளங்குகிறது. எந்நாட்டவரும், எல்லாச்சமயத்தினரும், பல்வேறுசாதியினரும் எக்காலத்திலும் உவந்துகொண்டு சத்திய வேதமாகப் போற்றும் தகுதியுடைய நீதி நூலாசிரியரின் பெருமையே என்றும் கொண்டாடும் இயல்பினதாகும். அப்பெரியாரின் வரலாறுகளைச் சுருக்கி விளக்கிச் சாரமாக முன்னுரை வரைந்தும் அவரருளிய திருக்குறள்களின் கருத்துக்களைக் குறிப்பாக எடுத்து விளக்கியும் உள்ள இந்நூல் திருக்குறள் ஆசிரியரின் வரலாற்றையும், குறட்பாக்களின் கருத்தையும் எளிதில் உணர்ந்து கொள்ளற் கேதுவாக விருக்கின்றது. இந்நூலை இயற்றியவர், அணிந்துரை யளித்தவர், அச்சியற்றிவெளியிட்டவர் ஆகியவர்கட்கு இத்தமிழுலகம் பெரிதும் நன்றி பாராட்டும். இதன் விலை அணா நான்கு. இரங்கோன் மங்கமாரி வீதி, நவீனகதா புத்தகசாலையிற் பெறலாம்.

அநுட்டான அகவல் மூலமும் உரையும்:— கமலை ஞானப் பிரகாசதேசிகர் இயற்றிய அநுட்டான அகவலுக்கு, யாழ்ப்பாணம், அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் தெளிவான உரையெழுதிப் பதிப்பித்துதவியுள்ளார்கள். கடினபதங்களாலமைந்த அகவலின் நுண்பொருள் இவ்வுரையால் நன்குவிளங்கப் பெறலாம். அகவலுடன் இவ்வுரை நூலின் விலை 0-1-6. சிவஸ்ரீ ச. கு. வைத்தீசுவரக்குருக்கள், அச்சுவேலி யாழ்ப்பாணம்என்னும் விலாசத்திற் பெறலாம்.

உமர்கையாம் பாடல்:— இற்றைக்கு 980 ஆண்டுகட்குமுன் பாரசீக தேசத்தில் வாழ்ந்திருந்த உமர்கையாம் என்னும் இஸ்லாமியப் பெரியார் பாரசீக பாஷையில் ஞானப் பொருட்கள் செறிந்த அநேகஞ்செய்யுட்கள் செய்துள்ளார். அவைகள் ஆங்கிலம் முதலிய பல பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. தமிழறிந்தவர்களும் அப்பாடற் பொருளை யறியவேண்டிச் சென்னை உயர்தரநீதிமன்றத்தில் உத்தியோகம் புரியும், திரு, மின்னு நாருத்தீன் அவர்கள் தமிழ்மொழியில் இனிய விருத்தப்பாக்களாகச் செய்து வெளியிட்டுள்ளார்கள். பாக்கள் சொன்னயம், பொருணயம் பொதிந்ததாக விளங்குகிறது. நூலின் கருத்து அனைவரும் போற்றற்குரியது. பாக்கெட் அளவில் 90 பக்கங்களடங்கிய இந்நூல் விலை ஆறு அணா. P. வரதாச்சாரி அண்டு கம்பெனி 8 லிங்கச் செட்டி தெரு, சென்னை என்னும் விலாசத்திற் பெறலாம்.

இயற்கை வாழ்வு:—உடலினிடத்து வியாதியுண்டாதற்குரிய காரணங்களும், வியாதியுண்டானால் எளிதிற்றீர்த்துக்கொள்வதற்காமுபாயங்களும், உடலை வியாதியின்றிக்காப்பாற்றும் வழிகளும் இச்சிறு நூலின் கண் தெளிவுபெற விளக்கப்பெற்றிருக்கின்றன. இயற்கையோடியைந்த வாழ்வை விரும்பும் அன்பர்கள் இந்நூலைப் படிக்க வேண்டும். இந்நூல் புதுக்கோட்டை இயற்கையில்லம் திரு. ல. காமேஸ்வர சர்மா B Sc. Hons. அவர்களால் இயற்றப்பெற்றுக் கோட்டையூர், அன்பர், திரு. வெ. ந. இலக்குமணச் செட்டியாரவர்களின் அறுபதாவதாண்டு நிறைவின் நினைவுக்குறியாக வெளியிடப்பட்டிருக்கிறது. ஷை செட்டியாரவர்களிடத்திற் பெறலாம்.

அடியில் வரும் நூல்கள் ஐந்தும், புதுவையில் வசிக்கும் சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்களால் எழுதப்பெற்றுச் சிங்கப்பூர் அன்பு நிலையத்தாரால் வெளியிடப்பெற்றிருக்கின்றன. வேண்டுவோர்: காரியதரிசி, அன்பு நிலையம் ஆபீஸ், 11 டாங்க் ரோட் சிங்கப்பூர் என்னும் விலாசத்திலும் புதுக்கோட்டைச் சமஸ்தானம், இராமச்சந்திரபுரம், திரு, அரு. அண்ணாமலைச் செட்டியாரவர்களிடத்திலும் பெறலாம்.

## ௧. இன்பமாலை.

இந்நூல் 1075 வரிகளைக் கொண்ட அகவற்பாவாற் சமரசப் போக்கிற் செய்யப்பட்டிருக்கின்றது. இதில் சாதி மத ஒற்றுமை, அன்பு, வேதாந்தத்துவம், தெய்வவுண்மைமுதலிய செம்பொருள்கள் தெளிவுபெற விளக்கப்பெற்றிருக்கின்றன. உலக நிலையாமை பெரியோரியல்பு, உலகம் பெரியோரை உணர்ந்துகொள்ளாதிழைக்குந் தீமைமுதலியனவும் விரிக்கப்பெற்றிருக்கின்றன. இந் நூலைப் படிப்போர் இன்பமயமாதலேயன்றி அன்பு மயமுமாவர். இந்நூல் மக்கட்கு நற்பயன் தருவது. விலை அணா 5.



## ௨. பைந்தமிழ்ச் சோலை.

ஆசிரியர் இந்நூலில் தமிழின் உண்மை நிலையையும் வரலாற்றையும் எளிய நடையில் இனிமையாக எழுதியுள்ளார். சங்க நூலின் தன்மைகள் விளக்கப்பட்டுள்ளன. ஆசிரியரது தமிழ் மொழிப்பற்றும், தமிழுக்குத் தொண்டு செய்யவேண்டுமென்னும் பேரார்வமும் நன்குமதிக்கத்தக்கன. இந்நூலைத் தமிழ் மக்கள் படித்தால் தமிழின் தொன்மையையும், இனிய தன்மையையும் நன்குணர்ந்து இன்புறலாம். "சோலை செழிக்கவேலை" என்னும் பகுதியிலும் "தமிழாலயம்" என்னும் பகுதியிலும் ஆசிரியர் எழுதியுள்ளன மனோராச்சியமாகவே முடிவுபெறும். இந்நூல் அனைவரும் வாசிக்கத்தக்கது. விலை அணா 4.

## ௩. தருமவர்த்தனம்.

இந்நூல் ஓரதிகாரத்திற்கு ஐந்துவீதம் குறள்வெண்பாக்களாக 95 அதிகாரங்களாக இயற்றப்பெற்றிருக்கிறது. பாரதியாரவர்கள் முன்னியற்றி வெளியிட்டுள்ள அறநூலின் பொருளை ஒரு புடை தழுவி நிற்கிறது. கடவுளிலக்கணம், உலக விலக்கணம், தரும விலக்கணம், அறிவிலக்கணம், அன்பிலக்கணம் முதலிய பன்னிரண்டு பிரிவுகளாகப் பிரித்து எளிய நடையில் அனைவர்க்கும் விளங்கும் முறையில் எழுதப்பெற்றிருக்கிறது. சில விடங்களில் தளைதட்டல் முதலிய வழுக்கள் காணப்படுகின்றன. பொருட்செறிவுள்ளது விலை அணா 4.

## ௪. இன்று மனிதனும் இனிவரும் மனிதனும்.

இந்நூல் தற்கால உலகின் நிலைமையை நன்கு விளக்குகிறது. மேனாடுகள் போர்க்கோலத்தோடு புரியும் அநீதிகளும், அசுரபலம் படைத்த அவர்களது விபரீதச் செய்கைகளும் கண்டிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் வரக்கூடிய மனிதன் எவ்விதமிருப்பான் என்பதையும் ஆசிரியர் தமது அகக்கண்ணாற் பார்த்து எழுதியிருக்கிறார். பிற்கால மனிதரிடம் எதிர்பார்க்கும் எல்லாக்குணங்களும் இல்லாமற் போனாலும் ஒரு பகுதியாவது இருக்கவே செய்யும் என்பது ஆசிரியரின் திண்ணம். இந்நூல் சுவாமிகள் தமது நண்பரொருவர்க்கு எழுதிய கடிதமாகும். விலை அணா 2.

## ௫. பொதுநெறி.

ஆத்திசூடியைப்போல், இந்நூல் சிறு சிறு வாக்கியங்களால் ஆக்கப்பெற்றிருக்கிறது. எல்லோர்க்கும் இனிது விளங்கும் எளிய நடையில் இயன்ற நீதிகளையுடையது. விலை அணா 1.

திருவாரூர்க்கோவை:— பிறக்க முத்தியளிக்கும் பெற்றிமிக்க திருவாரூரின் கண்ணெழுந்தருளியுள்ள தியாகராயப் பெருமான்மீது எல்லப்ப நயினாரென்னும் புலவர்திலகரால் சில நூற்றாண்டுகட்கு முன் யாக்கப்பெற்றது. சொன்னோக்கும் பொருணோக்குமொருங்கேயமையப்பெற்றதாக, தமிழ் மக்கட்குப் பெருவிருந்தாக, படிப்பார்க்குப் பேருவகை யூட்டும் பான்மைமிக்கதாகவுள்ள இக்கோவை எட்டுப் பிரதியிலிருந்ததைப் பிரம்மஸ்ரீ மகாமகோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் தியாகராச விலாச மாதவெளியீடென்னும் பெயருடன் முகவுரை, திருவாரூர்த் தலச்செய்திகள், நூலாசிரியர் வரலாறு, நூலாராய்ச்சிகளும் விளக்கமாக எழுதிப்பதித்து வெளிட்டுள்ளார்கள். நல்ல கிளேஸ் டிம்மி 1-க்கு 8. 200 பக்கங்கொண்ட புத்தகம். ஐயரவர்களின் செந்தமிழ்த் தொண்டை உலகம் நன்கறியும். அவர்களின் சலியா உழைப்பினாலேயே இன்று தமிழன்னை அருங்கலம் பூண்ட பெருங்கலைமகளாகப் பிறங்குகின்றாள். அவர்களின் பதிப்பு நூல்களை அனைவரும் அன்புடன்பெற்றுமேலும் உள்ள நூல்கள் வெளிவருமாறூக்கமளிக்க வேண்டும். இக்கோவையின் 324வது செய்யுளை மாதிரிக்காக ஈண்டு தருகிறோம்.

"பொழியுங் கருணைய ராரூர்க்கு நாம்பிந்திப் போயினொரு
பழியுஞ் சுமந்திடு மேவல வாவழி பார்த்து மங்கை
விழியுஞ் சிவந்திடு மேபல கால்வந்து மீண்ட முன்றில்
வழியுங்குழிந்திடு மேபொய்க்கு மேசொன்ன வாய்மையுமே"

இதன் விலை ரூ 1-4-0. தியாகராஜ விலாசம் 67 பிள்ளையார் கோயில் தெரு, திருவேட்டீசுரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை. என்னும் விலாசத்திற் பெறலாம்.

சிவாலயமும் மஹாகும்பாபிஷேகமும்:— இந்நூல் திருத்தென்குடித்திட்டைத் திருத்தலத்தின்கண் சைவ சித்தாந்த வித்தியாசாலையில் குருமூர்த்தியாக வெழுந்தருளிய உயர்திரு சச்சிதானந்த சுவாமியவர்களால் இயற்றப்பெற்றுச் சென்னை சைவ சித்தாந்த மகாசமாஜத்தாரவர்களால் திருக்கொள்ளம்பூதூர்த் திருப்பணிச் செல்வர், திரு, பெ. ராம. இராமன் செட்டியாரவர்களின் நினைவு மலராக வெளியிடப்பெற்றிருக்கிறது. இப்புதிய நூலில் கடவுளியல்பு, கடவுள்உண்மை, கடவுள் வழிபாடு, ஆலய அமைப்பு, ஆலய சொரூபம், ஆலய தரிசனவிதி, ஆலயதரிசன பலன், மந்திர சக்தி, சக்தியின் இயல்பு, கும்பாபிஷேக தத்துவார்த்தம், கும்பாபிஷேக தரிசன பலன் ஆதிய விஷயங்கள் சுருக்கமாகவும், விளக்கமாகவும் எழுதப்பெற்றிருக்கின்றன. மந்திரத்தின் சக்தியைச் சுவாமிகள் தக்க உபாய வாயிலாக விளக்கிச் செல்வது நாத்திகர்கட்கும் நல்லறிவுச் சுடர் கொளுத்துவதாகும். சைவ சமயிகள்



ஒவ்வொருவர் கையிலும் இந்நூல் இலங்கவேண்டியது இன்றியமையாததாகும். தனிப் புத்தகத்தின் விலை அணா இரண்டு. பத்துப் பிரதிகள் ரூபா ஒன்று. காரியதரிசி, சைவசித்தாந்த மகாசமாஜம் 22 ஏ, கல்லுக்காரத்தெரு மைலாப்பூர் சென்னை என்னும் விலாசத்திற் பெறலாம்.

ஆனந்தபோதினி:— சென்ற இருபத்திரண்டாண்டுகளாகச் சென்னையிலிருந்து வெளிவரும் ஆனந்தபோதினி இந்த ஈசுவர ஆண்டு ஆடித் திங்கள்முதல் இருபத்து மூன்றுவதாண்டை யடைந்திருக்கிறது. தமிழ்நாட்டிற்பத்திரிகைகள் மிகப்பரவுவதற்குமுன்னரே ஆனந்தபோதினி தோன்றித் தமிழுலகத்திற்கு நல்ல தொண்டு செய்து வருகின்றது. இதிற் புராணேதிகாச விஷயங்களும், வேதாந்த சித்தாந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளும், மாணவர்கட்கான இலக்கண இலக்கிய வியாசங்களும், பெரியார் சரித்திரச் செய்திகளும், பிறவும் நிறைந்திருக்கின்றன. ஆனந்தபோதினியைப்பற்றித் தமிழ்நாட்டினர்க்கு அதிகம் சொல்லவேண்டியதில்லை. திங்கள் தோறும் வெளிவரும் புதினத்தாள்களுள் சிறந்த கட்டுரைகளையும் பிறவரலாற்றுரைகளையும் மிகுதியாகக்கொண்டு குறைந்த சந்தாவில் வெளிவந்து பயன்றருவதில் இதுவே முதன்மையானது. அனைவரும் ஆனந்தபோதினியைப் படித்து நற்பயன் பெறுவார்களாக. இதன் வருடசந்தா ரூபாஒன்று. விலாசம் ஆனந்தபோதினி ஆபீஸ் தபால் பெட்டிநெ. 167, சென்னை.

விநாயகர் அகவல்; அநுபூதி; அலங்காரம்:— ஔவையாருளிய விநாயகரகவலும், மணிமங்கலம் திருவேங்கட முதலியார் இயற்றிய விநாயகாநுபூதியும், புதுவை, பொன்னைய முதலியாரவர்கள் பாடிய விநாயகரலங்காரமும், கோட்டையூர், சிவநேசத் திருவாளர், வெ. நா. லெ. இலக்குமணச் செட்டியாரவர்கள் உதவிகொண்டு பஞ்சாக்கரபுரம் வாலையானந்த சுவாமிகள்என்றஉயர்திரு, சச்சிதானந்த சுவாமிகள் அச்சியற்றி ஒரேபுத்தகமாக வெளியிட்டுள்ளார்கள். விநாயகரகவல் நெடுங்காலமாக வெளிவந்து பக்தர்களின் பாராயணத்திற்குகந்ததா யிருப்பதேபோல் விநாயகாநுபூதியும், விநாயகரலங்காரமும் சேர்ந்து வந்திருப்பது 'பிரணவப் பொருளாம் பெருந்தகை யைங்கரன், சரவணற்புதமலர் தலைக்கணிவோர்'க்குப் பெரிதும்பயன்றருவதாகும். இளையபிள்ளையாராகியகந்தருக்குஅநு

பூதியும், அலங்காரமும் அருணகிரிநாதர் பாடி யருள்பெற்றுங்கு மூத்தபிள்ளையாராகிய விநாயகருக்கு இரு முதலியாரவர்கள் பாடி யருள் பரப்பியுள்ளார்கள். விநாயகரகவலுடன் அநுபூதியையும், அலங்காரத்தையும் சேர்த்து அச்சியற்றி வெளியிட்ட உயர்திரு, சுவாமியவர்களின் உபகாரச் செயலும், பொருளுதவிய செட்டியாரவர்களின் உதாரச் செயலும் தோத்திரத்திற்குரிய மூன்று நூல்களினும் பொதிந்துள்ள விநாயக தத்துவார்த்தங்களின் நுண்பொருள்களும் யாவரும் போற்றுந்தகையன. புத்தகம் க-க்கு விலை 0—2—6. புத்தகம் க0-க்கு 1—4—0. கோட்டாச்சேரி சித்தாந்த நிலையத்திற் பெறலாம்.

முனி மொழி மூலம்:— இந்நூல் பாடினோர் பெயர் தெரியவில்லை. இதனைத்தேடிச் சில சுவடிகள் பெற்றுத் திருத்தமாகப் பதித்துவெளியிட்டவர், ஈரோடுமார்க்கம், மொடக்குறிச்சிபோஸ்டு, எழுமாத்தூர், தமிழாசிரியர், வித்துவான், வே. ரா. தெய்வ சிகாமணியவர்கள். அவர் இதன் முகவுரையில் முனி மொழி என்னும் இந்நூல் 'தேவர் குறளும் திருநான் மறை முடிவும், மூவர் தமிழும் முனி மொழியும் — கோவை, திருவாசகமுந் திருமூலர் சொல்லும், ஒருவாசகமென்றுணர்.' எனவரும் நல்வழிவெண்பாவிற்புகழ்ந்தோதப்பெற்ற தித்தண்டமிழ் நூலேயேபோலும் என்றெழுதியுள்ளார். இந்நூல் முப்பது செய்யுட்களையுடையது அதன் எழாவது செய்யுள்.

> ''தற்பரந் தானே தென்னில் தத்துவந் தானய்நிற்கும்
> தத்துவந் தானே தென்னில் சதாசிவந் தானய்நிற்கும்
> நிற்கின்ற சிவமே தென்னில் நின்மல வடிவதாகும்
> கற்கின்ற வற்வி ஞானே காணலாங் காட்டொணாதே.''

என்பதாம். இந்நூலைத் தமிழ் மக்களும் சைவ மக்களும் படித்துத் தத்துவார்த்தங்களுணர்ந்து பயன்றுய்க்கப்பாலது. பதிப்பாசிரியர்க்குப் பிரதி ஒன்றுக்கு ஒன்றரையணாத் தபால் தலைகள் அனுப்பிப் பெறலாம்.

நான்யார்? :— திருவண்ணாமலையின்கண் விரூபாக்ஷ குகையில் பகவான் ஸ்ரீ ரமணரிஷிகள்பால் M சிவப்பிரகாசம் பிள்ளை B .A. என்னும் அன்பர் 1901, 1902-ம் ஆண்டுகளில் அணுகி வேண்டிய வினக்களும் மஹரிஷிகள் அருளியவிடைகளுமாகும். மனித வாழ்க்கையைப் பெற்ற ஒவ்வொருவரும் ஆன்மவுணர்ச்சி



யுடையராதற்கு உதவியாகவுள்ளது. மஹரிஷிகளின் நிழலோவியத்துடன் அவர்கள் ஆச்சிரமத்தின் சர்வாதிகாரி நிரஞ்சனனந்த சுவாமிகளால் பிரசுரிக்கப்பெற்றது. விலை அணா ஒன்றரை. ஆச்ரமத்திற்பெறலாம்.

சிவாகம வித்தியா:— இது வேதநெறி, சைவநெறிகளை விளக்கும் மாதசஞ்சிகை. கோயமுத்தூர் வழி, பேரூர் P. O. சிவாகம வித்யா பாடசாலையிலிருந்து கிணத்துக்கடவு சிவஸ்ரீ K. P. சுப்பிரமண்யசிவாசார்யரவர்களை ஆசிரிராகக்கொண்டு ஈசுவர ஐப்பசி முதல் வெளிவருவது. சிவாகம வித்யா, சமயக்கல்வி, பிறவிப்பெரும்பயன், சிவாலயதத்துவம் ஆகியாம் செம்பொருள்களைச் செவ்வே விளக்கிச் சிவாசாரியரால் வெளியிடப்பெறும் இதனை செந்தமிழ் மக்களும், சிறப்பாகச் சைவப் பெருமக்களும் ஆதரித்து வளர்த்தற்குதவிபுரிதல் அவசியமாகும். ஆண்டுக்கொகை ரூபா ஒன்று. தபாற்கூலி அணா நான்கு.

வாழ்த்து மஞ்சரி:— இது திருக்கொள்ளம்பூதூர், சிவாலயத் திருப்பணியைப்பெரும்பொருள்கொண்டுநிறைவேற்றிமகாகும்பாபிஷேகத்தை மாண்புடன் செய்த திருப்பணிச் செல்வர்களான, நச்சாந்துப்பட்டி பெ. ராம. குடும்பத்தினரை, பேரன்புடையபோறிவாளர் பலர் மனமார வாழ்த்தி அவர்கட்கு வழங்கிய பாக்களையும், நல்லுரைகளையும் உரத்தநாடு போர்டு ஹைஸ்கூல் தலைமையாசிரியர், திரு, சாமி வேலாயுதம் பிள்ளை பி. ஏ; எல். டி. அவர்களால் திரட்டி மண்டலாபிஷேக பூர்த்தி விழாவில் வெளியிடப்பெற்றது. இதில் திருக்கொள்ளம்பூதூர் சிவாலய நிழலோவியமும் திருப்பணிச் செல்வக்குடும்பத்தினரின், குல திலகர் இராமன் செட்டியாரவர்களின் நிழலோவியமும் சேர்க்கப்பெற்றுள்ளன. வாழ்த்துக்களையுவந்து கொண்டதன் அடையாளமாக, அவைகளை வாழ்த்து மஞ்சரியாக வெளியிட்ட மாண்பினல் வாழ்த்துக்கூறினோர் பலரும் மனமகிழ்ச்சி மிக்காராய்மேலும்வாழ்த்துகின்றனர். டிம்மி1-க்கு 8. 64 பக்கங்கள் கொண்டுள்ளது இவ்வாழ்த்துமஞ்சரி. திருப்பணிச்செல்வர்கள் சிறப்புடன் வாழ வடிவுடை மங்கை பங்கர் தம் மலரடிகளை மன மொழிமெய்களால் வழுத்துவோமாக.

உ

# தமிழ் தழைத்திடுக.

## திருநெல்வேலி, தமிழ்ப்பாதுகாப்புச் சங்க வாழ்த்துப்பா.

(கோவிற்பட்டி உயர்திரு, விருதை, சாமி சிவஞானயோகிகள்)

திருமிகு மூலசெலாஞ் செய்து காத்தழிக்கும்
ஒருதனிப் பரம னுண்மைதேர்ந் திறைஞ்சற்
கருந்துணை புரிவ தண்ணல் மொழியாம்
பேச்சு மெழுத்தும் பிறங்க லுயிர்மொழி
வடசொற் கலையிலை வண்டிரு விடங்கள்
கனிதமிழ் தெலுங்கு கன்னடம் கூர்ச்சரம்
மகாராட் டிரம்மலை யாள மென்பன
வடநூல் பலவும் தமிழினின் றெடுத்த
கிரந்த வெழுத்தி லெழுதப் பட்டுள
உலகிற் பலநூல் பயில வேண்டினும்
பற்பல நாட்டிற் பழக வேண்டினும்
ஆங்கில மொழியே யருந்துணை புரியும்
திருவிட மாறினும் ஹிந்திவழக் கில்லை
ஆதலி னவ்வவ் விடமொழி யோடு
ஆங்கில மொழியுங் கற்றுத் திகழில்
நல்லா வறிவு மெய்தியுய் வாரே
உரிமை வேண்டிலா ருலகி லில்லை
நடுநெறி நின்றது நாடல் கடனே
எழுபது கோடி யுகமிருந் தேனே
என்றநன் மூலர் யிசைத்த வொண்டமிழ்!
பாது காப்பவை பன்னெடுங் காலம்
வளர்ந்து செழிக்க வாழ்த்துதும் யாமே.

---

உ

# சிவநேசனுக்கு வாழ்த்தும், மதிப்புரையும்.

(பாபநாசம், கணபதிமந்திரம்,
உயர்திரு, முத்துக்குமாரத்தம்பிரான் சுவாமியவர்கள்.)

அன்பிளுேர்க்கினிய ஐயா!

சிவனருள் முன்னிற்க. நலம். அஃதே அறியவிரும்புவதும். தங்கள் செந்நெறிச் சைவத் திருத்தொண்டுகள் தங்கள்பால் அன்பைப் பெருக்குகின்றன. சித்தாந்த வித்தைக்கென்றே சிறப்பாக ஒரு பற்றுக்கோடில்லாதிருந்த குறைநீங்கத் திருத்தென்குடித் திட்டையில் பிரதிட்டைசெய்த சித்தாந்த வித்தியாசாலை இனிது தழைத்தோங்கும்வண்ணமும், ஏனைய சிவப்பணிகளும் தாங்கள் விரும்பியவாறே இனிதுமுடியவும் இறைவரருளைப் பிரார்த்திக்கின்றேன்.

திருவி னுன்மிகு தென்குடித் திட்டையிற் சீரான்
மருவி நான்மறை யவைமுறை மலரடி வாழ்த்த
உருவி னுலல துயிர்களுக் குருவெலா முதவும்
ஒருவ னருள் பேணிவா ழொண்சிவ நேச!

ஆழி சூழுமிவ் வுலகிடை யரும்பெறற் சைவக்
கேழி லாவிழுப் பொருணெறி கிளந்துரைத் தறிவின்
காழி லாதவர் வெளிற்றுரை களைந்துமெய் காட்டி
வாழி யையிரு வருடமும் வளர்ந்தனை யினிதே.

ஈச னார்தமக் குருத்திர சங்கிதை யினிதென்
ஈச னுண்டினிற் றென்குடித் திட்டையி லேய்ந்தாய்
ஈச னுருரை வேதமொ டாகம மென்றே
ஈச னாருள் வலியினு லிடித்துரைத் தெங்கும்.

பழைய வைதிக சைவமே தமிழொடும் பரவ
யழையுமப் பல்வகை வளங்களு மல்கிட வாழ்வு
தழையுஞ் செல்வனம் இராமசா மிப்பெருந் தகையும்
விழையு நீயுமன் வாழிய மாநில மிசையே.

(போளூர், உயர்கலாசாலை, தலைமைத் தமிழாசிரியர்,
திரு, சாமிநாதபிள்ளை யவர்கள்.)

திங்களொளி பரப்பியொளிர் செய்திருத்தென்
குடித்திட்டை சேர்தெஞ் ஞான்றுந்
திங்கடொறும் வெளிவந்து திகழ்சைவ
வொளிபரப்புஞ் சிவநே சப்பேர்த்
திங்கட்டாள் ஆசிரியர் திரு ராம
சாமியெனுஞ் சீமான் நன்கு
திங்களணி யீசனரு ளாலென்றுஞ்
சிறந்தூழி செழித்து வாழி.

(காஞ்சிபுரம், திரு, அ. முத்தையப் பிள்ளை அவர்கள்.)

1. செந்த மிழ்மொழி சைவம் விளங்கிடத்
திருவ ளர்பல வான்குடி மேவிய
அந்த மில்புகழ் சேர்ராம சாமியாம்
அருந்த னவணி கக்குல வள்ளலார்
சொந்த மாச்சிவ நேசப் புதினத்தாள்
சுகமு றத்தச வாண்டுவ ளர்த்தனன்
சந்த தந்திருக் கோயிற் பணிசெயச்
சார்ந்த னன்றிட்டை நேசனுந் தானுமே.

2. திருவி னுள்மிகு தென்குடித் திட்டையின்
சேர்ந்து பன்னொன்று மாண்டிற் சிறக்கவே
அருமை சேர்கட் டுரைக ளழகுற
அருந்த மிழ்நா லுரைகளுந் தாங்கியே
பெருமை யாய்ச்சிவ நேசன் வளர்ந்திடப்
பெருந்த னவைசி யக்குல வள்ளலாம்
ஒருவன் ராமசா மிப்புகழ் ஓங்கிட
வுலகெலா முணர்ந் தோனருள் செய்கவே.

3. ஆத்தி கவ்வொளி மங்கிட நாத்திகம்
ஆக்க மிக்கே யிருட்டுக்கொ ளாமலே
சாத்தி ரந்தமிழ் வேத முதலிய
சாற்றி டும்பெரி யோர்மொழி காட்டியே
எத்தி னன்சிவ நேசச் சுடர்விளக்
கிராம சாமியென் னேந்தலு மேயவன்
கோத்தி ரஞ்செழித் தோங்குக நேசனுங்
குலவி வாழ்கப் பிரானருள் கொண்டுமே.

உத்தரமேரூர், சைவத்திருவாளர், ஆ. ஈசுவரமூர்த்திப் பிள்ளையவர்கள்:—

தங்கள் திப்பிய சிவநேசன் 11-வது வருஷத்தொடக்கம் இன்னும் வெளிவந்ததாகத் தெரியவில்லை. தினசரி எதிர் பார்க்கிறேன். தாமதத்திற்குக் காரணம் யாதோ? அப்பத்திரிகை சமீபத்தில் வெளியாகுமா? ஆயின் எப்போது? இன்னுங் கொஞ்சகாலந் தாழ்த்து வெளியாகுமா? ஆயின் எப்போது? தயவு செய்து அது வெளியிடுங் காலத்தை உறுதியாகத் தெரிவிக்கவேண்டுகிறேன். வைதீக சைவத்தைக் கூடியவரை பரிசுத்தமானமார்க்கத்திற் பரப்பி வந்தது சிவநேசன் பத்திரிகை யொன்றே. அதுவும் தாழ்க்குமாயின் தமிழ் நாட்டிற் கலிபீடை சாமானியமாகவில்லை யென்பது போதரும். சிவபிரான் அக்கதிரைப் பரப்பி எம்போல்வாரைக் களிக்கச் செய்வதென்றோ! அவனடிகளே சரணம்.



சின்னக்காஞ்சிபுரம், திரு, ரேணுபதி நடேசச் செட்டியாரவர்கள்:—

செந்தமிழ் மொழியால் சைவம் வளர்க்கும் வள்ளால்! யாண்டும் இன்பம் பெருக!! மக்கள் மகிழ்க!!! சைவமணங் கமழ்க!!!! வேண்டுதும்.

தாங்கள் ஆற்றிவரும் சைவத் திருத்தொண்டின் காரணமாகத் தோன்றியும் "சிவநேசன்" எனச் சீரிய பெயருங்கொண்டு உள்நாட்டகத்தும், கடல்கடந்தும்சென்று, அன்பர்கள் கரதலத்தமர்ந்துறச் சைவத் திருநெறியையும் செந்தமிழ்த் தாயையும் போற்றி வருகிறீர்கள்.

வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட ஆண்டு ஆண்டும் ஆண்டுதோறும் திருவிழாப் பொலிவால் கனிந்து உறைந்து அருள் புரியும் இறைவனுக்குச்செய்யும் திருப்பணிகளே தம் கடன் எனப் பூண்டு ஒழுகும் பண்புடைய மனத்தால் செந்தமிழும், சைவமும் ஓங்க ஒரு தமிழ் வெளியீடு பல ஆண்டுகளாக நடாத்தி வருகிறீர்கள். அவ்வெளியீடும் என் தமிழ்க் கல்வியின் முயற்சிக்கும் ஆராய்ச்சிக் கட்டுரைகட்கும் ஒரு நிலைக்களனாகத் திகழ்ந்து உதவியது கண்டு பெருமகிழ்ச்சிகொண்டு களித்திருக்கிறேன்.

மேலும் தங்கள் சிவநேசன் ஆண்டு 10. திங்கள் 11, 12 வெளியீடுகளில் 271-ம்பக்கத்தில்இனிச்சிவநேசன் தென்குடித்திட்டையிலிருந்து ஈச்வரஆண்டு ஆவணித்திங்கள்தொடங்கி 11பிராயத்துடன் பல நலன்களையும் தன்னகத்தே கொண்டு திகழ்வான் என்றும், சிறந்த பலன்கள் பல தருவான் என்றும் எழுதியிருந்தது கண்டு மிக்க ஆர்வம் கொண்டநான் அது வாராதது கண்டு மேகங்காணாத மயில்போல் ஆனேன்.

சிவஞானச் செல்வராம் ஸ்ரீகாழிப் பிள்ளையார் திருவினால் மிகு புகழ்ப் பதிகம் பெற்ற தென்குடித்திட்டையை இறைவன் உவந்துறை சிவராஜதானி யாக்கியும் ஆண்டிருந்தே மாதந்தோறும் சிவநேசன் வெளியிட்டால் தமிழ்த்தொண்டும், இறைவனுக்குச் செய்யும் திருப்பணி அமைப்பால் சமயவளர்ச்சியும்செய்து முடித்துவர மனமும் பணியும் ஏற்றுள்ளதால் ஏறுகந்தருளும் இறைவன் கருணையால் இனி மாதந்தோறும் வெளிவருமென்று கருத்துள்கொண்டு இறைவனை வேண்டியே இதனெழுதலானேன். சிவநேசனை என் பாவநாசஞ் செய்யும் நேசனாகக்கொண்டு என்றும் பெற்று மகிழ்வேனாக.

மதுரை, இந்திய இளைஞர் சங்கத்தினர்:—

தங்கள் உயர்ந்த பத்திரிகையை நமதுவாசகசாலைக்கு அனுப்பி வருவது குறித்து மனமார்ந்த வந்தனம். இங்குவரும் அன்பர்களனைவரும் மிகப் பிரியமாய் வாசிக்கின்றனர். சிலமாதங்களாக அது வாராமையால் அதனை எதிர்பார்த்த வண்ணமாயுள்ளனர்.

சென்னை, மஹாமகோபாத்தியாய, தாக்ஷிணாத்ய கலாநிதி, டாக்டர், உயர்திரு, உ. வே. சாமிநாதையரவர்கள்:—

சிவநேன் அச்சியந்திரசாலை திருத்தென்குடித்திட்டையில் ஸ்தாபிதமாகி நடைபெற்று வருவதும், அங்கிருந்து பத்திரிகை வெளிவருமென்பதும் தெரிந்து மிக்க சந்தோஷம். திருவருட்டுணைகொண்டு தாங்கள் செய்யும் எந்தக் காரியமும் சரியாக நிறைவேறும்.

சென்னைவாசி, திருவோத்தூர், தமிழாசிரியர் திரு, அ. நம்பிரான் முதலியாரவர்கள்:—

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்க உழைக்கும் தங்கள் சிவநேசனை அவ்வப்போது உவந்து பெற்றுப்படித்தின்புற்றேன். ௧௧-ம் ஆண்டுத் தொடக்கம் முதல் அவனைக் கண்டானந்திக்கும் பெரும்பேறு பெருமையால் அப்பேற்றை யருளுமாறு தங்களை வேண்டுகின்றேன்.

கரிசூழ்ந்தமங்கலம் ஆனந்தகான சபையார்:—

மாதந்தோறும் இங்குவந்து மகிழ்ச்சிதரும் சிவநேசன் ௧௧-வது ஆண்டுத் தொடக்கமுதல் வராததினால் சிவநேசச் செல்வர்கள் மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்; அனுப்புவீர்களாக. தாங்களும் சிவநேசனும் எந்நாளும் இனிதுவாழ எம்பெருமான் ஸ்ரீ ஆனந்தநடராஜனைப் பிரார்த்திக்கிறோம்.

## நமது சிவநேசன்.

செய்யவார்சடை ஐயர்திருவருளால், சைவமுந் தமிழுந் தழைக்கச் செய்வதே முழுநோக்கமாகக் கொண்டு தொடங்கிய நமது சிவநேசன் பிரபவ ஆவணிமுதல் ஐந்தாண்டுகள் வாரத்தாளாகவும், ஆங்கிரச ஆவணிமுதல் ஐந்தாண்டுகள் திங்கட்டாளாகவும் பலவான்குடியிலிருந்து வெளிப்போந்து பலவிடங்களிலும் செந்தமிழ்ச் செல்வர்கள், சிவநேசச்செல்வர்கள் பலரும் பாராட்டத் தனது செயலைத் தளராது பரப்பிவந்துளான். ஈசுவர ஆவணிமுதல் ௧௧-வது ஆண்டுத் தொடக்கம் திருத்தென்குடித்திட்டையிலிருந்து வெளிவரத் தீர்மானித்து முன்னர்க்கூடியே வேண்டுந்திட்டங்களைத் தீவிரமாகச் செய்தும் சிவநேசநிலையக்கட்டிடவேலை முடிந்தாக வேண்டியதிருந்ததனாலும் மற்றும் பல காரணங்களாலும் ஐந்துமாதங்கள் தாழ்த்து ஆறுவது மாதத்தில் வெளிவருவானாயினன்.

சிவநேசனைக் கண்ணுங் கருத்துமாகப் போற்றிவரும் மெய்யன்புடைய மேதகு பெரியார்கள் மன்னித்தருள்வார்களாக. சிவம்பெருக்கும் பிள்ளையார் திருவருள்போற்றித் திங்கள்தோறும்வெளிப்போந்து இனித்தாழ்க்காது தண்டமிழும் சைவமுந் தழைக்கத் தொண்டாற்றிவருவான். அவனை அன்பரனைவரும் பண்டேபோல் என்றும் ஆதரித்துவர வேண்டிக்கொள்கிறோம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீ காசி யாத்திரை விளக்கம்.

காப்பு.

உலகெ லாம்புகழ்ந் தோதித் துதித்திடத்
திலகமா யொளி சேருநற் காசியின்
இலகும் யாத்திரை யாமிவ் விளக்கநூல்
நிலவ வைங்கர நின்மலற் போற்றுவாம்.

## முன்னுரை.

பூமலி யுலகிற் பொலிவுடன் மிளிரும் புண்ணியத்தலங்கள் பலவற்றுள்ளும் காசித் தலமானது மிகவுஞ் சிறப்புவாய்ந்ததாகும். மஹா மகிமை பொருந்திய கங்கா நதியை தன்னிடத்தே கொண்டமையானே இந்த க்ஷேத்திரம் மிகுந்த புண்ணியத்தலமென்று வேதாகமங்களெல்லாம் விதந்து கூறும். காசிக்குச் சென்று கங்கையிற் படிந்து விஸ்வேஸ்வரப்பெருமானைத் தெரிசித்தற்கு இணையான புண்ணியம் ஈரேழுலகங்களிலும் வேறெதுவும் இல்லை.

இத்தகைய பெருஞ்சிறப்புவாய்ந்த ஸ்ரீ காசி க்ஷேத்திரத்திற்கு யாத்திரை செல்லும்போது வழியிலுள்ள முக்கிய திருத்தலங்களையும் ஆங்கங்குள்ள விசேஷங்களையும் ஒவ்வொருவரும் தெரிசித்துச் செல்ல வேண்டியது அவசியமாகலின், திருத்தணி முருகர் வழித்துணை வருவார் என்று முன்னே தெரிசித்துச் செல்லும் திருத்தணியை முதலாகத் தொடங்கி இந்நூல் எழுதப்படுகிறது.

## நூல்.

### 1. திருத்தணி.

சென்னை செண்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து திருத்தணி ஸ்டேஷன் 51-மைல் தூரத்திலுள்ளது. சார்ஜ் சாதாரண மூன்றாவது வகுப்பு வண்டிக்கு ரூ 1—1—0. (எம். எஸ். எம். இரயில்வே)

வசதி:— ஸ்டேஷனிலிருந்து சுமார் அரை மைல் தூரத்தில்

ஆலயமிருக்கிறது. ஊரில் அநேக சத்திரங்களும் மடங்களும் உணவருந்த வசதிகளுமிருக்கின்றன.

நதி:— ஊரின் அருகில் நந்தியாறு என்னும் நதி செல்லுகிறது. கோடைக்காலங்களிலும் ஸ்நானம் செய்ய அங்கு வசதி உண்டு.

பாஷை:— இது தமிழ்நாடுதான் எனினும் சிலர் தெலுங்கும் பேசுகிறார்கள்.

ஆலயம்:—திருத்தணிகை மலைமீது முருகக் கடவுள் ஆலயம் இருக்கிறது. சுவாமி மிகுந்த அழகுடைய வடிவோடு பார்ப்பவர்களைப் பரவசப்படுத்தும்பான்மையில்விளங்குகிறார். மலையேறி இறங்குவது கஷ்டமல்ல. இந்த ஸ்தலத்தில்தான் சிவசுப்பிரமணியக் கடவுளைத் திருமால், பிரமன், அகஸ்தியர், இந்திரன் முதலானவர்கள் பூசித்து அருள் பெற்றது. வள்ளி நாயகியை அடையும் பொருட்டுச் சுப்பிரமணியர் வேடர்களோடு போர் புரிந்த கோபம் தணிந்து இட்டமாதலால் திருத்தணி என்று கூறப்படுகிறது. வள்ளிநாயகியைச் சுப்பிரமணியக் கடவுள் திருமணம் புரிந்ததும் இங்குதான் என்று கூறுவர். இங்கு சுப்பிரமணியக் கடவுளோடு சிவபெருமானும் எழுந்தருளியிருக்கிறார். சுவாமி பெயர் திருத்தணிநாதர். அம்மை பெயர் உமையம்மை என்று கூறப்படுகிறது. இங்கு ஆடிக் கார்த்திகை உற்சவம் மிக விசேஷமாக நடைபெறுகிறது.

## 2. திருக்காளத்தி.

திருத்தணி ஸ்டேஷனிலிருந்து காளாஸ்திரி என்னும் ஸ்டேஷன் 48-மைல். சாதாரண மூன்றாவது வகுப்பு வண்டிக்குச் சார்ஜ் 0—15—0. ரேணுகொண்டா ஜங்ஷனிலிறங்கி வண்டிமாறிச் சின்ன இரயிலில் போகவேண்டும்.

வசதி:— காளத்தியில் பெரும்பாலான சத்திரங்கள் கோவிலருகிலேயே இருக்கின்றன. நாட்டுக்கோட்டை நகரத்தார் விடுதியும் கோவிலருகிலேயே இருக்கிறது. ஸ்டேஷனிலிருந்து கோவில் $1\frac{1}{2}$ மைல் தூரமிருக்கும்.

பாஷை:— தமிழும், தெலுங்கும் பேசப்படுகிறது.



நதி:— பொன்முகலி (சுவர்ணமுகி) ஆறு தெற்கிலிருந்து வடக்காகக் கோவிலருகிலேயே செல்லுகிறது. கோவிலுக்குச் சமீபத்தில் பாலமும் கட்டப்பட்டிருக்கிறது.

ஆலயம்:— சீகாளத்தி யீசர் ஆலயம் இது சீ - சிலந்தி. காளம் - பாம்பு. அத்தி - யானை. என்ற மூன்றும் பூசித்து முத்தியடைந்த புண்ணியத் தலம். கண்ணப்ப நாயனாரும் வாயுதேவரும் பூசித்ததலம் இதுவே. இது தென்கைலாயம் என்றும் சொல்லப்படும். சுவாமிபெயர் சீகாளத்திநாதர். அம்மை பெயர் ஞானப்பூங்கோதையம்மை. இதன் சரித்திர விரிவைச் சீகாளத்திப்புராணத்தில் விரிவாய்க் காணலாம்.

காளத்தி ஆலயம் நாட்டுக்கோட்டை நகரதனவைசியர்களால் புதிய திருப்பணி செய்யப்பெற்று அழகாக விளங்குகிறது. அங்கே கோபுரம் சந்நிதிக்கு நேரேயின்றித் தனியே விளங்குவது முதலிய ஆலய வமைப்புகள் நேரிலேயே தெரியவரும்.

கோவிலில் நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டியதைக் குறிக்குமிடத்து ஆலயத்தில் மூர்த்தி மேற்கு முகமாக விளங்குகிறது. காளத்தியீசருக்கு மற்றைய லிங்கங்கள் போன்று கோமுகத்தோடு பீடம் விளங்கும். அதன்மீது உயரமாகப் பருமனில்லாமல் நீண்டு இலிங்கம் விளங்குகிறது. இவ்விலிங்கத்தைக் கற்பூர தீபமாவது வெளிச்சமாவது கொண்டு கூர்ந்து கவனித்தால், பீடத்திலிருந்து மூன்று அங்குல உயரத்துக்கு மேல் இலிங்கத்தில் சிலந்தி பூசித்ததினால் சிலந்தி வடிவமும், அதன்மேல் யானை பூசித்ததினால் யானையின் இரண்டு தந்தங்களும், அதற்குமேல் கண்ணப்பர் பூசித்துச் சுவாமிக்கு மனமுவந்து இடந்து அப்பிய கண்ணும் தெரியவரும். காளம் என்னும் சர்ப்பம் பூசித்ததினால் இலிங்கம் சர்ப்ப சிரசுபோல் ஐந்தாக விளங்குகிறது.

வாயு பகவான் பச்சைக் கற்பூரத்தினால் பூசித்தாரென்பது சரித்திரம். இன்றும் பச்சைக் கற்பூரம் கலந்த தீர்த்தம் ஒன்றே அபிஷேகஞ் செய்கிறார்கள். சுவாமிக்கு அபிஷேகமானவுடன் பரிவட்டத்தினால் திருவொற்றாடை செய்யப்படுவதில்லை. வாயு பூசித்தமையால் தானே சிறிது நேரத்தில் உலர்ந்து விடுகிறது. சுவாமி சிரமீது வில்வபத்திரமட்டும் சாத்தப்படுகிறதேதவிர வேறொன்றும் சாத்தப்படுவதில்லை.

சுவர்ணத்தினால் ஏணிப்படி போலவும் உயரத்தில் திருவாசி போலவும் செய்யப்பட்டுள்ளதைச் சுவாமிக்கு முன் சாத்தப்படுகிறது. அதன் மீது சந்தனப் பொட்டு இடுவார்கள். மாலை வேளைகளில் புஷ்பமாலைகளையும் அதன்மீது சாத்துகிறார்கள். சுவாமியைக் குருக்கள் கூடத் தொடுவதில்லை.

விசேஷமான அபிஷேக அலங்காரங்களெல்லாம் சுவாமியின் பீடத்திலும், அம்பாள் சந்நிதியில் அம்பாளுக்கும் அங்கு அருகிலுள்ள ஸ்ரீ சக்கரத்திற்கும் நடத்தப்பட்டு வருகிறது. ஞானப் பூங்கோதை மிக அழகிய தோற்றத்தோடு தெரிசிப்போர்மனதைக் கொள்ளைகொண்டு காட்சியளிக்கின்றாள். சுவாமிக்குமுன்னதாகத் தொட்டிபோன்ற சிறு பள்ளத்தில் ஒரு நந்தி உண்டு. இதையும் குருக்கள் யாரும் தொடுவதில்லை. தீர்த்தம் மட்டும் அபிஷேகம் செய்யப்படுகிறது.

கண்ணப்பர் சந்நிதானம்:— சுவாமி சந்நிதியில் சுவாமிக்கு அருகில் கண்ணப்பமூர்த்தி ஒன்று இருக்கிறது. மலைமீது இரண்டு மூன்று பர்லாங்கு உயரத்தில் கண்ணப்பர் கோவில் என்னும் ஆலயத்தில் ஒன்றும் உண்டு. இதுபோல் அவ்வாலயத்தில் ஆறு கண்ணப்பர்வடிவம் பிரதிஷ்டிக்கப்பட்டுள்ளதாம். கண்ணப்பர் மலைக்குப் போகும் வழியிலுள்ள தீர்த்தத்திற்குப் பாரத்துவாச தீர்த்தம் என்று பெயர் சொல்லுகிறார்கள். காளத்தி மலையைப் பிரகாரம் வருவதற்கு 18-மைல் தூரமிருக்கிறது. மாசிமாத மஹா சிவராத்திரி உற்சவம் மிக்க விசேஷமாகக் கொண்டாடுகிறார்கள். அப்போது சுவாமி கிரிப்பிரதக்ஷிணமாக வரும் என்று தெரிகிறது. இக்கோவிலில் தெரிசனத்திற்கு வரும் ஜனங்களிடம் ஒவ்வொரு அணா வீதம் வாங்கிக்கொண்டு உள்ளே விடுகிறார்கள். காளத்தியில் விஷ்ணு ஆலயம் ஒன்றும் அருகிலேயே இருக்கிறது. இவைகள் காளத்தி அரசர் மேற்பார்வையில் இருந்து வருகின்றன. காளத்தி அரசர் அரண்மனை முதலிய இங்குள்ள பிற விஷயங்கள் நேரிலேயே தெரியவரும்.

## 3. திருவேங்கடம். (திருப்பதி)

காளத்தியிலிருந்து 25-மைல் தூரம். சாதாரண மூன்றாவது வகுப்பு வண்டிக்குச் சார்ஜ் 0—8—0. மோட்டார் பஸ்களும் வசதியாகவே போய்வருகின்றன.



**வசதி:**—ஸ்டேஷனருகில் மஹந்து தருமசாலையும், இராமசாமி கோயிலுக் கருகே தேவஸ்தானத்தைச் சேர்ந்த பூந்தோட்டம் என்னும் பெயருள்ள தருமசாலையும் இன்னும் பலதருமசாலைகளும் வசதி உள்ளனவாகும். இதுவன்றி ஊரிலுள்ளார் பலர் வாடகைக்குத் தங்கள் வீடுகளிலே இடம் தருவார்கள்.

பாஷை:— தமிழும் தெலுங்கும் பேசுவார்கள்.

தீர்த்தம்:— திருப்பதிக்கு 2-மைல் தூரத்தில் கபில தீர்த்தம் என்னும் ஓர் குளம் உண்டு. ஆழ்வார் தீர்த்தம் என்றும் சொல்லுவார்கள். அருகிலுள்ள மலையிலிருந்து அருவி நீர் விழுந்துகொண்டு இருக்கும். திருப்பதி மலையிலுள்ள பல தீர்த்தங்களும் இதில் கலப்பதாகச் சொல்லப்படுகிறது. இதில் ஸ்நானஞ் செய்வது விசேஷம்.

ஆலயம்:— தீர்த்தக்கரையில் கபாலீஸ்வரர் ஆலயம் இருக்கிறது. இங்கு கபாலீஸ்வரர் அம்மையோடு விளங்குகிறார். இன்னும் பார்வதி, பரமேசுவரர், விநாயகர், சுப்பிரமணியர், நவக்கிரகங்கள் முதலிய பிரதிஷ்டை மூர்த்திகளும் நடராஜர், சோமாஸ்கந்தர் முதலிய உற்சவ மூர்த்திகளும் உள்ளன. இதன்றித் திரும்பிவரும் வழியில் அருகிலேயே ஆழ்வார் ஆலயம் என்னும் பெயரோடு ஒரு ஆலயமும் உண்டு.

கோவிந்தராஜப்பெருமாள் ஆலயம் ஸ்டேஷன் அருகில் மிகப் பெரிய இராஜகோபுரத்தோடு அழகாக விளங்குகிறது. இங்கு சிதம்பரத்திலுள்ள கோவிந்தராஜப் பெருமாள் போலவே பள்ளிகொண்ட கோலத்தோடு கோவிந்தராஜப் பெருமாள் விளங்குகிறார். தேவி ஆலயம் முன்னதாகவே தனியாக இருக்கிறது. இன்னும் அநேக மூர்த்திகளும் உண்டு.

இராமசாமி ஆலயம் கோவிந்தராஜப் பெருமாள் ஆலயத்திலிருந்து அரை மைல் தூரத்திலுள்ளது. இராமர், இலக்ஷ்மணர், சீதாபிராட்டியார் மூவரும் ஆகிருதியான வடிவோடு அழகாக விளங்குகிறார்கள். இந்த ஆலயங்கள் திருவேங்கடமலையின் அடிவாரத்தில் திருப்பதி க்ஷேத்திரத்திலுள்ளன. ஏழுமலை யென்னும் திருவேங்கட மலைமீது ஏழுமைல்தூரம் ஏறி வேங்கடேசுவரப் பெருமாள் ஆலயத்திற்குச் செல்லல்வேண்டும். இங்கு ஏராளமான

யாத்ரீகர்கள் பிரார்த்தனை செய்துகொண்டு வருகிறார்கள் என்பதும் அதிகவருமானமுள்ள தேவஸ்தான மென்பதும் உலகப்பிரசித்தம். திருப்பதி ஸ்டேஷனிலிருந்து அடிவாரத்திற்கு 2 மைல் தூரம் இருக்கும். வண்டிகள் கிடைக்கும்.

அடிவாரத்திலிருந்து காளி கோபுரம் வரை 2½ மைல் படிப் படியாக ஏறவேண்டும். கஷ்டம். பின்பு மூன்று மைல் சமபூமி. அதன்பின் முழங்கால் முறிச்சான் மலை என்பது அரைமைல் ஏறி அரைமைல் இறங்கவேண்டும். பின் அரைமைல்வரை சமபூமியாக ஆலயத்திற்குப் போகலாம். நடக்கமுடியாத பலர் டோலிகளில் போய்வருகிறார்கள். இந்த ஏழுமைல் தூரம் உள்ள வழிமுழுவதி லும் இரவிலும் பிரயாணம்செய்யும்படி அதிக வெளிச்சமுள்ள மின் சாரவிளக்குகள் எரிந்துகொண்டிருக்கின்றன.

மலைமீது பரந்த நிலப்பரப்பு உள்ளதாக ஆலயத்திற்கு நான்கு வீதிகளும் வகுக்கப்பட்டுச் சிறு ஊராக இருக்கிறது. மலைமீது கோவிலுக்கு அக்கினி மூலையில் மஹந்து மடம் இருக்கிறது. புஷ் கரணி, ஆகாசகெங்கை, பாபநாசம் என்னும் தீர்த்தங்களும் இன்னும் பல தீர்த்தங்களும் உள்ளன. ஆகாசகெங்கை, பாபநாசம் இந்தத் தீர்த்தங்கட்கு அங்கிருந்து மூன்று மைல் தூரம் போக வேண்டும். மலையிலிருந்து இரண்டு இடத்திலும் அருவி வீழ்கிறது. ஆலயதரிசனம் வேங்கடேசப்பெருமாள் ஆலயம். துவஜஸ்தம்பம் அறுகால் நிலை, கதவுகள் எல்லாம் தங்கமுலாம் பூசப்பட்டு மிகவும் அழகாக விளங்குகின்றன. சுவாமியை எந்தக் காலத்திலும் மூடி வைத்துக் கொண்டிருப்பர். தெரிசனத்திற்குப் பணம் கொடுத்துப் போகவேண்டும். கற்பூரதீபத்திற்கு ரூபாய் ஒன்று என்பது முதல் பிரம்மோற்சவத்திற்கு ரூபாய் 1005 என்பது வரை போர்டுகளில் விவரமாக எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன, ஆதலின் இங்கு தெரி சனம் முதலியன பணம் கொடுத்ாலன்றிக்கிடைக்கப்பெறு.

தருமதெரிசனம்:— காலை ஏழு மணிக்கு மேலும் பகல் பதிரொருமணிக்குமேலும், இரவு ஏழுமணிக்குமேலும் இலவச மாகத் தெரிசிக்க விடுவார்கள். யாவரும்பணம் இன்றித் தெரிசிக்க லாம். சுவாமி நின்ற திருக்கோலமாக ஆகிருதியான தோற்றத் தோடு ஆபரணங்களாலும் பீதாம்பரங்களாலும் அலங்கரிக்கப்பட்டு விளங்குகிறார்.



## 4. திருச்சானூர். (அலமேலுமங்காபுரம்)

ஸ்டேஷனிலிருந்து மூன்று மைல் தூரம் இருக்கும். வேங்க டேசுவரப் பெருமாளுக்குத் தேவியார் சந்நிதானம் இல்லாமையால் இங்கு தேவியோடு சுவாமி தெரிசனஞ் செய்வது என்று சொல்லு கிறார்கள். திருப்பதி வேங்கடேசுவரப் பெருமாள் தெரிசனஞ் செய்தோர் இங்கு வந்து தெரிசிப்பது வழக்கம். சுவாமி பெயர் சுந்தரவரதராஜப் பெருமாள். அம்பிகை பெயர் (அலர்மேலு) பத்மாவதி என்பதாம்.

## 5. துங்கபத்ரா.

சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து பம்பாய் போகும் வழியில் 333 மைல் தூரத்திலுள்ளது. துங்கபத்ரா ரிவர் என்று ஸ்டேஷன் பெயர். சாதாரண மூன்றாவது வகுப்பு வண்டிக்குச் சார்ஜ் ரூ 5—8—0.

நதி:— இரயில்வே ஸ்டேஷனுக்கு வடக்கே ஒரு பர்லாங்கு தூரத்தில் துங்கபத்ரா நதி ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த நதியில் ஸ்நானஞ் செய்வது மிக விசேஷம். ஆற்றங்கரை நிம்மதியான இடமாக விளங்குகிறது. ஏகாந்தமானதாகும்.

வசதி:— தங்குவதற்கு ஸ்டேஷன் அருகாமையில் தரும சாலைகள் இருக்கின்றன. பிராமணர்களுக்கு உண்ண வசதி உண்டு.

ஆலயம்:— தெரிசனத்திற்கு மிகப் பெரிய ஆலயங்கள் இல்லை. ஸ்டேஷன் சமீபத்தில் சிறிதான ஒரு ஆலயம் உண்டு. ஸ்டேஷனுக் குச் சற்றுத் தூரத்தே சிறு கிராமம் காணப்படும். ஜனங்கள் தெலுங்கு பாஷை பேசுகிறார்கள். துங்கபத்ரா நதிக்கு மிகப் பெரியதாகவும் உயரமாகவும் (79) கண்கள் உள்ள பாலம் ஒன்று இரயில்வே வசதியாய்க்கட்டப்பட்டிருக்கிறது. ஆற்றின்ஜலம் மிகத் தெளிவாகவும் இனிமையாகவும் இருக்கிறது. காசி யாத்திரை செல்லும் ஒவ்வொருவரும் இங்கு இறங்கி ஸ்நானஞ் செய்துபோக வேண்டியது மிகவும் அவசியமாகும்.

## 6. கிருஷ்ணா.

துங்கபத்ரா ரிவர் என்னும் ஸ்டேஷனிலிருந்து 18 மைல்

தூரத்திலுள்ள இராயச்சூர் என்னும் ஸ்டேஷனோடு M. S. M. இரயில்வே முடிவடைகிறது. அதிலிருந்து G. I. P. இரயில்வே தொடங்குகிறது. இராயச்சூரிலிருந்து 16மைல்தூரத்தில் கிருஷ்ணா என்னும் ஸ்டேஷன் இருக்கிறது. துங்கபத்ரா ரிவர் ஸ்டேஷனிலிருந்து கிருஷ்ணா ஸ்டேஷனுக்குச் சாதாரண மூன்றாவது வகுப்பு வண்டிக்குச் சார்ஜ் ரூபா 0—11—0.

வசதி:— நதிக்கரையில் சில தருமசாலைகளும் வீடுகளும் இருக்கின்றன. சாமான்கள் விலைக்குக் கிடைக்கும்.

நதி:— ஸ்டேஷனுக்கு நான்குபர்லாங்கு தூரத்தில் கிருஷ்ணா நதி ஓடுகிறது. இதில் ஸ்நானஞ் செய்வது விசேஷம். நதிக்கரையில் சிறியதொரு ஆலயத்தில் தத்தாத்திரேயர் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார். தத்தாத்திரேயர் மூன்று சிரசு ஆறு புயங்களோடு நின்ற திருக்கோலமாக விளங்குகிறார். ஜலம் துங்கபத்ரா நதியின் ஜலத்தைப்போல் அவ்வளவு தெளிவாக இல்லை. வெள்ளக் காலங்களில் ஜலம் சந்தனக் குழம்புபோல் இருக்கும்.

## 7. பண்டரிபுரம்.

கிருஷ்ணாவிலிருந்து ஷோலாப்பூர் என்னும் ஸ்டேஷன் 126 மைல். சாதாரண மூன்றாவதுவகுப்பு வண்டிக்குச் சார்ஜ் ரூ 2-4-0. ஷோலாப்பூரிலிருந்து பண்டரிபுரத்திற்கு மோட்டார் பஸ்கள் போய் வருகின்றன. இந்த வழியே பிரயாணம் செய்தால் சார்ஜ் குறைவாகும். காலதாமதமும் இல்லாமல் சவுகரியமாகப் பிரயாணம் செய்யலாம். இதன்றித் தொடர்பாகவே இரயிலில் நேரேபண்டரிபுரம் போவதானால் குருட்வாடி ஜங்ஷன் போய்ச் சிறிய இரயில்வேயில் வேறு வண்டிமாறிப் பண்டரிபுரம் வரலாம். ஊர் இரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஒன்றரைமைல்தூரம்இருக்கும். மோட்டார் பஸ்கள் நேரே ஊருக்குள் போகின்றன.

வசதி:— அகல்யாபாய் தருமசாலை முதலிய அநேக தருமசாலைகள் உள்ளன. பண்டாக்களின் ஆட்கள் வந்து அழைத்துப் போய் பண்டா வீடுகளிலும் பணம் பெற்றுக்கொண்டு வேண்டிய வசதியைச் செய்துகொடுக்கிறார்கள்.



பாஷை:— மகாராஷ்டிர பாஷை பேசப்படுகிறது. தமிழ்ப் பேசுவோரைக் காண்பதரிது. தெலுங்கு இங்கிலீஷ்தெரிந்தவர்களைக் காணலாம்.

நதி:— சந்திரபாகா என்னும் ஆறு ஊருக்குக் கீழ்த்திசையில் ஓடுகிறது. இதனைப் பீமாநதி என்றுஞ் சொல்லுகிறார்கள். இதில் முழுகுவது விசேஷம்.

ஆலயம்:— ஆற்றுக்கு ஒரு பர்லாங்கு தூரத்தில் பண்டரிநாதர் ஆலயம் பெரிதாகவும், அழகாகவும் காணப்படுகிறது. ஆற்றின் கரையோரத்திலும் சிற் சிறு ஆலயங்கள் காணப்படுகின்றன. பண்டரிபுரம் பெரிய ஊராகவே இருக்கிறது. கோவிலருகிலேயே கடைத் தெருக்கள் இருக்கின்றன. கோவில் கிழக்கு முகமாய் விளங்குகிறது. கோவிலில் நுழைவதன் முன் செந்தூர நிறம் பூசிய விநாயகர் விக்ரகம் ஒன்று காணப்படுகிறது. கோவில் வாயில் வழியிலும் மற்றும் பல இடங்களிலுங் கூடச் செந்தூர நிறமுள்ள பற்பல விநாயகர்களை ஆங்காங்கு காணலாம். பண்டரிநாதர் இடுப்பில் ஊன்றிய இரு திருக்கரங்களோடு நின்ற திருக்கோலமாக விளங்குகிறார். ஆலயத்தில் பக்த கோடிகள் ஆடிப்பாடிப் பஜனை செய்வது பார்த்து மகிழ்வதற்கு உரிய பாக்கியமாகும். பண்டரிநாதர் திருவடிகளில் பக்தர்கள் சிரசை வைத்து விழுந்து வணங்குவது வழக்கம். பண்டரிநாதர் ஆலயத்திற்கருகில் உருக்குமணி தேவி ஆலயம் இருக்கிறது. உருக்குமணி தேவியும் பண்டரிநாதர் போலவே விளங்குகிறார். பண்டரிநாதர் பிரகாரம் வரும்போது நிருதிமூலையில் ஒரு சிறு வழியாகச் சென்றால் சங்கரர் ஆலயம் இருக்கிறது.

வடபிரகாரத்தில் விசுவநாதர் என்னும் பெயரோடும் விசாலாட்சி என்னும் பெயரோடுஞ் சுவாமி, அம்மன் பிரதிஷ்டை செய்யப்பட்டு இருக்கின்றன. இன்னும் இலக்ஷ்மி, சத்தியபாமா, அனுமார், திருப்பதி பாலாஜீ என்னும் மூர்த்திகட்கும் சிறு சிறு ஆலயங்கள் அங்கேயே இருக்கின்றன.

பண்டரிபுரத்திலிருந்து குருத்வாடி ஜங்ஷனுக்கு வரவேண்டும். 33 மைல் சாதாரண மூன்றாவது வகுப்பு வண்டிக்குச் சார்ஜ் ரூ 0—11—0. மோட்டார் பஸ்களும் போய்வருகின்றன.

## 8. பூனா.

குருத்வாடி ஜங்ஷனிலிருந்து பூனா ஜங்ஷன் 115-மைல் சாதாரண மூன்றாவது வகுப்பு வண்டிக்குச் சார்ஜ் ரூ 2—1—0.

வசதி:— ஸ்டேஷன் அருகில் ஒரு தர்மசாலையும், ஸ்டேஷனிலிருந்து சுமார் ஒரு மைல் தூரத்தில் மதராஸ் தருமசாலை ஒன்றும் இருக்கின்றன. பூனா விசேஷமான ஸ்தலமாகக் கொண்டாடப் பெறாவிடினும் விநோதமான நகரமாக விளங்குவதால் பலர் இங்கு இறங்கிப் பார்த்துப் போகிறார்கள்.

பாஷை:— மகாராஷ்டிர பாஷை பேசுகிறார்கள்.

ஆலயம்:— நகரத்தின் மேல் பாகத்தில் சுமார் 5-மைல் தூரத்தில் பார்வதி குன்று என்று ஒரு அழகிய மலையிருக்கிறது. அம்மலையில் கார்த்திகேய சுவாமி என்னுஞ் சுப்பிரமணியருக்கும் விஷ்ணுவுக்கும் பரமேஸ்வரருக்குந் தனித் தனியே ஆலயங்களிருக்கின்றன. பார்வதிமலைமீது இருந்து பூனா நகரத்தையும் அதன் பெரும் பகுதிகளிலுள்ள விநோதங்களையுங் காணலாம். இவை அவசியம் பார்க்கத் தக்கனவாகும். நகரத்தின் பல பகுதிகளில் ஆங்காங்கு பற்பல ஆலயங்களும் இருக்கின்றன.

பார்க்க வேண்டியவை:— குஜராத்தி பஜார், லஸ்கர் பஜார், மார்க்கட், இவைகள் பெரிய வியாபார ஸ்தலங்களாகும். பம்பாய் நகரத்தின் பாதுகாப்பிற்கு வேண்டிய யுத்தப்படைகள் பூனாவில் இருக்கின்றன.

## 9. பம்பாய்.

பூனா ஜங்ஷனிலிருந்து பம்பாய் விக்டோரியா டெர்மினஸ் என்னும் ஸ்டேஷன் 119-மைல். சாதாரண மூன்றாவது வகுப்பு வண்டிக்குச் சார்ஜ் ரூ 2—2—0. இரயில் வண்டிகள் பூனாவரையும் நீராவி என்ஜினைக்கொண்டு இழுக்கப்படுகின்றன. பூனாவில் அந்த என்ஜினைக் கழற்றி விடுகிறார்கள். பூனாவிலிருந்து வேறு மின்சார என்ஜினைக் கொண்டு வந்து பிணைத்துப் பம்பாய்க்கு மிகவேகமாகச் செலுத்தப்படுகிறது. பூனாவிலிருந்து பம்பாய்க்குப் போகிறவர்கள் பகலிற் பிரயாணஞ் செய்தால் வண்டித் தொடர் மலைமீது போகுங் காட்சியுஞ் சுமார் இருபதுக்கு மேற்பட்ட குகைகளில் நுழைந்து



செல்லுங் காட்சியும் வியப்பையுண்டு பண்ணுவனவாயிருக்கும். பம்பாய்க்கு வரும் வண்டிகட்கு நகரத்தின் பல மைல் தூரத்திற்கு முன்பே பற்பல லயன்களாக இருப்புப் பாதைகள் செய்து அடிக்கடி வண்டிகள் போய் வருவதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. பம்பாய் ஸ்டேஷனில் சுமார் 15 பிளாட்பாரம் வரை இருப்பதோடு பிளாட் பாரம் போய் மாறுவதற்குரிய பாலம் சுமார் ஒரு பர்லாங்கு நீளமுள்ளதாக விருக்கிறது. ஸ்டேஷனின் ஒரு பகுதியில் ஐந்து நிமிஷத்திற்கு ஒரு வண்டி புறப்பட்டுப் போவதும் வருவதுமாக இருக்கிறது. பம்பாயைச் சார்ந்த இரயில்வே ஸ்டேஷன்கள் மிக்க பெரிதான அநேக கொட்டகைகளோடு மிளிர்கின்றன.

வசதி:— பல தருமசாலைகள் இருக்கின்றன. எல்லாவித வசதிகளும் உள்ளன. நாட்டுக்கோட்டை நகரத்தார் கடைகளும் இருக்கின்றன. எல்லா வசதிகளும் உடைய ஓட்டல்களும் இருக்கின்றன. பெரும்பாலும் ஹிந்தி ஓட்டல்களாக விருப்பதால் அங்கு நம் நாட்டு ஆகாரங்கள் கிடைக்காது. மதராஸ் ஓட்டலில் தான் நம் நாட்டு ஆகாரங்கள் கிடைக்கும்.

பாஷை:— மஹாராஷ்டிர பாஷை பேசப்படுகிறது. ஹிந்தி பாஷை எல்லாருக்குந் தெரியும். பல பாஷைக்காரர்களுங் காணப்படுவர். தமிழ்ப்பேசுவோர்களும் ஏகதேசம் காணப்படுவர். வேங்கடேசப் பெருமாள் ஆலயம் என்னுந் தமிழ் நாட்டுக்கோவிலை யொத்துச் செய்யப்பட்டுள்ள ஆலயத்தில் பூசகர்கள் இந்நாட்டு ஐயங்கார்கள் ஆகலின் அங்குந் தமிழ்ப்பேசுவோர் காணப்படுவர்,

ஆலயம்:— பம்பாய் தேவிகோவில், மகாலெக்ஷ்மிகோவில், பாபூல்நாதர் கோவில், வாலகேஸ்வரர் கோவில் முதலிய கோவில்கள் உள்ளன. பாணுகெங்கா என்னுந் தீர்த்தம் வாலகேஸ்வரர் கோயிலில் இருக்கிறது.

பார்க்க வேண்டியவை:—

1. சௌபாத்தி
2. பாபூல்நாதர் கோவில்
3. வாலகேஸ்வரர் கோவில்
4. மஹாலெக்ஷ்மி கோவில்
5. விக்டோரியா கார்டன்
6. விக்டோரியாடெர்மினஸ் [ஸ்டேஷன்
7. ஹார்பர்
8. போர்ட்
9. மின்ட்
10. டவுன் ஹால்

| | |
|---|---|
| 11. மியூஸியம் | 18. ராஜாபாய் டவர்க்ளாக் |
| 12. அப்போலா பந்தர் | 19. ஹைக்கோர்ட். |
| 13. தாஜ்மஹால் ஹோட்டல் | 20. பி. பி. & ஸி. ஐ. ஆபீஸ் |
| 14. இந்தியா கேட் | 21. ஜார்ஜ் கேட் ஸ்டேஷன் |
| 15. எலக்ட்ரிக் ஹவுஸ் | 22. காரின் ரோட் |
| 16. குலாபா ஸ்டேஷன் | 23. பம்பாய் தேவி கோயில் |
| 17. பாண்ட் ஸ்டாண்டு | 24. ஜாவிர் பஜார் |

மேலே கண்ட ஆலயங்கள் முதலானவற்றையும் இன்னுஞ் சில இடங்களையும் மோட்டாரில் கொண்டுபோய்க் காண்பித்துவர ஆறுமணி நேரத்திற்கு ரூ 1—4—0 வீதம் வாங்கிக்கொண்டு வசதி செய்கிறார்கள்.

மிகப் பெரிய ஒர்க்ஷாப், அநேக மில்கள், உன்னதமான பல அடுக்கு மாளிகைகள், விஸ்தாரமான பற்பல அழகிய வீதிகள், பஜார்கள், அங்குள்ள விசித்திரமான பொருட்கள் முதலியன கண்டு மகிழ்வதற்குரியனவாகும். பற்பல வீதிகளிலும் நெருங்கித் தொடர்பாக மோட்டார், டிராம், கோச்சு, ரிக்ஷா முதலிய வண்டிகள் வந்துகொண்டிருப்பன அச்சத்தையும் ஆச்சரியத்தையுங் கொடுக்கும். இங்குள்ள டிராம் வண்டிகள் மேலடுக்கு உள்ளதாகவும், பிரயாணத்திற்கு மிகச் சௌகரியமானதாகவும் விளங்குகின்றன. பம்பாயின் ஒவ்வொரு விசேஷத்தையும் தனித்தனியே குறிப்பிடப்புகின் விரியுமாதலால், அவைகளை அங்கு நேரிற் கண்டு கொள்க.

## 10. நாசிக் பஞ்சவடி.

பம்பாயிலிருந்து நாசிக்ரோட்என்னும் ஸ்டேஷன் 117-மைல் சாதாரண மூன்றாவது வகுப்பு வண்டிக்குச் சார்ஜ் ரூ 2—1—0. நாசிக் பஞ்சவடிக்கு வரும்பொழுதும் வண்டித் தொடர் பதினொரு குகைகளில் நுழைந்து வருகிறது. நாசிக் ரோட் ஸ்டேஷனிலிருந்து நாசிக்பஞ்சவடி சுமார்6-மைல்தூரம்இருக்கும். மோட்டார்கள்வசதியாகவுங் குறைந்த சார்ஜ் விகிதமாகவும் போய்வருகின்றன. இங்கு கோதாவரி ஆறு ஓடுகிறது. கோதாவரி ஆற்றின் ஒரு கரையில் நாசிக் என்னும் ஊரும் மற்றக் கரையில் பஞ்சவடி என்னும் ஊரும் இருக்கின்றன. ஊருக்குள் வர யாத்ரீகர்களிடம் ரூ 0—4—0 வீதம் வாங்கிக் கொள்ளுகிறார்கள்.



வீடுபெற்று னுலகில்லை யென்றே — சேற்றிற் செந்நெல் கமல மோங்குந் திருக்குரு கூரதனு-ளாற்ற வல்லவன் மாயங்கண்டுரைததித் ததிந்தோடுமினோ' என்ற பந்தப்பாட்டுக் கூறுகின்றது. ஜீவர்களுக்காக உலகமா? உலகத்துக்காக ஜீவர்களா? பெருமாள் உலகத்தை நடத்துவதற்காகப் பல ஜீவர்களுக்கு முத்தி கொடுக்கமாட்டாரென்றால் அவர் கருணைசாலியாதல் யாங்ஙனம்? ஆகவே அந்தப் பாட்டும் அந்தப் பந்தமும் அவற்றோடினமாய மற்றைச் சுவடிகளுமே மஹாமோகனமென்பர் அறிஞரென்க.

5. ஆ:—வியாஸர் பொய் சொன்னாரென்றால் அவர் வகுத்த வேதத்தை யனுசரிக்கலாமா?

ச:— வேதத்தைச் சொன்னவர் சிவபிரான். வகுத்தவர் வியாஸர். சொன்னவரே சர்வஞ்ஞர். வகுத்தவருமா சர்வஞ்ஞர்? ஆகையால் வியாஸர் பொய் சொல்வதற்கும் நாம் வேதத்தை யநுசரிப்பதற்கும் சம்பந்தமேயில்லை.

6. ஆ:— நந்தி வியாஸரைச் சபிக்கவரும்போது ஹநுமார் அந்நந்தியை முகத்தில் உதைத்தார். அதனால் அந்நந்தியின் மேல்வாய்ப் பற்களெல்லாம் உதிர்ந்துவிட்டன. அதற்கடையாளமாகக் கங்க எருதுக்காரர் அவ்வெருதின் நெற்றியில் ஹநுமார் சித்திரமுள்ள பித்தளைத் தகட்டைத் தொங்கவிட்டிருத்தல் பிரத்தியக்ஷம்.

ச:— ஹநுமான் பட்டவுதையும் அவமானமும் முன் விளக்கப்பட்டன. அவன் நந்திதேவரை உதைத்தானென்று கங்க எருதைக்கொண்டு சாதிக்கப்பார்ப்பது தகுமா? மேலும் கங்க எருதுக்குத் தென்னாட்டிற்பெருமாள் மாடென்றே பெயர். ஆகவே ஹநுமான் ஒருக்கால்நந்தியையுதைத்திருந்தால் அவ்வுதைபட்டநந்தி விஷ்ணுநந்திதானென்பதே அக்கங்க எருதுக் கதையால் விளங்கும்.

7. ஆ:— அக்காலத்தில் சிவ நிந்தை செய்த வியாஸருக்குக் கைதம்பித்தது உண்மையானால் இக்காலத்திலுள்ள சிவ நிந்தகர்களுக்கும் என் அத்தண்டனையில்லை?

ச:— இந்த விவகாரத்தால் இப்போதுள்ள விஷ்ணு நிந்தகர்களுக்கு ஒரு தண்டனையுமில்லாமையால் அவர்களுக்கு எந்தக் காலத்திலுமே தண்டனையில்லை யென்பது சித்தமாய்விடும். இப்படியும் விவகரிக்கலாமா? எந்தக்காலத்திலும் எந்தச் சிவநிந்தகனுக்கும் எண்ணிறந்த விதங்களில் தண்டனை நிச்சயமாயுள்ளது. அத்தண்டனை உடனே பலிப்பதுமுண்டு. தாமதித்துப் பலிப்பதுமுண்டு. வியாஸர் பிரபலஸ்தானபடியாலும் அவர் பொய்யுரையாற் பல முனிவர்களும் அவர்கள்மூலம் இவ்வுலகமுமே கெடவிருந்தபடியா

னும் லோக ஸம்ரக்ஷணார்த்தம் அவர் உடனே தண்டிக்கப்பட்டார். அவ்வளவே.

---

20. ப்ராக் புராணும் ப்ரத்வம்ஸே கேசவேநாச்ரித
வ்ருஷ வபுஷா தாரிதஸ்ய மாதலத்வாத்.

முப்புர மிறுப்புழி முகுந்தப் புத்தேள்
மால்விடை யாகி ஞாலமொடு தாங்கலின்.

பொருள்:— திரிபுரசம்மார காலத்தில் விஷ்ணு பெரிய ரிஷப வடிவமெடுத்துத் தேரோடு சுமத்தலானும் என்பது.

சிவபிரான் திரிபுர சம்மாரஞ் செய்யத் தேர்மீ தேறினார். அத்தேர் பாரம் பொறுக்கமாட்டாமல் இற்றது. உடனே விஷ்ணு ரிஷபரூப மெடுத்துச் சிவபிரானை அத்தேருடன் சுமந்தார்.

'தஸ்மிந் குர்வதி தேவேச பதம் லோகமதோரத: | பாராஸஹ: பபாதாத ததா படபட த்வநி: | பிப்யுஸ்ஸ ப்ரஹ்மகா தேவாஸ்ஸ நாராயண காஸ்தகா | நாராயணோ மஹாயோகி வ்ருஷோ பூத்வா ததௌரதம்|| ததோ நாராயணஸ் தஸ்மாச் சபாகாத் விநிஸ்ஸ்ருத: | வ்ருஷ ரூபம் ஸமாஸ்தாய உஜ்ஜஹார மஹாரதம்' (அங்ஙனம் திருவடியை வைத்தபோது பாரம் பொறுக்க மாட்டாது படபடத் தொனியோடு இந்த இரதமானது இற்றது; பிரமாதி தேவர்களெல்லாம் அச்சமடைந்தார்கள்; அப்போது மகா யோகியாகிய நாராயணர் ரிஷபரூப மெடுத்துத் தேரைத் தாங்கினார்) என்ற உபதேச காண்டம் அக்கதைக்கு மூலவசனம்.

இனி அக்கதை பற்றிய ஆக்ஷேப சமாதானங்கள் வருமாறு:—

1. ஆ:— ஆதிசேஷன் உலகையும் சிவன் சந்திரனையும் தாங்குவர். அதனால் ஆதிசேஷனைக் காட்டிலும் உலகமும் சிவனைக் காட்டிலும் சந்திரனும் உயர்ந்தனவாகிவிடுமா? அப்படியே விஷ்ணு சிவனைத் தாங்கினதனால் விஷ்ணுவினும் சிவன் உயர்ந்தவனாகிவிட மாட்டான். சிவனுக்கு உபகரிக்கவே விஷ்ணு அக்காரியத்தைச் செய்தார்.

ச:— சுமக்கும் பொருள்களைக் காட்டிலும் சுமக்கப்படும் பொருள்களிற் சில உயர்ந்தும் சில தாழ்ந்துமிருக்கும். சுமக்கும் பொருள்களும் சுமக்கப்படும் பொருள்களுந் தம்முள் நிகர்த்திருப்பதுமுண்டு. அவை இன்னவிதமாகத்தா னிருக்கவேண்டுமென்ற நியமமில்லை. அப்படியிருக்க உவமானங்களைத் தாறு



மாறாகப் பிரயோகித்துவிட்டால் எல்லாருமே மயங்கிவிடமாட்டார்கள். ஆதிசேஷனுஞ் சிவபிரானுந் தம்மிற் றாழ்ந்த பொருள்களையே தாங்கினார்கள். ஆனால் விஷ்ணு தம்மினுயர்ந்த பொருளையே தாங்கினார். சிவபிரான் ஆண்டவரென்பதும் விஷ்ணு அவருக்கடியாரென்பதும் முன் 'அவுணர் முப்புரம் அழியவில் வாங்கலின்' என்ற பகுதியில் சவிஸ்தாரம் பண்ணப்பட்டிருக்கின்றன. ஆகையால் அடியாராகிய விஷ்ணு ஆண்டவராகிய சிவபிரானைத் தம்க்ஷேமத்தின் பொருட்டே அங்ஙனஞ் சுமந்தாரென்பது தெளிக.

2. ஆ:— ஒரே சூரியன் தண்ணீரிற் பல சூரியர்களாகித் தோன்றும். அப்பிரதிபலன சூரியர்களுக்கெல்லாம் சலனங்களுள. அச்சலனங்களைக் கொண்டு சூரியனையே சலனமுடையதென்று சொல்லி விடலாமா? அப்படியே விஷ்ணு பல அவதாரங்களிற் றோன்றுவர். அவ்வவதார விஷ்ணுக்களிடம் பல ஹேயங்கள் காணப்படும். அந்த ஹேயங்களைக்கொண்டு மூலவிஷ்ணுவையே குறை சொல்லிவிடப்படாது. ஆகையால் விஷ்ணுவின் சலனமான ரிஷபம் சிவனைத் தாங்கினது ஹேயமானாலும் அது விஷ்ணுவைப் பாதியாது.

ச:— பிரதிபலன சூரியர்களிடமுள்ள எவ்வகைப்பட்ட சலனமுமே மூலசூரியனைப் பாதியாது. அப்படியே அவதார விஷ்ணுக்களிடமுள்ள எப்படிப்பட்ட தர்மங்களுமே மூலவிஷ்ணுவைத் தொடாமலிருக்கவேண்டும். ஆனால் ஹேய தர்மங்கள் மட்டுந் தொடாவென்பதென்னை? தீர்க்காலோசனையின்றி உவமானங்களைப் பிரயோகித்து விடுவதும், பின்னர் உவமையையும் பொருளையும் பொருத்தநேரும்போது பேரிடர்ப்படுவதும் பூர்வபட்சத்தார்க்கும் அதன் இனத்தார்க்கும் வழக்கம். பூர்வபட்சம் தனக்கிஷ்டமில்லாத செய்தி யொன்றை அவதார விஷ்ணுக்களிடங் கண்டு விட்டால் அதை மறைக்கப் பெரும் பிரயாசை யெடுக்கும். அப்பிரயாசையால் அச்செய்தி மறையாவிட்டால் அப்பூர்வ பட்சம் தன் மூல விஷ்ணுவைக் காத்துக்கொள்வதற்கு அவதார விஷ்ணுக்களையெல்லாம் மொத்தத்தில் ஹீனப்படுத்திவிடும். மேற்காட்டிய ஜலசூரிய வுதாரணத்திலிருந்து அவ்வுண்மை தெரியலாம். அவ்வுதாரணம் 'அன்னவனுக்கோ ரிழிவுரைக்கு மாறுமுளதோ வதுவன்றித் - துன்னு கதிரோனென்றாகித் தோன்றுகினும் பற்பல கடத்தின் - மன்னு புனலிற் பலவாகி வதிந்ததென்னும் வகைசனிப்ப - தென்னலாருந் திருமால்செய் யெண்ணிலனந்த மவதாரம்' என்ற கூரேச விஜயப் பாட்டிற் காண்க.

---

21. அஸ்தோ கைர் ப்ரஹ்ம சீர்ஷை ரநிச
களக்ருதா லங்கிரியா பூஷிதத்வாத்.
அயன்சிர மாலை யளவில வணிதலின்.

பொருள்:—பிரமாவின் கணக்கற்ற தலைகளைக் கோத்து மாலையாகத் தரித்தலானும் என்பது.

'ஸர்வக்ராஸோ மஹா தேவஸ் ஸர்வாண்டாந்யகிலம் ஜகத் | ஸர்வாந் ஜீவாந் வீக்ஷணே ந ஹாஸே நச பராந் க்ருதா அட்டஹாஸேந ந்ருத்தே ந லலாட நயநாக் நி நா | ஹுங்காரேண ச ஹஸ்தே ந பாதா காதேந லீலயா | நாநாருத்ர கணைஸ் ஸாகம் ஸம்ஹாரம் யஞ் ச காரஸ: | ஸ மஹா ப்ரளயோ நாம ஸர்வேஷாம் நாச காரக: ஸம் ஹர்த்தா ஸ மஹா தேவஸ் ததா நந்தா ந் ஹரீந் விதீந் | இந்த்ராதீந பராந் தேவாம் ஸ் தத் ததண்டேஷு ஸம்ஸ்திதாந் | தக்த்வா காம் ச்சித்ததா தேஷாம் பஸ்மாநி பரமேச்வர: | அவாலே பயதாத் மாங்க முத்தூளந விதாநத: | பபாரமுண்டமாலாச்ச பரேஷாம் ஸ்வேச்சயா விபு: அஸ்தீநிதேஷ மாகல்பம் விததாந மஹேச்வர: | யஜ்ஞோப வீதமங்யேஷாம் மூர்த்தஜாநி ச காரஹி |' (சர்வக்கிராஸர் எனப்படும் மகாதேவர் சமஸ்த அண்டங்களையும் சமஸ்த உலகங்களையும், சர்வ ஜீவர்களையும் சங்கரிக்குங்கால் சிலரைப் பார்வையினாலும், சிலரை நகைப்பினாலும், சிலரைக் கோபத்தினாலும், சிலரை அட்டஹாஸத்தினாலும், சிலரை நடனத்தினாலும், சிலரை இலாட அக்கினியினாலும், சிலரை ஹுங்காரத்தினாலும், சிலரைக் கையினாலும், சிலரை உதையினாலும் நாநாருத்ர கணங்களோடு கூடி நின்று லீலையினாலே சங்கரிக்கின்றார்; இது எல்லாவற்றையும் நாசஞ்செய்யும் மகாப்பிரளயம் எனப்படும்; சங்கார கர்த்தாவாகிய அம்மகாதேவர் அப்போது அளவிறந்த விஷ்ணுக்களையும், பிரமாக்களையும், இந்திராதியரையும், அந்தந்த அண்டங்களிலே உள்ள சிலதேவர்களையும் தகித்து அவர்கள் பஸ்மங்களைத் தமது அங்கத்திலே உத்தூளனமாகப் பூசினர்; சிவபெருமான் சுவேச்சையினாலே பிறருடைய தலைமாலைகளையும் தாங்கினர்; அவர்கள் என்புகளைக் கற்பாந்தமாகத் தரித்தார்; உரோமங்களை உபவீதமாகக் கொண்டார்) என்ற சிவரகசிய கண்டம் அவ்வுண்மைக்கு மூலவசனம்.

இனி, அவ்வுண்மை பற்றிய ஆக்ஷேப சமாதானங்கள் வருமாறு:—

1. ஆ:— ஸர்வாண்டங்களையும் முடிவிற் சங்கரிப்பவர் விஷ்ணுவே. அதனாலேயே அவர் ஹரியென்ற பெயரினரானார். அவர் சங்காரத்தில் இந்திரனும் உருத்திரனும் பிரமனும் முறையே



ஒடுங்கி விடுவர். அங்ஙனமாகப் பிரமனுக்கு முன் ஒடுங்குபவனும் சங்காரியல்லாதவனுமாகிய சிவன் பிரமசிரோ மாலையை அணிவானென்பது யாங்ஙனம்?

ச:— 'தாமச மனுவந்தரத்திலே ஹரியை என்கிறவள் கருப்பத்திலே ஹரிகள் என்கிற தேவர்களோடு கூட ஹரியென்கிற திருநாமமுடையவரா யவதரித்தார்' என்பது விஷ்ணு புராணம் அம்சம் 3. அத்யாயம் 1. விஷ்ணுவுக்கு ஹரிநாமம் அவர் ஹரியை யென்னுமொரு பெண்ணின் வயிற்றிற் பிறந்ததால் வந்ததே தவிர உலகத்தை ஹரிப்பதால் வந்ததன்றென்பது அதனால் விளங்கும். சாந்தியும் 352-வது அத்தியாயத்தில் 'நான் கிருகங்களில் நடக்கின்ற யாகங்களில், இலோப ஹுத என்கிற மந்திரத்தினால் அழைக்கப்பட்டுப் பாகத்தை ஹரிக்கிறேன்; அதனாலும், என்னுடைய நிறம் ச்ரேஷ்டமான ஹரித வர்ணமானதனாலும் நான், ஹரி என்று கருதப்பட்டேன்' என்று கூறி அந்த ஹரிநாமத்தை அவ்வளவில் விட்டது. நான் - கிருஷ்ணர். மேலும் சங்காரத்தைத் தாமஸமென்று நிந்திக்கும் வழக்கமுடைய பூர்வபட்சம் இங்கு விஷ்ணுவைச் சர்வ சங்காரியென்பது மதியாமா? இன்னும் தேஜோபிந்து 'ரக்ஷகோ விஷ்ணு ரித்யாதி ப்ரஹ்மா ஸ்ருஷ்டேஸ்து காரணம் ஸம்ஹாரே ருத்ரே' (ரக்ஷிப்பவன் விஷ்ணு ஸ்ருஷ்டிப்பவன் பிரமன் ஸம்ஹரிப்பவன் ருத்ரன்) என்றும், யோகசூடாமணி 'ப்ரஹ்மா தேவாநாம் ப்ரதமஸ்ஸம்பபூவ | தாதாச ஸ்ருஷ்டௌ | விஷ்ணுச்ச ஸ்திதௌ | ருத்ரச்ச நாசே' (பிரமா சிருஷ்டியும் விஷ்ணு ஸ்திதியும் ருத்ரன் நாசமும் செய்வர்) என்றுங் கூறுவதால் விஷ்ணு ஸ்திதிக்கே யுரியவரென்பதும் ருத்ரரே சங்கார கருத்தா வென்பதும் விளங்கும். ஆகவே பிரமா விஷ்ணு முதலியோரைச் சங்கரிப்பதும் அவர்களின் சிரோமாலைகளைத் தரிப்பதும் சிவபிரானுக்குக் கூடுங் காரியங்களேயாமென்க.

2. ஆ:— எலும்பைத் தொட்டாற் பிராயச்சித்தஞ் செய்ய வேண்டுமே?

ச:— பிராயச்சித்த விதிகள் ஆத்மாக்களுக்கே, பரமாத்மாவுக்கல்ல.

3. ஆ:— சிவன் பரமாத்மாவாயினும் எலும்பு மாலைகளை யணியக் காரணமென்ன?

ச:— அரிபிரமாதியர் தாந்தாமே பரம்பொருளென மயங்கும் போதும், அரிபிரமாதியரைப் பரம் பொருளெனப் பிறர் மயங்கும் போதும் அவர்கட்கு அம்மயக்கந் தீர்ந்து உய்தி கூடுதற்பொருட்டு

அத்மீகவர்களின் அநித்தியத்தையும் தமது நித்தியத்தையும் அவர் அம்மாலாபரணதாரணத்தால் விசதப்படுத்துகிறார்.

4. ஆ:— ஒருதடவை பிரமாவின் சிரசைச் சிவன் கிள்ளினான். அது அவன் கையில் ஒட்டிக்கொண்டது. அப்பால் அது விஷ்ணுவின் கிருபையால் நீங்கியது. அந்த விடமே கபாலமோக்ஷமென்பது. அவரா தலைமாலை தலைக்கணிவார்?

ச:— கபாலமோக்ஷமென்பது ஒருஸ்தலமா? ஒரு தீர்த்தமா? வேறேதேனுமொன்றா? 'கபால நன்மோக்கத்திற் கண்டுகொண்மின்' என்று பாடியவர் அவ்விவரந் தெரிவித்திலர். 'முற்காலத்தில் தண்டகாரண்யத்தில் வசித்த......ரகுராமனால்......க்ஷுரத்தினால்......ராக்ஷஸனுடைய தலையானது அறுக்கப்பட்டது......... அந்தத் தலையானது.........மகோதர ரிஷியினுடைய கணுக்கால் எலும்பைப் பிளந்து பற்றிக்கொண்டு.........பிரகாசித்தது......அந்தத் தலையினால் உண்டான வேதனையினால் பீடிக்கப்பட்ட அந்த மகரிஷியானவர்......எல்லாத் தீர்த்தங்களுக்கும் போனார்......... எல்லாத் தீர்த்தங்களிலும் ஸ்நானஞ் செய்தும் விடுபட்டவராகவில்லை.........அவர் ஸரஸ்வதீ நதியிலுள்ள ஔசனஸ தீர்த்தத்தையடைந்து ஸ்நானஞ் செய்தார். பிறகு, ஔசனஸ தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்கின்ற அந்த மஹரிஷியினுடைய காலை விட்டு விட்டு அப்பொழுது அந்த ராக்ஷஸனுடைய தலையானது ஜலத்தினுள் விழுந்தது. அவர் அந்தத் தலையினால் விடப்பட்டு அதிக ஸுகத்தை அடைந்தார்.........பிறகு அந்த......ரிஷி...ஆச்ரமத்தை வந்தடைந்தார்......அந்த மகோதரர்......ரிஷிகளுக்கு அவை எல்லாவற்றையும் உரைத்தார்......அந்த ரிஷிகள்......... அந்தத் தீர்த்தத்திற்குக் கபாலமோசனமென்று பெயரிட்டார்கள்' என்பது சல்யம் 40வது அத்யாயம். மோசனமென்பதும் மோக்கமென்பதும் ஒன்றே. விடுதலையென்பது அவற்றினருத்தம். அக்கபால மோசனத்தைத் தானே கபாலமோக்கமென வைத்துக்கொண்டு அப்பாரதக் கதையை மறைத்துச்சிவநிந்தையை அப்பாடகர் கற்பித்துவிட்டால் அவரை அறிவுடையவர்கள் மதிப்பார்களா? சாத்திரங்களைப் புரட்டி உலகை வஞ்சிப்பது அம்மம்ம! தாய்க்கொலையினுங் கொடிது. சாத்திரப் புரட்டாற் பரமென நிருபணஞ் செய்யப்பட்ட தெய்வம் எதுவாயினுமாக, அது அப்புரட்டனைக் கண்டு "அடபாவி! 'என்ன காரியஞ் செய்தனை யென்னையுங் கெடுத்தாய்'" என்று நடு நடுங்கி அலறுமென்க. பிறகு அங்கபாலமோக்கத்தைத் தங்கருத்துக்கேற்பப் பிரமகபாலமெனவுங் கூறலாயினர் அவர் வழிவந்தோர். ஆகவே அத்தலைமாலைகளைச் சிவனையார் தரித்தல் சரியாதலுண்மையாமென்க.

---



22. தாநாத் ப்ரஜ்ஞாந முக்த்யோ ரபிச
பசுபதிஸ் ஸர்வதேவ ப்ரக்ருஷ்ட:.

ஞானமும் வீடும் பேணிநர்க் குதவலின்
பசுபதிப் பெயரிய தனிமுதற் கடவு
ளம்பர்க ளெவர்க்கு முயர்ந்தோ
னென்பது தெளிக வியல்புணர்ந் தோரே.

பொருள்:— ஞானத்தையும் மோக்ஷத்தையும் தன்னைப் பூசிப்பவர்க்குக் கொடுத்தலானும் பசுபதியென்னும் பெயரையுடைய முழுமுதற் கடவுளே எனைத் தேவர்களெல்லாரினும் உயர்ந்தவனென்னும் வேதமுடிவைக் கண்டு உய்வீர்களாக நல்லிலக்கணமுடைய பெரியோர்களே! என்பது.

நாராயணம் 'பரமாத்மா வ்யவஸ்தித: | ஸ ப்ரஹ்மா ஸ சிவ: ஸ ஹரி: ஸேந்த்ர:...' என்றது. இதிலுள்ள 'ஸ ஹரி:' என்ற பாடத்தை ஸ்ரீமத் ஹரதத்தப்பிரபுஒப்புக்கொள்ளவில்லை. அதற்கேற்பவே மறையும் 'பரமாத்மா வ்யவஸ்தித: ஸ ப்ரஹ்மா ஸ ஈசாந: ஸேந்த்ர: ...' என்று 'ஸ ஹரி:' என்பதைக்கழித்துக்கூறிற்று. பரமாத்மாவொருவனுளன், பிரமன் உருத்திரன் இந்திரன் முதலியோர் அவனுடைய விபூதிகள் என்பன அவ்விருவுபநிஷத்வாக்கியங்களின் தாற்பரியம். பூர்வபக்ஷம் அவ்வாக்கியங்களிலுள்ள பரமாத்மபதம் சிவபிரானைக் குறிப்பதா மஹா விஷ்ணுவைக் குறிப்பதாவென ஆராயப் புகுந்து அங்குள்ள விபூதிகளிற் சிவநாமம் வந்துவிட்டமையாலும் விஷ்ணுநாமம் வாராமையாலும் மஹாவிஷ்ணுவையே குறிக்குமென்று தீர்மானிக்கும். அது பொருந்தாது. 'ஸ ப்ரஹ்மா ஸ விஷ்ணு: ஸ ருத்ர: ஸ இந்த்ர:' என்று சாண்டில்யத்திலும், 'ஸ சிவ: ஸ ஹரிர் விதி:' என்று வராஹத்திலும், 'த்வம் ப்ரஹ்மா த்வம் விஷ்ணுஸ் த்வம் ருத்ரஸ் த்வமிந்த்ர:' என்று கணபதியிலும், 'த்வம் ப்ரஹ்மா த்வம் ச வை விஷ்ணு: த்வம் ருத்ரஸ் த்வம் ப்ரஜாபதி:' என்று மைத்ராயணியிலும், 'த்வம் ப்ரஹ்மா த்வம் ருத்ரஸ் த்வம் விஷ்ணு:' என்று ப்ராணாக்நி ஹோத்ரத்திலும் விஷ்ணுவும்பிரமருத்ரேந்திராதிகளோடு விபூதிகளில் வைத்துப் படிக்கப்பட்டார். அதனால் நாராயண மறைகளிலுள்ள விபூதிகளிலும் விஷ்ணு சேர்ந்தவரேயென்று அறிஞர் யூகித்துக்கொள்ளவேண்டுமென்பதாயிற்று. அங்ஙனமாக அவரைப்பரமாத்மாவெனல் எப்படி? இனி அவ்விபூதிகளையுஞ் சொல்லி அப்பரமாத்ம பதத்தை யொதுக்கிவிட்டு அதற்குப் பிரதியாகச் சிவபிரானுக்கோ மஹாவிஷ்ணுவுக்கோவுரிய விசேஷ லக்ஷண பதங்களைச் சொல்லியிருக்கும் உபநிஷத் ஏதேனுமுண்டாவென்று பார்க்கவேண்டும். அப்படியோருபநிஷத்திருந்

தால் அவ்விசேஷ லக்ஷணங்களுக்குரிய தெய்வத்தையே அப்பரமாத்ம பதஞ்சுட்டுமென்பது நிச்சயம். கைவல்யம் அத்தகைய வாக்கியத்தை யுடையது. 'உமாஸஹாயம் பரமேச்வரம் ப்ரபும் த்ரிலோசநம் நீலகண்டம் ப்ரசாந்தம் | ......பூதயோநிம் ஸமஸ்த ஸாக்ஷிம் தமஸ: பரஸ்தாத்|| ஸ ப்ரஹ்மா ஸ சிவ: ஸேந்த்ர: | ஸ ஏவ விஷ்ணு: ஸ ப்ராண: ஸ காலோக்நி: ஸ சந்த்ரமா' என்பதே அது. இதில் விஷ்ணு விபூதிகளிற் சேர்ந்தார். பரமாத்ம ஸ்தானத்தில் உமாஸஹாயம் பரமேச்வரம் த்ரிலோசநம் நீலகண்டம் என்று சிவபிரானுக்கேயுரிய விசேஷ லக்ஷணைபதங்களே வந்துள்ளன. இவர் துரீய ருத்ரர். விபூதிகளிற் சேர்ந்த சிவன் குணருத்ரர். விஷ்ணுபரமாக அத்தகைய வாக்கியம் ஒன்றேனும் வேதவேதாந்தங்களிலில்லை. ஆகவே சிவபிரானே பரமாத்மாவென்பது வஜ்ர லேபமாகும்.

'மோஹாந் நஜா நந்தி ஸுரேந்த்ர முக்யா:' (இந்திரன் முதலானவர்கள் அவரை மோகத்தா லறியவில்லை), 'அஹிமோஹகரீ மாயாமம விஷ்ணோச்ச ஸுவ்ரத | தஸ்ய பாதாம்புஜ த்யாநாத் துஸ்தரா ஸுதராபவேத்' (எனக்கும் விஷ்ணுவுக்கும் மாயையானவள் மோகத்தைச் செய்கிறவளாயிருக்கிறாள். கடக்கமுடியாத அந்த மாயையானவள் எம்மால் அந்தச் சிவபாதத்தியானத்தாலே சுலபமாகத் தாண்டத் தக்கவளாய் விடுவாள்) என்றது சரபம். 'மாயயா மோஹிதச் சம்போர் மஹாதேவம் ஜகத்குரும் நஜாநந்தி ஸுராஸ் ஸர்வே ஸர்வகாரண காரணம்' (தேவர் யாவருஞ் சம்புவின் மாயையால் மோகமுற்றுச் சகத்குருவும் சர்வ காரண காரணருமான மஹாதேவரை யறியாராயினர்) என்றது பஞ்சப்ரஹ்மம். 'சின்மாத்ரோஹம் ஸதாசிவ:' (நான் ஞானமாத்திரையாயுள்ள சதாசிவன்) என்றும், 'சித்...ரூபம்...உமா ஸஹாயம்' (உமாசகாயன் ஞானரூபி) என்றுஞ் சொன்னது கைவல்யம். 'ஈசாந: ஸர்வ வித்யாநாம்' எல்லாவித்தைகளுக்கும் ஈசானன் தலைவன்) என்றன நாராயணமும் அதர்வசிரஸும். 'தேவாதி தேவஸர்வஜ்ஞ ஸச்சிதாநந்தலக்ஷண | உமாரமண பூதேச ப்ரஸீத கருணாநிதே' (தேவதேவனும் சர்வஞ்ஞனும் சச்சிதாநந்தலக்ஷணனும் உமாபதியும் ப்ரஸீதனும் கருணாநிதியுமாகிய சிவபிரான்) என்றது சுதஸம்ஹிதை [sic: சுகரஹஸ்யம்]. 'ஓமித்யேவ யதுத் பூதம் ஜ்ஞாநம் ஜ்ஞேயாத்மகம் சிவம்' (பிரணவமாயிருக்கிற ஞானத்துக்கு ஞேயம் சிவபிரான்) என்றது சாண்டில்யம். 'திவ்யஜ்ஞாநோபதேஷ்டாரம் தேசிகம் பரமேச்வரம்' (திவ்யமான ஞானத்தை யுபதேசிக்கிற ஆசாரியனான பரமேசுவரனை) என்றது யோகசிகை. 'ஸர்வஜ்ஞ:......ஸர்வேச்வர: ஈச: பசுபதி:' (சருவஞ்ஞனும் சருவேசுவரனும் ஈசனுமாகிய பசுபதி) என்றும், 'ஸர்வஜ்ஞ ஈச: பசுபதி:' (சருவஞ்ஞனும் ஈசனுமாகியபசுபதி) என்றும் சொன்னது ஜாபால். 'நித்ய சின்மாத்ர ரூபோஸ்மி ஸதா ஸச்சிந்மயோஸ்ம்யஹம்' (நித்யஞான சொரூபனா யிருக்கிறேன். சர்வ காலமும் சத்ரூபமாயும் சித்ரூபமாயு மிருக்கிறேன்) என்றது மைத்ரேய். 'ஸர்வஜ்ஞ ஈச:' (சர்வஞ்ஞனாகிய ஈசன்) என்றது பைங்கலம். 'கவிம்......ஸர்வேச்வரம்' (சர்வஞ்ஞனை சருவேசுவரன்) என்றது நாரத பரிவ்ராஜகம். இவ்வாக்கியங்களாற் பிரமா விஷ்ணு இந்திரன் முதலிய தேவர்களெல்லாம் மோகத்தை யடைபவர்களென்பதும், சிவபிரானே அவர்களுக்கு அம்மோகத்தைக் கொடுப்பவரென்பதும், அவரொருவரே சருவஞ்ஞர் சர்வாத்மாக்களுக்கும் ஞானத்தை யருள்பவரென்பதும் வஜ்ரலேபமாகும்.



யோகசிகை 'தஸ்ய விஜ்ஞான மாத்ரேண ஜீவந் முக்தோ பவேஜ் ஜந:' (அந்த நாதலிங்கத்தின் ஞானமாத்திரத்தினாலே ஜனனமானது ஜீவன் முக்தியை யடைந்ததாகி விடும்) என்றும், 'யேந விஜ்ஞாந மாத்ரேண ஜந்மபந்தாத் ப்ரமுச்யதே' (விஞ்ஞான மாத்திரத்தால் ஜன்மபந்தத்தி னின்று விடுவிக்கப்படுகிறான்) என்றுஞ் சொன்னது. அந்நபூர்ணம் 'தஸ்ய விஜ்ஞாந மாத்ரேண ஜீவந் முக்தோ பவிஷ்யஸி' (அந்த விஞ்ஞான மாத்திரத்தாலே ஜீவன் முக்தனாய் விடுவாய்) என்றது. முக்திகம் 'அத: ஸர்வேஷாம் கைவல்ய முக்திர் ஜ்ஞாநமாத்ரேணோக்தா' (ஆகையால் எல்லாருடைய வும் எல்லாவுபநிஷத்துக்களுடையவும் அபிப்பிராயமானதுகைவல்ய முக்தி ஞானமாத்திரத்தாலேதானென்று சொல்லப்பட்டிருக்கிறது என்பது) என்றது. இந்த வாக்கியங்களால் ஞானமொன்றே மோக்ஷத்தைத் தருமென்பது வஜ்ரலேபமாகும்.

'அதகஸ் மாதுச்யதே மஹாதேவ: யஸ்ஸர்வாந் பாவாந் பரித்யஜ்ய ஆத்மஜ்ஞாந யோகைச்வர்யே மஹதி மஹீயதே தஸ்மாதுச்யதே மஹா தேவ:' (பின்னர் எது பற்றி மகாதேவர் எனப்படுகிறார். எல்லாப் பாவனைகளையும் விடுத்து, மகத்தாகிய பரமாத்மாநந்தயோகைச்வரியத்தின் பொருட்டுப் பூசிக்கப்படுகின்றார். அது பற்றி மகாதேவர் எனப்படுகின்றனர்) என்றது அதர்வசிரஸ். 'ஸர்வகர்மாந் பரித்யஜ்ய நிர்மமோ நிரஹங்காரோ பூத்வா ப்ரஹ்மைகம் சரணமுபகம்ய' (எல்லாக்கருமங்களையும் விட்டு விட்டு நான் எனது என்னும் அகங்கார மமகார மில்லாதவனாய்ப் பிரமமொன்றையே சரணமாக வடைந்து) என்றது நிராலம்பம். 'தஸ்மாத் ஸர்வாந் பரித்யஜ்ய ஹேயாந் விஷ்ண்வாதிகாந் ஸுராந் | சிவ ஏவ ஸதாத்யேயஸ் ஸர்வ ஸம்ஸார மோசக:' (சமுசார துக்க நாச முத்திப் பிராப்தியின் பொருட்டுக் கீழான விஷ்ணு முதலிய சர்வ தேவர்களையும் விட்டு எப்பொழுதும் தியேயனாகவுள்ள சிவபெருமானையே தியானிக்கவேண்டும்) என்றது சரபம். 'ஸர்வமிதம் ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரேந்த் ராஸ்தே ஸம்ப்ரஸூயந்தே | ஸர்வாணி

சேந்த்ரியாணி ஸஹபூதைர் ந காரணம் காரணானாம் த்யாதா காரணந்து த்யேயஸ் ஸர்வைச்வர்ய ஸம்பந்நஸ் ஸர்வேச்வரச் சம்பு ராகாச மத்யே......சிவ ஏகோத்யேயச் சிவம் கரஸ் ஸர்வ மந்யத் பரித்யஜ்ய ஸமாப்தாதர்வ சிகா' (அந்தப் பிரம்ம விஷ்ணு ருத்ரேந்திரர் முதலியவர்களெல்லாம் உற்பத்தியாகின்றனர். எல்லா இந்திரியங்களும் பூதங்களுடனே கூட உற்பத்தியாகின்றன. காரணமும், காரணங்களைப் படைத்தோரும் கருதியொரு மாகியவர் உற்பவித்தலின்று. காரணமும் சர்வைசுவரிய சம்பந்தரும் சம்புவு மாகியவரே ஆகாயமத்தியில் தியானிக்கற் பாலர்.......மற்றெல்லாம் விடுத்து இன்பஞ் செய்பவராகிய சிவபிரானொருவரே தியானிக்கற் பாலர். அதர்வசிகை முற்றிற்று) என்றது அதர்வசிகை. இந்த வாக்கியங்களாற் சகல பாவனைகளும் சகல தர்மங்களும் பிரம விஷ்ணு இந்திராதி சகல தேவர்களுந் தள்ளப்படத் தக்கவர்களை யென்பதூஉம், சிவபிரானொருவரே மோக்ஷ சுகத்தைத் தருபவராதலின் அப்பொருட்டுச் சர்வாத்மாக்களாலும் எப்போதுந் தியானிக்கப்படத் தக்கவரென்பதும் வஜ்ரலேபமாகும்.

'தம்ஹ தேவ மாத்ம புத்தி ப்ரகாசம் முமுக்ஷுர்வை சரண மஹம் ப்ரபத்யே' (அந்த ஆத்ம புத்திப் பிரகாசகனான தேவனை மோக்ஷத்தை விரும்பி யான் சரணமடைகின்றேன்) என்றும், 'தமேவம் விதித்வாதி ம்ருத்யு மேதி நாந்ய: பந்தா வித்யதே யநாய' (அவனை இவ்வாறறிந்தவர் மிருத்யுவைத் தாண்டுவர். வேறு வழி மோக்ஷத்துக்கில்லை) என்றும், 'விச்வஸ்யைகம் பரிவேஷ்டிதாரம் ஜ்ஞாத்வா சிவம் சாந்தி மத்யந்தமேதி' (உலகமெல்லாம் சூழ்ந்து கொண்டிருக்கின்ற ஒருவரான சிவபெருமானை யறிந்து துக்க வொழிவைச் சம்பூர்ணமா யடைகின்றனன்) என்றும், 'ஜ்ஞாத்வா தேவம் முச்யதே ஸர்வபாசை:' தேவனை யறிந்தபோது எல்லாப் பாசங்களினின்று விடுபடுகிறான்) என்றும் சொன்னது சுவேதாச்வதரம். அவ்வாக்கியங்களிலுள்ள 'தேவனை', 'அவனை' யென்பன சிவனையே சுட்டுமென்பது அவ்வுபநிஷத்தைப் படித்தறிக. 'யதா பச்ய: பச்யதே ருக்மவர்ணம் கர்த்தார மீசம் புருஷம் ப்ரஹ்மயோநிம் | ததாவித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜந: பரமம் ஸாம்ய முபைதி' (எப்பொழுது பார்ப்பவன் பொன் வண்ணத்தினரும், கர்த்தரும், ஈசரும், புருஷரும் பிரமாவுக்குக் காரண ரூபருமா யுள்ளவரைப் பார்க்கின்றானோ அப்பொழுது அவன் ஜீவன் முக்தனாய்ப் புண்ணிய பாவத்தை யொழித்துக் களங்கமற்றவனாய்ச் சிவ சாமியத்தை அடைகின்றான்) என்றது முண்டகம். 'ஜ்ஞாத்வாதம் ம்ருத்யு மத்யேதி நாந்ய: பந்தா விமுக்தயே' (அதை யறிந்து மிருத்யுவைத் தாண்டுவான். வேறுவழி மோக்ஷத்துக்கில்லை) என்றது கைவல்யம். 'தமக்ரதும் பச்யதி வீத சோகோ தாது:



ப்ரஸாதாந் மஹிமாநமீசம்' (தன்னுடைய மகிமைக்கு ஏதுவாயுள்ள அதனைக் கன்ம நீக்கமுள்ளோன் தனக்காதாரமான ஈசனது பிரசாதத்தினாற் சோகமில்லாதவனாய்க் காண்கின்றனன்) என்றது சரபம். 'பாச பத்தஸ் ததாஜீவ: பாச முக்தஸ் ததா சிவ:' (பாசத்தினாற் பந்திக்கப்பட்டிருக்கிறவரையில் ஜீவனாயிருக்கிறான். பாசத்தினின்று விடுபட்டால் அப்பொழுது சிவனாகிறான்) என்றது ஸ்கந்தம். 'கோமோக்ஷோபாய:' (மோக்ஷோபாயம் எது?) என்று வினவி 'விபூதிதாரணோ தேவ' (விபூதிதாரணமே அதற்குபாயம்) என்று விடுத்தது ஜாபால். 'தாபத்ரய ஸமுத்பூத ஜந்ம ம்ருத்யு ஜராதிபி: | நாநாவிதாநி துக்காநி ஜஹார பரமேச்வர:' (பரமேச்வரர் அத்தேவர்களுடைய தாபத்திரய ஜனன மிருத்தியு ஜரை முதலியவற்றாலுண்டான நாநாவித துக்கங்களையும் ஹரித்தருளினர்) என்றது சரபம். 'யதாசர்ம வதாகாசம் வேஷ்ட யிஷ்யந்தி மாநவா: | ததாசிவ மவிஜ்ஞாய துக்கஸ்யாந்தோ பவிஷ்யதி' (எப்பொழுது மனிதர்கள் ஆகாயத்தைத் தோல்போலுரித்துப் போர்த்துக்கொள்வார்களோ அப்பொழுதுதான் சிவசேவையின்றித் துக்கமற்ற மோக்ஷத்தை அடைவார்கள்) என்றது சுவேதாசுவதரம். இந்த வாக்கியங்களாற் சிவபிரானே சர்வாத்மாக்களுக்கும் பாசநிவர்த்தியும் மோக்ஷப் பிராப்தியும் அருள்வாரென்பது வஜ்ரலேபமாகும்.

நாதபிந்து 'ப்ரதமாயாம்து மாத்ராயாம் யதிப்ராணைர் வியுஜ்யதே பரதேவர்ஷ ராஷ்ட்ர ஸௌஸார்வபௌம: ப்ரஜாயதே|| த்விதீயாயாம் ஸமுத்க்ராந்தோ பவேத் யக்ஷோமஹாத்மவாந் வித்யாதரஸ்த்ருதீயாயாம் கந்தர்வஸ்து சதுர்த்திகா|| பஞ்சம்யாமத மாத்ராயாம் யதிப்ராணைர் வியுஜ்யதே | உஷித: ஸஹதேவத்வம் ஸோமலோகே மஹீயதே|| ஷஷ்ட்யா மிந்த்ரஸ்யஸாயுஜ்யம் ஸப்தம்யாம் வைஷ்ணவம்பதம் | அஷ்டம்யாம் வ்ரஜதே ருத்ரம் பசூநாம்சபதிம்ததா|| நவம்யாம்து மஹர்லோகம் தசம்யாம் து ஜநம் வ்ரஜேத் | ஏகாதச்யாம் தபோலோகம் த்வாதச்யாம் ப்ரஹ்ம சாச்வதம்|| தத: பரதரம் சுத்தம் வ்யாபகம் நிர்மலம் சிவம் | ஸதோதிதம் பரம் ப்ரஹ்ம ஜ்யோதிஷா முதயோ யத:|| அதீந்த்ரியம் குணாதீதம் மநோலீநம் யதாபவேத் அநூபமம் சிவம் சாந்தம் யோகயுக்தம் ஸதாவிசேத்' (முதலிற் பரதவர்ஷம், இரண்டாவது யக்ஷலோகம், மூன்றாவது வித்யாதரலோகம், நான்காவது கந்தர்வலோகம், ஐந்தாவது ஸோமலோகம், ஆறாவது இந்திரலோகம், ஏழாவது விஷ்ணுலோகம், எட்டாவது ருத்ரலோகம், ஒன்பதாவது மஹர்லோகம், பத்தாவது ஜநோலோகம், பதினொன்றாவது தபோலோகம், பன்னிரண்டாவது பிரமசாச்வதம். எல்லாவற்றின்மேலும் சிவகதி) என்றது. இவ்வாக்கியம் உலகங்களைக் கீழிருந்து மேல்நோக்கி வரிசைப் படுத்தி உச்சியிற் சிவபதத்தை வைத்து வெகுவாக வர்ணித்துள்ளது. மண்

டலப்ராஹ்மணம் 'தந்மநோ விலயம் யாதி தத் விஷ்ணோ: பரமம் பதம் | தல்லயாச் சுத்தாத் வைத ஸித்திர் பேதா பாவாத்' (மனோலயமுண்டானபோது விஷ்ணுவின் பரமபதமெய்துவர்: அப்பதம் லயமானபோது சுத்தாத் வைதஸித்தியுண்டாம்) என்றது. இதில் அச்சிவபதத்துக்குச் சுத்தாத் வைதஸித்தியென்ற பெயர் வந்தது. மாயாவாதம் கேவலாத் வைதமெனவும் வைஷ்ணவம் விசிஷ்டாத் வைதமெனவும்படும். சைவ சித்தாந்தமே சுத்தாத் வைதமாகும். "இவ்வத்துவிதம், ஏனையோர் கூறும் அத்துவிதம் போலக் கேவலமென்றுதல், விசிட்டமென்றுதல், மறுதலையென்றுதல் யாதானுமொன்றான் விசேடிக்கப்பட்டுநின்றுபொருளுணர்த்தாது சுத்தமாய் நின்றே பொருளுணர்த்துதலிற் சுத்தாத்துவிதமென வழங்கப்படும். ஈண்டுச் சுத்த மென்றது யாதானுமொன்றான் விசேடிக்கப்படாது நிற்றலை; அது 'விசிட்ட சத்தை', 'சுத்தசத்தை' எனத் தார்க்கிகர் கூறும் வாய்பாட்டானு மறிக. ஏனையோர் கூறும் அத்துவிதம் கேவலமுதலியவற்றான் விசேடிக்கப்படாதவழி அவர் கூறும் பொருடருதற் கேலாமையின் அவை யெல்லாஞ் சுத்தாத்துவிதமாகாமையுங் காண்க" என்றது ஸ்ரீ சிவஞான மஹா பாஷ்யம். வைகுண்டம் அழியா முத்தியாயினால், மேற்கண்ட உலகவரிசையில்இடைப்படுதலும் லயமுடைத்தெனப்பழிக்கப்படுதலும் அதற்கு வர நியாயமில்லை. தேஜோபிந்து 'ந ப்ரஹ்ம லோகோ வைகுண்டோ ந கைலாஸோ ந சாங்கத:' (பிரமலோகம் வைகுண்டம் கைலாஸம் எல்லாம் அநித்யம்) என்றதாலும் வைகுண்டத்துக்கு நாசமுண்மை சித்தம். இதிலுள்ள கைலாஸம் மேல் உலகவரிசையில் எட்டாவதாய் நின்ற ருத்ரபதமேயாம்: பன்னிரண்டன் மேலாய் நின்ற வைதிக சைவ முத்தி பதமன்று. கைலாசங்கள் பலவுளவென்பது 'இங்கே, கைலாஸமென்று ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. அது குபேரனுடைய ஸ்தானம்' என்ற உத்யோகம் 111-வது அத்தியாயத்தாலும் விளக்கம். அப்படியே வைகுண்டமும் பலவாதலுண்டென்பதற்குப் பிரமாணங் கிடையாது. நிற்க, முண்டகமும் தியாநபிந்துவும் 'ப்ரணவோ தநுச் சரோஹ்யாத்மா ப்ரஹ்ம தல்லக்ஷ்ய முச்யதே' என்று கூறிச் சர்வாத்மாக்களும் பரமசுகத்தின்பொருட்டுப் போய்ச்சேரவேண்டிய லக்ஷ்யம் ப்ரஹ்மபதமே யென்கின்றன. ருத்ரஹ்ருதயமும் அக்கருத்தையே 'தநுஸ்தாரம் சரோஹ்யாத்மா ப்ரஹ்ம தல்லக்ஷ்ய முச்யதே' என்ற அடியால் தெரித்து, 'சிவ லக்ஷ்யம் நஸம்சய:' என்று அந்த லக்ஷ்யமாகிய ப்ரஹ்ம பதம் சிவபதமே யென்றும் அதிற் சந்தேகமே வேண்டாமென்றும் வலியுறுத்தியுளது. மண்டலப்ராஹ்மணம் அந்த லக்ஷ்யத்தை 'அந்தர் லக்ஷ்யம்......உமா ஸஹாயம் நீலகண்டம் ப்ரசாந்தமந்தர் லக்ஷ்யம்', 'ஸர்வேசம்......சிவம்......ஏகலக்ஷ்யம்' என்று

# செய்தித்திரட்டு.

**விரையாச்சிலை:—** புதுக்கோட்டை சமஸ்தானம் விரையாச்சிலை ஸ்ரீ ரக்ஷாவதாரி சமேத ஸ்ரீவில்வவனநாதர் திருக்கோயிலை வை ஸ்ரீ திருவளார் அ. ராம. இராமநாதன்செட்டியாரவர்கள்புதுக்கிச்சிற்பமுறைப்படி, கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம் முதலியன கருங்கற்களாலும், வண்ணச்சுதைகளாலும் திருப்பணி செய்து முடித்து ஸ்ரீ ரக்ஷாவதாரியம்பிகை சமேத ஸ்ரீ வில்வவனநாத சுவாமிக்கும், சித்தி விநாயகர், முருகப் பெருமான், சண்டேசுரர், வயிரவர், முதலியமூர்த்திகட்கும் ஆவணிமீ ௪௳ உத்திராட நாள், கன்யா லக்ன நன் முகூர்த்தத்தில் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகமும், அன்றிரவு ஐம்பெருங்கடவுளர் திருவுலாவும் வைதிக சைவ சம்பிரதாயங்கள் வழுவாமல் மேள தாள சங்கீத பரத நாட்டியங்களுடன் மேன்மையாக நடாத்தினர். திரளான அன்பர்கள் வந்து கூடித்தெரிசித்தின்புற்றனர். திருப்பணிச்செல்வர், தம் புதல்வர்களுக்குத் தம் பொருளைப் பகிர்ந்து கொடுத்துத் தமக்கொரு பங்கு வைத்து அதை ஆளுடைய அண்ணலார் திருப்பணிக்கு ஆக்கியதும், அவர் தம் புதல்வர்கள் மஹா கும்பாபிஷேகத்திற்குப்போதியபொருளுதவியதும்போற்றப்பெறுகின்றன.

**திருநணா:—** என்னும் பவானி முக்கூடலில் பாலகிருஷ்ண சாதுவானவர் திருநாவுக்கரசு சுவாமிகளின் உத்ஸவ விக்கிரகம் செய்து வந்து அன்பர்களின் உதவியால் ஆவணி ௨௫௳ சுவாதிநாள் மீனலக்ன நன் முகூர்த்தத்தில் பிரதிஷ்டா கும்பாபிஷேகம் செய்வித்தார். S. K. P. பாலமுனியப்ப செட்டியாரால் அன்றிரவு திருவுலாச்செய்யப்பெற்றது.

**காணப்பேட்டை:—**புதுக்கோட்டை சமஸ்தானத்திலுள்ள, இவ்வூரில் பிரமவித்தியாம்பிகா சமேத பூமீஸ்வர சுவாமி கோயிலுக்கு வடபால் இராமச்சந்திர புரம் திருவாளர், உ. மு. உ. உலகப்பசெட்டியாரவர்களின் குமாரர்களான முத்துவீரப்ப செட்டியாரவர்களும், இராமசாமி செட்டியாரவர்களும் அறுபத்துமூவர் திருமடம் அமைத்து, ஆவணி ௨௫௳ சுவாதி நாள் தனுர் லக்ன நன் முகூர்த்தத்தில், திருமடாலயப் பிரதிட்டைசெய்து வரன்முறையாகக் குருபூஜைகளை நடத்தி வருகின்றனர்.

**ஆம்காடு:—** குன்றக்குடிக்கு வடக்கே மூன்றுமைலில், சேமத்தையொட்டி மதுரநதியின் உற்பத்திஸ்தானமாக நீர்வளம், நிலவளம் நிறைந்துள்ள இத்தலத்தில், அகத்தியமகாமுனிவர்தாபித்த, சுயம்புமூர்த்தியாகிய மதுரநதீஸ்வரருக்கும், மங்களாம்பிகைக்கும், சித்திவிநாயகருக்கும், ஆதிசேடனுக்கும் ஐப்பசி ௨௭௳ அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் செய்து இரண்டாயிரம் ஏழைமக்கட்கு நல்லுணவளித்து, மார்கழி ௧௨௳ மண்டலாபிஷேகம் செய்யப் பெற்றது.

**திருக்கோளம்புதூர்:—** வடிவுடையம்மையார் சமேத நட்டமாடிய நம்பருக்கும், மூத்தபிள்ளையார் முருகவேளாதிய மூர்த்திகட்கும் ஆடி ௨௯௳ மண்டலாபிஷேகமும், அன்றிரவு ஐம்பெருங்கடவுளர் திருவுலாவும், ஐப்பசி ௪௳ சுவாதி நாளில், திருஞானசம்பந்தப் பெருமானார் திருப்பதிகம் பாடி ஓடம் நடத்திய திருவிழாவும் திருப்பணிச் செல்வர்களான நற்சாந்துப்பட்டி பெ. ராம. குடும்பத்தினரால் சிறப்பாகச் செய்யப்பெற்றன.

திருவிழாக்கள்:— ஆவணிமாதத்தில், திருப்புறம்பயம், உப்பூர் பிள்ளையார்பட்டி, குன்றக்குடி முதலான திருக்கோயில்களில் விநாயக மகா சதுர்த்தி விழாவும், ஐப்பசிமாதத்தில், திருச்சிக்கல், திருவாவினன்குடி, குன்றக்குடி, மதுரை, திருப்பரங்குன்றம் ஆகிய திருத்தலங்களில் ஸ்கந்த சஷ்டி விழாவும், திருக்கொள்ளம்பூதூரில் திருஞானசம்பந்தர் திருப்பதிகம்பாடி ஓடம் நடத்தியவிழாவும், கார்த்திகைமாதத்தில் திருவண்ணாமலை, திருவாலவாயாதியதிருத்தலங்கடோறும், சிவாலய, குகாலய, விஷ்ணுவாலயமாதியதேவாலயங்களிலெல்லாம்திருக்கார்த்திகைதீபவிழாவும், மார்கழிமாதத்தில், சிதம்பரம், திருவாரூர், திருப்பெருந்துறை, திருவுத்தரகோசமங்கையாதியதிருத்தலசிவாலயங்களில் திருவாதிரைவிழாவும், சீரங்கம், திருமெய்யம், அரியக்குடியாதியபெருமாள்கோயில்களில்வைகுண்டஏகாதசிவிழாவும், இம்மாதம் ௩௨ திருவிடைமருதூர், திருவாவினன்குடி, குன்றக்குடியாதிய திருத்தலங்களிலும், அயல் நாடுகளில் பினாங்கு, சிங்கப்பூர், ரெங்கோன், பாசியன், என்ஜ'-ா முதலான ஊர்களில், தனவணிக நகரத்தார்களுக்குச் சொந்தமாகவுள்ள சீர்க்குமரேசர் திருக்கோயில்களிலும் பூசத்திருவிழாவும் சிறப்பாக நடைபெற்று நிறைவேறின.

திருநள்ளாறு சிவாலயத்தில், ஸ்ரீ சனீஸ்வர பகவான் கும்பராசியிலிருந்து வக்கிர நிவர்த்தியாகி இம்மதி ௬௨ ௬-௨-௯-நாழிகையளவில் மீன ராசிக்கே விஜயமாவதால் அன்று அவருக்கு நடைபெறும் திருவிழாவைப் பக்தர்கள் தரிசித்துத் திலதீபமிட்டு இஷ்டசித்திகளை எய்திவாழ, தேவஸ்தானபரிபாலன சங்கத்தார் வேண்டுகின்றனர்.

சென்னை, சைவசமய பக்தஜனசபையில் கார்த்திகை ௩௨ ஆம் தீபோற்சவத்திலும், நான்கு சோமவாரங்களிலும் இரவு எழுமணிக்கு ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசருக்கு அலங்கார தூபதீப ஆராதனங்களும், ஸ்கந்தக் கடவுளாலயத்தில் சித்திரை முதல் நான்கு மாதங்களில், சைவ சமயாசாரியர்களுக்கு நடைபெற்ற உத்ஸவசம்பந்தமாக கார்த்திகை ௩௨ காலை, உத்ஸவ சாந்தி மகாபிஷேகாராதனங்களும், மாலை, திருவுலாவும் சபையாரால் செய்யப்பெற்றன.

திருச்செங்கோடு சிவாலயத்தில் ஆனித் திருமஞ்சன முதல் மார்கழித் திருவாதிரை வரை விழாக்கள் சிறப்பாக நடைபெற்றன. ஸ்ரீ சுகந்த குந்தளாம்பிகை சமேத கைலாசநாதர் கோயிலில், பிரபல நூல் வியாபாரி திருமுருகேச முதலியார் மின்சார விளக்குகள் போட்டு நடத்திவருகிறார். செங்கோட்டு வேலவர் ஸ்கந்தசஷ்டிப்பண்டிக்கு, பாலகிருஷ்ண சினிமாக்காரர் ஒருநாள்; பாமா பரிணயம்பேசும்படக்காட்சி இருமுறைநடத்திவருவாயை உதவினர். நாகதீர்த்தத்திற்கு, கொங்கணாபுரம் மிட்டா செங்கோட்டுவேல் கவுண்டர் ரூபா ஆயிரம் செலவிட்டுச்சுற்றுமதில் திருப்பணி புரிந்துளார். அர்த்தநாரீஸ்வரருக்கு, பாங்கர் T. S. வேங்கடாமணய்யார், ரூபா ஐயாயிரம் பெறுமதியுள்ள தங்கக்கவசமும், மூவாயிரம் பெறுமதியுள்ள இரத்தினாபரணங்களும் சாத்தியுள்ளார். சமயாசாரியர்களின் குருபூஜைகளும், ஆவணிமாதம்பூசநாளில் ஆதிசைவஇளைஞர்களால் நீலகண்ட சிவாசாரியர் குருபூஜையும், திருவுலாவும் செய்யப்பெற்றன.



ஸ்கந்த புராணபடனம்:— சேலம் குகை அம்பலவாண சுவாமி கோயிலில், ஆடி ௩௨ தொடங்கி தினம் மாலை இரண்டுமணிநேரம் பழநி, வைத்தியர் திரு, கு. சிவலிங்கம் பிள்ளை யவர்களால் ஸ்கந்த புராணப்படனம் நடைபெற்றது. அன்பர்கள் கேட்டின்புற்றனர்.

உக்கிரரத சாந்திகள்:— கோட்டையூர், சிவநேசத்திருவாளர், வெ. நா. இலக்குமணச் செட்டியா வர்களுக்கு ஆவணி ௨௨ உத்திரநாளில் அறுபதாண்டு நிறைவுவிழா, சிதம்பரம் மௌனசாமிகள் மடாலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. ௨௦௨ முதல் பல பெரியார்கள் விரிவுரைகள் நிகழ்த்தினர். உதாரமுள்ள இவர்களின் உத்தம குணங்களைப் பாராட்டி 'வாழும் வகை' என்னும் தலைப்புடன் ஜனமித்திரனில் சுவாமி சுத்தானந்த பாரதியாரவர்கள், அதிவிஸ்தாரமான நற்செய்தி விடுத்துள்ளார்கள்.

காரைக்குடி சிவநேசத்திருவாளர், கு. மெ. சொ. சொக்கலிங்கஞ் செட்டியாரவர்களுக்கு ௫௧-வது ஆண்டுநிறைவு, அறுபதாவதாண்டு ஆரம்ப விழா, கார்த்திகை௨௨ உத்திராடநாளில், திருவிடைமருதூரில், அறுபத்துமூவர் திருமடத்தில் நடைபெற்றது. அன்பர் பலர் முன்னின்று சிறப்பாக நடத்தி வைத்தனர். கிரமமாக நடைபெற்ற விவரங்களை மதுராந்தகம் சிவஸ்ரீ சுப்பிரமணியசிவாசாரியாரவர்களும், தேவகோட்டை பிரமஸ்ரீ நா. கிருஷ்ணசாஸ்திரியாரவர்களும் எழுதிப்பதித்துப் புத்தகமாக வெளியிட்டுள்ளார்கள்.

கழக விழாக்கள்:—தேவகோட்டை, விடுதலைக் கைதிகளின் உதவிச் சங்க விழா 8—8—37ல் டிப்டி கலெக்டர் ராவ் பஹதூர் மகா-ா-ா-ஸ்ரீ G. சுப்பா ரெட்டிகாரு தலைமையில் காரைக்குடி பென்சுக்கோர்ட்டுக் கட்டடத்திலும், மதுரை ஸ்ரீ வர்ணாச்சிரம ஸ்வராஜ்ய சங்கச்சார்பாக ஸநாதனிகளின் மகாநாடு, 13, 14, 15—8—37 உகளில் ஆத்தனகுடி, சிவநேசத் திருவாளர், சு. வீர. கதிரேசச்செட்டியாரவர்கள் தலைமையிலும், நாகை வெளிப்பாளையம், சைவ சித்தாந்த சபையின் நாற்பத்தொன்பதாவதாண்டு விழா, 12—8—37 முதல் நான்கு நாட்கள் திருவாளர்களான, சுப்பராயச் செட்டியார், சோமசுந்தரதேசிகர், சோமசுந்தரபாரதியார், பண்டிதமணி கதிரேசச்செட்டியார்ஆகியவர்கள் தலைமையிலும், தஞ்சை இராசராசன் சமய சங்கத்தில் ஐப்பசி ௩௨ சுவாதிநாளில்மெய்கண்டதேவர் தினக்கொண்டாட்டம், திரு. M. S. சிவராமபிள்ளையவர்களால் 'மெய்கண்டாரும், சிவஞானபோதமும்'என்றவிரிவுரையுடனும், கொழும்பு, தன வைசிய இளைஞர்சங்கத்தின் நான்காவதாண்டுநிறைவுவிழா, 31-10-37ல்உயர்திரு, விபுலானந்தசுவாமியவர்கள் தலைமையிலும், அகில இந்திய வர்ணாச்ரமஸ்வராஜ்ய 10-வது வருஷக்கொண்டாட்டம் 29, 30, 31—12—37உகளில், பாம்பே ஸ்ரீமான் சேத் தேவிதாஸ் மாதவஜி தாக்கர்ஸே அவர்கள் தலைமையில் சென்னை ராயப்பேட்டையிலும், சென்னை மாகாண பிராம்மண மஹாஸம்மேளனம் 30, 31—12—37உகளில் திருவனந்தபுரம் ரிட்டயர்டு திவான்பேஷ்கார் டாக்டர் N சுப்பிரமணிய ஐயரவர்கள் தலைமையிலும் மிக்கவிமரிசையாகப் பேரறிவாளர்களின் சீரிய விரிவுரைகளுடன் நடைபெற்றன.

அரசியற்செய்திகள்:- புதிய அரசியலார், சேலம்ஜில்லாவில், யாருமே கள், சாராய முதலிய குடித்தப்பாழாகாமல் மதுபானக் கடைகளை எடுத்து விட்டதும், மந்திரிகள் ஒவ்வொருவருக்கும் ஐஞ்ஞூறுரூபாசம்பளமேபோதுமெனத் தீர்மானித்துக்கொண்டதும், மற்றும் பெரிய உத்தியோகத்தர்களின் அதிகச் சம்பளங்களைக் குறைத்துக் கொள்ளவேண்டுமென்பதும் குடிகளுக்கும், அரசினர்க்கும் நன்மையே. ஒரு பக்கம் சமஸ்கிருதத்தாலும், மற்றொரு பக்கம் ஆங்கிலத்தாலும் நெருக்குண்டிருக்கும் தமிழை, தமிழ் நாட்டுக்கல்லூரிகளில் கட்டாயபாடமாக வைத்து வளர்ப்பதே தகுதியாயிருக்க, இந்தியைக் கட்டாயப்பாடமாக்கவேண்டுமென்பது தகுதியன்று. (சினிமா) படக்காட்சியால் மக்களிடமுள்ளகாசுபறிபடுகிறது. மானங் கெடுகிறது. அதைத் தடுக்கத் தகுந்த சட்டம் செய்யலாம்.

அனுதாபச் செய்திகள்:— அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்களவர்களின்தாயார், தங்கம்மாள் அவர்கள், ஆவணி உஉ அரன்திருவடியடைந்தனர். இவ்வம்மையார் சிவஸ்ரீ சுவாமிக்குருக்களவர்களின் மகளும், சிவஸ்ரீ சபாபதி குருக்களவர்களின் மனைவியுமாவர். நற்குலத்திற் பிறந்து, நல்ல குடித்தனம் நடத்தி, நன்மக்கட்பேறுபெற்ற நல்லம்மையாரின், ஆன்மா நம்பனடியிணை நீழலில் இளைப்பாறுக.

கண்டனூர், திருவாளர், தெ. அரு. சிதம். அருணசல ஐயா அவர்கள் ஆவணி கஉ அரன்திருவடி நிழலடைந்தனர். அறிவாற்றல் மிக்க இவர்களின் வயது எஉ. பொருளீட்டும் முறை தெரிந்து நியாயமான வழியில் பெரும் பொருளீட்டியவர்கள்; கல்வி கேள்விகளிற் சிறந்து விழுப்பந்தரும் ஒழுக்கமுடையவர்கள்; எல்லாருக்கும் நல்ல யோசனைகள் கூறும் இயல்புடையவர்கள்; நடுநிலையுடையவர்கள்; பெண்ணொருபாகனை பிரியாத கண்ணூர் கோயிலைக் கவின்பெறத்திருப்பணியாற்றி மஹா கும்பாபிடேகம் செய்து கண்டவர்கள்; தாம்பொருளீட்டித்தம்பியின் குடும்பத்திற்கும் பங்கு கொடுத்து வேண்டும் நன்மைகள் புரிந்தவர்கள். பெருமையிற் சிறந்து எனக்கினியராயிருந்த ஐயா அவர்களின் ஆன்மா இறைவர் திருவடி நிழலிற் கலந்தின்புறுவதாக. அவர்களின் நேரிய முறைகளை அவர்களின் அருமைத் தனயரும், பௌத்திரர்களும் போற்றி அவர்களின் பெரும் புகழும் நீடுநிலவச்செய்வார்களாக.

காரைக்குடி திருவாளர், பெரி. ஆ. அழ. அரு. அருணசலச் செட்டியாரவர்கள் மார்கழி உஉ சிவபதமெய்தினர். அறிவாற்றலுடையவர்கள்; நன்மக்கட்பேறுடையார். இவர்களின் மூத்தமகன், திரு. சோமசுந்தரம்செட்டியார்கல்வியிற்சிறந்த விற்பன்னர்; கல்லவித்துவான். 'தந்தை மகற் காற்றும் நன்றி அவையத்து, முந்தியிருப்பச் செயல்' என்ற குறளுக்கு இலக்கியமாகத்தனயரைச்சிறந்தஅறிவாளியாகச்செய்த அவர்களின் ஆன்மா இறைவர் திருவடி நீழலையடைந்து இன்புறுவதாகுக.

தேவகோட்டை, சிவநேசச் செல்வர், ராம. மெ. சித. வைரவன் செட்டியாரவர்கள், மார்கழி அஉ சிவபதமெய்தினர். மேலான தரும சிந்தையில் வந்தவர்; திருக்கோலக்காமுதலான சிவாலயத்திருப்பணிகள் புரிந்து சிவதரும பரிபாலனஞ் செய்த இவர்களின் ஆன்மா, சிவத்திற் கலந்தின்புறுவதாகுக. இவர்களின் அருமைத் தனயராகிய வாழிய இராமநாதர் எல்லா நலன்களும் பெற்றுப் பேர் விளங்கச் செய்வாராகுக.

---



கோநகர்:— திருவாளர், லெ. சித. ராம. இராமநாதன் செட்டியாரவர்கள், தம்மனைவியார், தம்மகன், மகன் மனைவி யாகியவர்களுடன் ஸ்ரீ காசி முதலான க்ஷேத்திர யாத்திரைகளும் தீர்த்தாடனங்களும் செய்து வந்துற்றார்கள்.

தாய்நாடு வருகிறார்:— ரெங்கோனில் தனவணிகன் பத்திராதிபராயிருந்த திருவாளர், அ. கரு. கருப்பன் செட்டியார் இரண்டு வருடங்களாகப் பல நாடுகளையும் சுற்றிக் கொழும்பு வந்து தாய்நாடுவருகிறார்.

தியாகராஜ விலாஸ மாதவெளியீடு:— சென்னை, மகாமகோபாத்தியாய டாக்டர், உயர்திரு, உ. வே. சாமிநாதையரவர்கள், திருவாரூர்க் கோவைப் பிரதி யொன்றை வெளியிட்டுள்ளார்கள். மாதவெளியீட்டுக்குப் போதிய கையொப்பக்காரர்கள் சேராமையால், அவர்கள் பதிப்பிக்கக்கருதியிருக்கும் பிரபந்தங்களை ஒன்றன்பின் ஒன்றாக நேரும் அமையங்களில் வெளியிடுவார்கள்.

கண்டாச்சிபுரம்:— ஆனி கசஉ சௌந்தரநாயகி சமேத இராமநாதேசுவரருக்கு மகா கும்பாபிஷேகமும், பெரிய புராணப்பிரசங்கமும், ஐம்பெருங்கடவுளர் திருவுலாவும், அப்பால் மண்டலாபிடேகமும், ஆரம்ப ஆசிரியர் சங்கம், பெற்றோர் சங்கங்களின் விழாக்களும், ஆனி உகஉமுதல் நடுவீதி வாசித்திவிநாயகாலய முகப்பில், சச்சிதானந்த வள்ளலார்தினம் திரு. ச. சிவஸ்வாமி தேசிகரவர்களால், கந்த புராண பிரசங்கமும் நன்கு நடைபெற்றன.

கண்டமாணிக்கம்:— திருவாளர், பெரி. பெரி. சுப. நாராயணன் செட்டியாரவர்களின் ஹையர் எலிமெண்டரி ஸ்கூல் புதிய கட்டிடத் திறப்புவிழா, ஐப்பசி கoஉ சிறப்பாக நடைபெற்றது.

அளகாபுரி:— ஸ்ரீ அழகிய நாச்சியாருக்கு, திருவாளர், அ. சித. நா. நாகப்பசெட்டியார்செய்த, வெள்ளிச்சிம்ம வாகனமும், வெள்ளிப்பல்லக்கும், தேரும் ஐப்பசி உகஉ வெள்ளோட்டமாகி, அம்பிகை கoஉ முற்பகல், பல்லக்கிலும், இரவு, சிம்ம வாகனத்திலும் திருவுலாவந்தருளினள்.

குருபூஜைகள்:— போத்தனூர் வேலூர் குருபூஜை மடத்தில் இவ்வாண்டு ஞானசம்பந்தர்குருபூஜைஎன்னயமாகநடைபெற்றவாறே, எல்லாக் குரு பூஜைகளும் நன்றே நடைபெற அன்பர்கள் வேண்டுகின்றனர்.

துழாவூர். கிரமப் வழியாதீன மடாலயத்தில் மெய்கண்டார் மரபிற்றோன்றிய, சேதுமான்மிய புராண விகசித நிரம்ப வழகிய தேசிக சுவாமிகளுக்கு, புரட்டாசி கூஉ பிரதமையில் மகா குரு பூஜை, மங்களாம்பிகா சமேத வாஞ்சீஸ்வரருக்கு மகாபிடேகாராதனைகளும், மகேஸ்வர பூஜையும், இரவு மடாதிபதிகள் சிவிகாரோகணத்திருவுலாவும், தியாகராஜ வடிவக்கொலுக்காட்சியும் நடைபெற்று நிறைவேறியது. மதுரை, யோகானந்த சுவாமிகள் மடாலயத்தில், கோவிந்த நம்பூதிரி, ஞானதேசிக சுவாமியவர்களின் கூஉவது குருபூஜை ஐப்பசி கoஉ நன்கு நடைபெற்றது.

வேதாரணியம்:— ஸ்ரீவேதநாயகி சமேத ஸ்ரீ வித்தியேசுவரர் திருக்கோயில் செங்கற் கட்டிடமாய் மிகப் பழமையாயிருந்ததை வேதாரணியம் சாதுக்கள் மடாதிபதி, பசுமடம் கந்தசாமி சுவாமிகள் கருங்கற்றிருப்பணி செய்ய விரும்பி சுமார் ரூ. ௨௰௲ வரை செலவு செய்து அஸ்திவாரம் அமைத்தார்கள். அதன் பின் ஷை சுவாமிகள் முயற்சியில் ஒக்கூர், திருவாளர்களான, இ. க. அரு. கரு. கருப்பன் செட்டியாரவர்கள் ரூ. ௭௰௲ வரை செலவு செய்தும், வீர. ராம. நா. ராம இராமநாதன் செட்டியாரவர்கள் ரூ. ௭௰௲ வரை செலவு செய்தும் திருப்பணியைப் பூர்த்தி செய்து மகா கும்பாபிஷேகத்தை ஆவணி ௩௨ உ புனர்பூச நாள் சிம்ம லக்ன நன் முகூர்த்தத்தில் சிறப்பாக நடத்தினார்கள். தேவகோட்டை சிவப்பணிச் செல்வர், இ. அ. சு. அ (திருச்சுழியல்) சுப்பிரமணியன் செட்டியாரவர்கள் பல சிவாலயங்களில் யாக சாலை நிர்வகத்தை மேற்கொண்டு, சிவாகம நூல் பல ஆய்ந்து ஆராய்ச்சியில் வல்ல ஆதி சைவ சிவாசாரியர்களையும் அளவளாவி யாக சாலை, குண்டங்கள் அமைப்பதிலும், இன்ன இன்ன மூர்த்திகளின் கும்பங்களைச் சேர்த்து வைத்துப்பூசிக்கலாமென்பதிலும், கும்பாபிஷேகக்கிரியைகளின் முறை பலவற்றிலும் மிகத்தேர்ச்சியுற்று, சுவாமி முதலிய மூர்த்திகளைப் பூசிப்பதற்குத் தக்கார் இவர் என ஆதி சைவ சிவாசாரியர்களை நியமனஞ்செய்து, காலந்தோறும் யாகசாலையிற் கும்ப பூஜைகளைச் செவ்வனே நடைபெறச்செய்து கும்பாபிஷேகம் நடத்துவதிலும், சிவநேசச்செல்வர்களுக்கு ௬௰, ௭௰ வது ஆண்டுகளில் நடைபெறும் உக்கிர ரத சாந்தி, சஷ்டியப்த பூர்த்தி சாந்திகளைச் சிவாகம விதிப்படி நடத்தி வைப்பதிலும் அதிசமர்த்தர் எனக்கண்டும் கேட்டும் இவர்கள்பாற் பேரன்பு கொண்டு ஒக்கூர் சிவபத்திமான் திருப்பணிச்செல்வர் எழகப்பெருந்திருவான வீரபாண்டியபுரத்தில் சிறுகுளத்தாருடையாராகிய வீர. ராம. நா. ராம. இராமநாதன் செட்டியாரவர்கள் மூன்று மாதங்கட்கு முன்னதாகவே இம்மாபெருஞ் சாந்தியை வந்திருந்து சிறப்பாக நடத்தி வைக்கவேண்டுமென்றதற்கிணங்கி ஒரு மாதகாலம் வேதாரணியத்திலிருந்து வேண்டும் திட்டங்கள் செய்து சிவாகம விற்பன்ன சிலர்களாகிய ஆதிசைவ சிவாசாரியர்கள் பலரையும் வருவித்துக் கும்பாபிஷேகத்திற்கு முக்கியாங்கமாயுள்ள விசேஷசந்தியைக் காலை மாலை இரண்டு நேரங்களிலும் செய்வித்து நானாவித ஆடம்பரங்களுடன் அழைத்து வந்து காலந்தோறும் யாகபூஜையை ஒழுங்காக நடைபெறச் செய்து மகா கும்பாபிஷேகமும் குறித்த காலத்தில் சிறப்பாக நடத்தினார்கள். சைவசமய விரிவுரைகளும் நாதகீத பாத நாட்டியங்களும் நடைபெற்றன. ஐம்பெருங் கடவுளர் திருவுலாப் போந்தருளினர்.

இக்கும்பாபிஷேக நிர்வாக மேற்கொண்டு சிவாகம விதிப்படி நடத்திய செட்டியாரவர்களுக்கும் திருப்பணியாளர்களுக்கும் ஸ்ரீவேதநாயகிசமேத ஸ்ரீ வித்தியேசுவரர் எல்லா நலன்களையும் தந்து திருவருள் புரிவாராக.

யாழ்ப்பாணம் வரணி ஆதீனம், வேதாரணியம் தேவஸ்தானம், மானேஜிங் டிரஸ்டி ஸ்ரீலஸ்ரீ ஸம். சுப்பிரமணிய பண்டார சந்நிதியவர்கள் திருவாளர், சுப்பிரமணியன் செட்டியாரவர்களுக்குப் பரிவட்டம் கட்டியும், திருப்பணியாளர், இராமநாதன் செட்டியாரவர்களுக்கு பல அரிய பெரிய வித்துவான்களுடை சூழப் பெரியதோர் சால்வையை வித்துவத் மரியாதை செய்தும், வேதநாயகியம்பாள் சந்நிதியில் பரிவட்டங் கட்டியும், திருப்பிரசாதம் வழங்கி [illegible] கூறியும் மகிழ்வூட்டினர்.

1898

## [illegible] சய த்திரட்டு.

உள்ளூர்:— [illegible]வநேசன் அச்சியந்திரசாலையும், பத்திரிகாலயமும் இவண் [illegible] நடைபெறுகின்றன. [illegible] வழக்கம் போல் ஆவணி விநாயகசதுர்த்தி, புரட்டாதியில் நவராத்திரி, ஐப்பசியில் ஸ்கந்தசஷ்டி, பௌர்ணமி அன்னாபிஷேகம், கார்த்திகையில் சோமவாரங்கள், திருக்கார்த்திகை, மார்கழியில் திருவாதிரையாகிய திருநாட் சிறப்புகள் பல உபயகாரர்களால் மார்கழியில் முப்பது நாளும் தனுர்பூஜை குளமங்கலம் திரு. சுவியப்பிள்ளை [illegible] செய்யப்பெற்றன. சிவாலயத் திருப்பணி நடைபெறுகிறது. [illegible]வநேசன் இராமசாமிசெட்டியார் இவ்வாண்டுத்தொடக்கமுதல் இங்கு நிவாசமாக வந்திருந்து, சிவாலயத் திருப்பணியையும் [illegible]நேசன் [illegible]ரியத்தையும் நடத்திவருகிறார். சிவசந்நிதித் திருக்குளத்தை சுத்தஞ் வைத்துப்பாதுகாக்கும் நிமித்தம் மற்றைப் புழக்கங்களுக்காக அதற்கு மேற்கே கு-மூழ்வீடு போட்டு அதன் தென்பாற்குளமொன்றுந்திக[illegible] [illegible]கூர்த்தம் செய்து தோண்டப் பெறுகிறது.

உயர்திரு, சச்சிதானந்த சுவாமியவர்கள் தங்களின் பூஜா மூர்த்திகளை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு [illegible]ர்த்திகைமாதத்தில் கொரடாச்சேரிக்குப்போய் சித்தாந்த நிலையத்தில் இருக்கின்றார்கள்.

நவநீத கிருஷ்ணப் பெருமாள் கோவிலுக்கு பிரம்மஸ்ரீ சருக்கை R. வரதாச்சாரியார், தருமகர்த்தாவாக நியமனம் செய்யப்பெற்றுள்ளார்கள்.

பலவான்குடி:— குமாரவிநாயகர் திருக்கோயிலில் ஆவணிமாதம் விநாயக மகாசதுர்த்தியும், ஆவணி [illegible]ரட்டாதி மா[illegible] வளர்பிறைச் சதுர்த்தசிகளில் நடராஜாபிடேகமும் கார்த்திகைமாதத்தில் திருக்கார்த்திகை விளக்கீடும், மார்கழிமாதம் திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை பூஜை, திருவாதிரை தெரிசனமும் சிறப்பாக செய்யப்பெறன.

திருவாசகபாடசாலையில் உர்திரு, மாணிக்கசுவாமியவர்கள், கார்த்திகையீ ௩௨ முதல் திருக்கூட்டம் [illegible]வாக நீற்றுக்கின்றார்கள்.

ஆதிகுருமூர்த்தியாகிய உர்திரு, கோவிந்தசிசுவாமிகளின் நல்லடியாராய், குணப்பெருங்குன்றமாய்ச் சிவபக்தி அடியார்களிற் சிறந்து விளங்கிய உயர்திரு, சொக்கலிங்க சுவாமிகள் மார்கழித்திங்கள் ௩௨-ம் நாள், குருவாரம், கேட்டைமீன் கூடிய இன்று இராத்திரி ௭ நாழிகை யளவில் இறைபர சிவத்தோடிரண்டறக் கலந்து பேரின்ப மெய்தினர். அந்தமில் ஞானியாகிய அவர்தம் திருவுடல் களப்பிறப்பவில் சற்குருநாதன் சந்நிதானத்தில் நந்திபீடத்தின் கீழ் சமாதிசெய்து வைக்கப்பெற்றுளது. அப்பெரியார் வீடுபேறடைந்த பதினாம் நாளாகிய, [illegible] வீடுபேற்றின் விளக்குவிழாக் கொண்டாடப்பெற்றது. சிவஞானப் பெருஞ்செல்வர்களாகிய பெரியார்களும் அன்பர்களும் வந்திருந்து சீர்பெற நடத்தி வைத்தனர்.

நகர சிவாலயத்தில் ஆவணியில் விநாயகமகாசதுர்த்தியும், புரட்டாதி மாதம் நவராத்திரி, விஜயதசமிகளும் ஐப்பசி மாதம் [illegible] நாட்களில் சுவாமி தேனாற்றுக்கெழுந்தருளி தீர்த்தவாரியும், பௌர்ணமியில் அன்னாபிடேகமும், கார்த்திகை மாதத்தில் சோமவாரங்களும், திருக்கார்த்திகை விளக்கீடும், மார்கழிமாதத்தில் தனுர்பூஜையும், திருவாதிரைத்தெரிசனமும் சிறப்பாகச்செய்யப்பெற்றன.

# சமயத் திரட்டு.

உள்ளூர்:— ஆவணி முதல் வேசன் அச்சியந்திரசாலையும், பத்திரிகாலயமும் இவண் நிறுவப்பெற்று நடைபெறுகின்றன. சிவாலயத்தில் வழக்கம் போல் ஆவணி விநாயகசதுர்த்தி, புரட்டாசியில் நவராத்திரி, ஐப்பசியில் ஸ்கந்தசஷ்டி, பௌர்ணமி அன்னாபிஷேகம், கார்த்திகையில் சோமவாரங்கள், திருக்கார்த்திகை, மார்கழியில் திருவாதிரையாகிய திருநாட் சிறப்புகள் பல உபயகாரர்களால், மார்கழியில் முப்பது நாளும் தனுர்பூஜை குளமங்கலம் திரு. சுவியப்பிள்ளை அவர்களாலும் செய்யப்பெற்றன. சிவாலயத் திருப்பணி நடைபெறுகிறது. வேசன் இராமசாமிசெட்டியார் இவ்வாண்டுத் தொடக்கமுதல் இங்கு திவாசமாக வந்திருந்து, சிவாலயத் திருப்பணியையும் வேசன் பத்திரிகையையும் நடத்திவருகிறார். சிவசந்நிதித் திருக்குளத்தை சுத்தஞ் செய்து வைப்பதற்காக்கும் நிமித்தம் மற்றைப் புழக்கங்களுக்காக அதற்குத் தெற்கே கருங்கல் வேலி போட்டு அதன் தென்பாற் குளமொன்றுக்குத் திருவுளக் கூர்த்தம் செய்து தோண்டப் பெறுகிறது.

உயர்திரு, சச்சிதானந்த சுவாமியவர்கள் தங்களின் பூஜா மூர்த்திகளை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு கார்த்திகைமாதத்தில் கொரடாச்சேரிக்குப்போய் சித்தாந்த நிலையத்தில் இருக்கின்றார்கள்.

நவநீத கிருஷ்ணப் பெருமாள் கோயிலுக்கு பிரம்மஸ்ரீ சருக்கை R. வரதாச்சாரியார், தருமகர்த்தாவாக நியமனம் செய்யப்பெற்றுள்ளார்கள்.

பலவான்குடி:— குமாரவிநாயகர் திருக்கோயிலில் ஆவணிமாதம் விநாயக மகாசதுர்த்தியும், ஆவணி புரட்டாசி மாத வளர்பிறைச் சதுர்த்திகளில் நடராஜாபிஷேகமும், கார்த்திகைமாதத்தில், திருக்கார்த்திகை விளக்கீடும், மார்கழிமாதம் திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை பூஜை, திருவாதிரை தெரிசனமும் சிறப்பாக செய்யப்பெற்றன.

திருவாசகபாடசாலையில் உயர்திரு, மாணிக்கசுவாமியவர்கள், கார்த்திகையில் கந்தபுராணம் முதல் திருக்கூட்டத்திலுள்ளார்க்கு விரித்துரைக்கின்றார்கள்.

ஆதிகுருமூர்த்தியாகிய உயர்திரு, கோவிந்தசிவசுவாமிகளின் நல்லடியாராய், குணப்பெருங்குன்றமாய், சிவபக்தி அடியார்களிற் சிறந்து விளங்கிய உயர்திரு, சொக்கலிங்க சுவாமிகள் மார்கழித்திங்கள் கக-ம் நாள், குருவாரம், கேட்டைமீன் கூடிய திங்கள் இராத்திரி ஏழு நாழிகை யளவில் இறைப்பர சிவத்தோடிரண்டறக் கலந்து பேரின்ப மடைந்தினர். அந்தமில் ஞானியாகிய அவர்தம் திருவுடல் கடைபிறப்பகலில் சற்குருநாதன் சந்நிதானத்தில் நந்திபீடத்தின்கீழ் சமாதிசெய்து வைக்கப்பெற்றுளது. அப்பெரியார் வீடுபேறடைந்த பத்தாம் நாளாகிய, உவர் வீடுபேற்றின் விளக்குவிழாக் கொண்டாடப்பெற்றது. சிவஞானப் பெருஞ்செல்வர்களாகிய பெரியார்களும் அன்பர்களும் வந்திருந்து சீர்பெற நடத்தி வைத்தனர்.

நகர சிவாலயத்தில் ஆவணியில் விநாயகமகாசதுர்த்தியும், புரட்டாசி மாதம் நவராத்திரி, விஜயதசமிகளும் ஐப்பசி மாதம் கந்தசஷ்டிகளில் சுவாமி தேனாற்றுக்கெழுந்தருளி தீர்த்தவாரியும், பௌர்ணமியில் அன்னாபிஷேகமும், கார்த்திகை மாதத்தில் சோமவாரங்களும், திருக்கார்த்திகை விளக்கீடும், மார்கழிமாதத்தில் தனுர்பூஜையும், திருவாதிரைத்தெரிசனமும் சிறப்பாகச்செய்யப்பெற்றன.